கந்தர் அலங்காரம்
முன்னுரை

சந்தக் கவிஞர் அருணகிரி நாதர் சற்றேறக் குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். இவர் தமது இளமையில் மூவாசைகளுக்கு ஆளாகிக் காம வசப்பட்டு, நெறி தவறி வாழ்ந்து, பிணி உற்று, உயிரை மாய்த்துக் கொள்ளும் தருணத்தில் முருகப் பெருமானின் அருள் பெற்றார். அன்று முதல் அவர் முருக வேளையே மூல முழுமுதற் பொருளாகக் கருதி, இலக்கியச் சுவையும், பக்திப் பெருக்கும், சந்த நுணக்கமும் நிறைந்த பாக்களால் போற்றித் துதித்து வந்தார். இவருடைய சந்தப் பாக்களில் பொதிந்த தத்துவக் கருத்துக்களை இவர் இயற்றிய கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருப்புகழ், திருவகுப்பு, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் முதலிய நூல்களில் காணலாம்.

இந்த அரிய நூல்களைப் படிக்கப் பலருக்கு ஆர்வம் இருப்பினும், உலகில் பல பாகங்களில் வாழும் தமிழ் அன்பர்களுக்கு இந்நூல்கள் எளிதில் கிட்டுவது இல்லை. மேலும், மேலை நாடுகளில் வாழும் தமிழ் விஞ்ஞானிகள், தொழில் நுட்ப நிபுணர்கள் முதலானோர்க்கு நூல் நிலையங்களிலும் இத்தகைய நூல்கள் கிடைப்பது அரிது. இந்தக் குறையைப் போக்கவும், அனைவரும் இந்நூல்களைப் படித்துப் பயன் பெறவும், அவற்றைக் கணினியில் மின் பதிப்பு முறையில் இணையத்தின் மூலம் வெளியிடுவது நலம் என்று கருதி இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளோம். இங்ஙனம் மின் பதிப்பு மூலம் வெளியிடப்பட்ட கந்தர் அனுபூதி என்ற நூலைப் படித்த நண்பர்கள் கொடுத்த ஊக்கத்தால், அடுத்து கந்தர் அலங்காரம் என்ற நூலையும் இதே முறையில் வெளியிட முன் வந்துள்ளோம்.

அருணகிரி நாதரின் இலக்கியப் படைப்புகளை, உரை, விளக்கத்துடன், டாக்டர் வ. சு. செங்கல்வராயன், முருகவேள் பன்னிரு திருமுறை என்ற தலைப்பில் எழுதியுளள்ளார். இந்த நூலைத் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் நான்கு தொகுதிளாக வெளியிட்டிருக்கின்றார்கள். இந்தப் பதிப்பில் கந்தர் அலங்காரம் நான்காவது தொகுதியில் எட்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அருணகிரி நாதர் இயற்றி அருளிய கந்தர் அலங்காரம் என்ற நூலை, நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற திருமூலர் வாக்குப்படி, பலரும் படித்து இன்புற வேண்டும் என்னும் நோக்கத்துடன், ஒரு மின் பதிப்பாக இப்போது வழங்குகிறோம்.

இப்பதிப்பில் வரும் உரை, விளக்கப் பகுதிகளில், டாக்டர் செங்கல்வராயனின் இலக்கியக் கருத்துக்களும், சைவ சித்தாந்தக் கொள்கைகளும் கையாளப்பட்டுள்ளன. **பதம் பிரித்தல்** என்ற பகுதி பாக்களின் பொருள் எளிமையில் விளங்கும் பொருட்டுப் புகுத்தப்பட்டுள்ளது. பிழைகள் இருப்பின் அவற்றைத் தயவு செய்து எங்கள் கவனத்துக்குக் கொண்டு வருமாறு வேண்டுகிறோம்.

க.ரா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் ப. ரத்தனசுவாமி
வான்கூவர், கனடா.

Dr.C.R. Krishnamurti, Ph.D., Professor Emeritus, University of British Columbia, Vancouver, B.C. Canada **and**
Dr. P.Rathanaswami, Ph.D., Director, Thamizh Cultural Society of British Columbia, Vancouver, B.C. Canada**.**
We would appreciate your comments.
(crkrishn@interchange.ubc.ca)

முருகவேள் பன்னிரு திருமுறை
(எட்டாந் திருமுறை)

கந்தர் அலங்காரம்

பாகம் 1 - பாடல் 1 - 25 3
பாகம் 2 - பாடல் 26-50 25
பாகம் 3 - பாடல் 51 - 80 45
பாகம் 4 - பாடல் 81 - 100 72
நூற்பயன் 88

முருகவேள் பன்னிரு திருமுறை
(எட்டாந் திருமுறை)

கந்தர் அலங்காரம்

பாகம் 1 - பாடல் 1 - 25

காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையில்
தடப டெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

பதம் பிரித்தல்

அடல் அருணை திரு கோபுரத்தே அந்த வாயிலுக்கு
வட அருகில் சென்று கண்டு கொண்டேன் வருவார் தலையில்
தடபட எனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கிய கை
கடதட கும்ப களிற்றுக்கு இளைய களிற்றினையே.

பத உரை

வருவார் = தன்னைவந்து வணங்குபவர்கள். தலையில் = தமது தலையில் . தட பட எனப்படு = தட பட என்று ஒலிக்கும்படி. குட்டுடன் = குட்டிக் கொண்டு. சர்க்கரை மொக்கிய = சர்க்கரையை வாரி உண்கின்ற. கை = துதிக்கையை உடையவரும். கட தடம் = மதம் பொழியும் இடமான. கும்பம் = மத்தகத்தை உடையவருமான. களிற்றுக்கு = யானை முகம் உடைய கணபதிக்கு. இளைய = தம்பியான. களிற்றினை = இனியவராகிய முருகப் பெருமானை. அடல் = வலிமை வாய்ந்ததும். அருணை = திருவண்ணாமலையில் இருப்பதுமான. திரு கோபுரத்தே = அழகிய கோபுரத்தில். அந்த = வாயிலுக்கு = யார்க்கும் நன்கு விளங்கும் வாசலுக்கு. வட அருகில் = வடக்குப் பக்கத்தில். சென்று கண்டு கொண்டேன் = சமீபத்தில் போய் நான் தரிசிக்கப் பெற்றேன்.

சுருக்க உரை

கோயிலுக்கு வரும் அடியார்கள் தலையில் குட்டிக்கொண்டு அளிக்கும் சர்க்கரையை வாரி உண்ணும் துதிக்கையும் மதம் பொழியும் மத்தகத்தை உடையவரும் ஆகிய கணபதியின் தம்பியாகிய இனியவரான முருகனைத் திருவண்ணாமலையில் வட கோபுரத்தின் அருகே நான் தரிசிக்கப் பெற்றேன்.

விளக்கக் குறிப்புகள்

அ. அடலருணைத் திருக் கோபுரத்தே....
(அருணை யிறையவர்பெ ரியகோபுரத்தில்
வடபாலமர்ந்த அறுமுகப் பெருமாளே) --- திருப்புகழ் (இரதசுரதமுலை)
(ஆடகச் சித்ரமணிக் கோபுரத் துத்தரதிக்
காகவெற் றிக்கலபக் கற்கி யமர்வோனே)--- திருப்புகழ் (போககற்பக்க)
ஆ. வட வருகில் சென்று கண்டு கொண்டேன்.....
அருணையில் வடகோபுரத்து அருகில் இருக்கும் முருகப் பெருமாளே அருணகிரி நாதருக்கு முத்தைத்தரு என்னும் திருப்புகழ் அடியை எடுத்துக் கொடுத்தவர்.

நூல்

1.
பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழியவழி விட்டவா செஞ்சடா டவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமரன்க்ரு பாகரனே.

பதம் பிரித்தல்

பேற்றை தவம் சற்றும் இல்லாத என்னை ப்ரபஞ்சம் என்னும்
சேற்றை கழிய வழி விட்டவா செஞ்சடா அடவி மேல்
ஆற்றை பணியை இதழியை தும்பையை அம்புலியின்
கீற்றை புனைந்த பெருமான் குமரன் க்ருபாகரனே.

பத உரை

செம் = சிவந்த. சடா அடவி = சடைக் காட்டின் மேல். ஆற்றை = கங்கை நதியையும். பணியை = பாம்பையும். இதழியை = கொன்றையையும். தும்பையை = தும்பை மலரையும். அம்புலியின் கீற்றை = பிறைச் சந்திரனையும். புனைந்த பெருமான் = சூடியுள்ள சிவபெருமானது. குமரன் = குமரனே. க்ருபாகரனே = கருணைக்கு இருப்பிடமான மூர்த்தியாகிய முருகனே. பேறு = நல்ல பாக்கியம். தவம் = தவ ஒழுக்கம். சற்றும் இல்லாத என்னை = இவை கொஞ்சமேனும் இல்லாத என்னை. ப்ரபஞ்சம் என்னும் சேற்றை = உலக மாயை எனப்படும் சேற்றை. கழிய = தாண்டிச் செல்ல. வழி விட்டவா = வழி காட்டிய திருவருள் வியக்கத் தக்கதே.

சுருக்க உரை

கங்கை, பாம்பு, கொன்றை, தும்பை, இளம் பிறை ஆகியவற்றைச் சிவந்த சடையில் தரித்த சிவபெருமானின் குமாரனே. கருணை மூர்த்தியே. நல்ல பாக்கியமும் தவ ஒழுக்கமும் இல்லாத என்னை உலக மாயையாகிய சேற்றிலிருந்து தாண்டிச் செல்ல வழி காட்டியவனே. உன் திருவருள் வியக்கத் தக்கதே.

விளக்கக் குறிப்புகள்

அ. வழி விட்டவா....
வழி விட்ட ஆற்றினை எங்ஙனம் கூறி வியப்பேன் என்று அருணகிரி நாதர் கந்தர் அலங்காரத்தில் பல இடங்களில் பலவாறு கூறி வியந்திருக்கிறார். .
தெளிய விளம்பியவா (பாடல் 8), கூறவற்றோ (பாடல் 9), எனை விட்டவா (பாடல் 10), போதித்தவா (பாடல் 61), தொண்டரில் கூட்டியவா (பாடல் 100).
(பிமரங் கெடமெய்ப்பொருள் பேசியவா)--- கந்தர் அனுபூதி 8.
ஆ. ப்ரபஞ்சமென்னும் சேற்றை....
நிலம், நீர், தீ, வாளி, வான் ஆகிய ஐந்து பூதங்களாலாகிய இவ்வுலகு.

2.
அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன்கவி யையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரிமூண் டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

பதம் பிரித்தல்

அழித்து பிறக்க ஒட்டா அயில் வேலன் கவியை அன்பால்
எழுத்து பிழை அற கற்கின்றிலீர் எரி மூண்டது என்ன
விழித்து புகை எழ பொங்கும் வெம் கூற்றன் விடும் கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கும் அன்றோ கவி கற்கின்றதே.

பத உரை

அழித்து பிறக்க ஒட்டா = (பிறவிக்கு ஏதுவான) பற்றை ஒழித்து. பிறக்க ஒட்டா = பிறவா வகையில் காக்க வல்ல. அயில் வேலன் = கூரிய வேலை ஏந்திய முருகவேளின். கவியை = திருப்புகழை. அன்பால் = அன்புடன். எழுத்துப் பிழை அறக் கற்கின்றிலீர் = எழுத்துப் பிழை இல்லாமல் ஓதுவது இல்லை. எரி மூண்டது

என்ன = தீப் பொறி எழுவது போல. விழித்துப் புகை எழ = கண்களில் புகை எழ. பொங்கு வெம் கூற்றன் = கோபித்து வருகின்ற யமன். விடும் கயிற்றால் = வீசுகின்ற பாசக் கயிற்றால். கழுத்தில் சுருக்கிட்டு = கழுத்தில் சுருக்கு மாட்டி. இழுக்கும் அன்றோ = இழுத்துப் போகும் அந்தத் தினத்திலா. கவி கற்கின்றதே = முருகன் மீது தோத்திரப் பாக்களைக் கற்று ஓதப் போகின்றீர்கள் ?

சுருக்க உரை

(உலகோரே) அகப்பற்று புறப்பற்று ஆகியவைகளை அழித்து, இனிப் பிறவி வராமல் தடுக்க வல்ல கூரிய வேல் ஏந்திய முருகவேளின் திருப்புகழை அன்புடன் இலக்கணப் பிழை இன்றி நாள் தோறும் ஓதாமல், யமன் கழுத்தில் கயிற்றை வீசும் அந்நாளிலோ அந்தப் பாக்களை ஓதப்போகின்றீர்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. அழித்துப் பிறக்க ஒட்டா...
(இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு) ---- திருக் குறள் 5.
ஆ. பிழை அறக் கற்கின்றிலீர்.....
(நீரில் எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே வழுத்தாத தெம்பிரான் மன்று) -- நீதிநெறி 1.
இன்று கொல் அன்று கொல் என்றுகொல் என்னாது பின்றையே நின்றது கூற்றம் என்று மனதில் கொண்டு இறைவனைத் துதித்தல் வேண்டும். இந்தப் பாடலில் தமிழுக்கே உரிய சிறப்பு எழுத்துக்களாகிய ழகரம் 7 முறைகளும், றகரம் 13 முறைகளும் வந்துள்ளன.

3.
தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகநெளிந் தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம்பிழைத் ததுவே.

பதம் பிரித்தல்

தேரணி இட்டு புரம் எரித்தான் மகன் செம் கையில் வேல்
கூர் அணி இட்டு அணுவாகி கிரௌஞ்சம் குலைந்து அரக்கர்
நேரணி இட்டு வளைந்த கடகம் நெளிந்தது சூர்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

பத உரை

தேரணி இட்டு = (தேவர்களையே) ஒரு தேராக அலங்கரித்து. புரம் எரித்தான் மகன் = திரி புரங்களை எரித்த சிவபெருமானின் மகனாகிய குமர வேள். செம் கையில் வேல் = செவ்விய திருக்கரத்தில் உள்ள வேலின். கூர் = கூரிய பாகம். அணி இட்டு = படை வகுத்தது போல் அமைந்து. அணுவாகி = அணுவை அசைப்பது போல் ஆற்றல் அமைந்த காரணத்தால். கிரௌஞ்சம் = கிரௌஞ்ச மலை (மாயை). குலைந்து = அழிபட்டு. அரக்கர் = அரக்கர்களின். நேர் அணியிட்டு = ஒழுங்காகப் படை வகுக்கப்பட்டுச் சூழ்ந்த. கடகம் = சேனை (கன்மம்). நெளிந்தது = கெட்டு நிலை குலைந்தது. சூர் = சூரனுடைய (ஆணவம). பேரணி = சேனையின் பின் அணியும் (பின்னர் மீண்டும் வந்த படையும். கெட்டது = சிதறி அழிந்தது. தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே = இந்திர லோகம் பிழைத்தது.

சுருக்க உரை

தேவர்களையே தேராக அலங்கரித்து திரி புரம் எரித்த சிவபெருமானுடைய மகனாகிய குமரன் தன்னுடைய கூரிய வேலாயுதத்தால் கிரௌஞ்சி மலை அணுவாகி அழிபடவும், அரக்கர்களுடைய சேனை நிலை குலைந்து போகவும் அழித்ததால் தேவர்கள் உலகம் பிழைத்தது (என்னே உன்னுடைய வேலின் வலிமை).

விளக்கக் குறிப்புகள்

அ. புரமெரித்தான் மகன்.....
(அரிய திரிப்புர மெரிய விழித்தவன்...)---- திருப்புகழ் (குருவியெனப்பல)
ஆ. கிரௌவுஞ்சம் குலைந்து அரக்கர் நேரணி....
(கிரௌஞ்ச மலை மாயையாகவும், அசுரர்கள் சேனைகள், கன்மமாகவும், சூரன் ஆணவமாகவும் உருவகப் படுத்தப் பட்டு உள்ளன. இவை மும்மலங்களை உணர்த்துவன.)

4.
ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

பதம் பிரித்தல்
ஓர ஒட்டார் ஒன்றை உன்ன ஒட்டார் மலர் இட்டு உன தாள்
சேர ஒட்டார் ஐவர் செய்வது என் யான் சென்று தேவர் உய்ய
சோர நிட்டூரனை சூரனை கார் உடல் சோரி கக்க
கூர கட்டாரி இட்டு ஓர் இமை போதினில் கொன்றவனே.
பத உரை
ஐவர் = மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும். ஒன்றை ஓர விட்டார் = உண்மைப் பொருளை ஆய்வதற்கு விடுவது இல்லை. உன்ன ஒட்டார் = உன்னைச் சிந்திக்கவும் விடுவதில்லை. மலர் இட்டு உன தாள் சேர ஒட்டார் = மலர்களைத் தூவி உன் திருவடிளைப் பூசிக்க விடுவதும் இல்லை. யான் செய்வது என் = நான் என் செய்யக் கடவேன் என்று தெரியவில்லை.

தேவர் உய்ய சென்று = தேவர்கள் பிழைக்க வேண்டி போருக்கு எழுந்து சென்று. சோர நிட்டூரனை = வஞ்சனையும் கொடுமையும் உள்ள சூரனுடைய. கார் உடல் = கரிய உடலிலிருந்து. சோரி கக்க = இரத்தம் சொறிய. கூர கட்டாரி இட்டு = கூர்மை உள்ள வேலைச் செலுத்தி. ஓர் இமைப் பொழுதினில் கொன்றவனே = ஒரு நொடியில் அவனைக் கொன்றவனே.
சுருக்க உரை
தேவர்கள் பிழைக்கும்படி வஞ்சகம் நிறைந்த சூரனுடைய உடல் இரத்தம் கக்க வேலை எய்தவனே. என்னுடைய ஐம்புலன்களும் உண்மைப் பொருளை ஆயவும், உனது திருவடிகளில் மலரைத் தூவித் துதிக்கவும் தடையாக இருக்கின்றன. நான் என்ன செய்வது? உபதேசித்து அருளுக.
விளக்கக் குறிப்புகள்
அ. ஐவர் ஒன்றை ஓர விட்டார்....
(..ஆயம் ஆய காயம்தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன்..) --- திருஞானசம்பந்தர் தேவாரத் திருமுறை 1-50-7.
(..ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சால
செய்வது ஒன்று அறியமாட்டேன் - திருப்புகலூரனாரே) -- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-54-9.
(கூட்டமாய் ஐவர் வந்து கொடுந் தொழில் குணத்தர் ஆகி
ஆட்டுவார்க்கு ஆற்றகில்லேன் ஆடு அரவு அசைத்த கோவே...)--
திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-67-4.
(வளைத்து நின்று ஐவர்கள் வந்து எனை நடுக்கம் செய்ய
தளைத்து வைத்து உலையை ஏற்றித் தழல் எரி மடுத்த நீரில்
திளைத்து நின்று ஆடுகின்ற ஆமை போல் தெளிவு இலாதேன்..) திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-79-6.

(..அடுவன அஞ்சுபூதம் அவை தமக்கு ஆற்றல் ஆகேன்
படுவன பலவும் குற்றம் பாங்கு இலா மனிதர் வாழ்க்கை..) திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-76-10.
(ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற்று
ஒருவீர் வேண்டீர் ஈண்டு இவ் அவனி எல்லாம்...) திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-27-2.
ஆ. இந்தப் பாடலின் முற் பகுதிக்கும் பிற் பகுதிக்கும் மிக்கப் பொருத்தம் காணத்தக்கது....
சூராதிகளை அடக்கிய நீ ஐம்புலன்களை அடக்கக் கூடாதா என்ற கருத்து தொங்கி நிற்கின்றது.

5.
திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவைதிரு முலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறியறு வர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழவிம் மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங்கு வலயமே.

பதம் பிரித்தல்

திருந்த புவனங்கள் ஈன்ற பொன் பாவை திருமுலைப்பால்
அருந்தி சரவண பூந்தொட்டில் ஏறி அறுவர் கொங்கை
விரும்பி கடல் அழ குன்று அழ சூர் அழ விம்மி அழும்
குருந்தை குறிஞ்சி கிழவன் என்று ஓதும் குவலயமே.

பத உரை

திருந்த = திருந்திய வகையில் (நன்றாக). புவனங்கள் ஈன்ற = உலகங்களைப் பெற்று அருளிய. பொன் பாவை = அழகிய பாவை போன்ற பார்வதி. திரு முலைப் பால் அருந்தி = திருமுலைப்பாலைப் பருகி. சரவணப் பூந்தொட்டியில் = சரவணம் என்னும் மடுவில். அறுவர் கொங்கை விரும்பி = கார்த்திகை மாதர்கள் அறுவரின் முலைப்பாலை விரும்பி. விம்மி அழும் குருந்தை = விம்மி அழுகின்ற இளங் குழந்தை. (இந்தக் குழந்தை நம்மை விட்டுப் பிரிந்து இருக்கின்றதே என்று உணர்ந்து) கடல் அழ, குன்று அழ, சூர் அழ = கடல், கிரௌஞ்சம், சூரன் ஆகியவை அழவும். குவலயம் = உலகில் பெரியோர். குறிஞ்சிக் கிழவன் என்று ஓதும் = முருகனை மலைக் கிழவன் எனச்சொல்லுவர்.

சுருக்க உரை

பார்வதியின் முலைப் பாலைப் பருகி, அது போதாதென்று, கார்த்திகைப் பெண்கள் அறுவர் கொங்கையை விரும்பி சரவணம் என்ற மடுவில் வளர்ந்து விம்மி விம்மி அழும் குழந்தையை, கடல், கிரௌஞ்சம், சூரன் ஆகியவை அழ, உலகில் இச்சிறு முருகனை குறிஞ்சி நிலக் கிழவன் என்று சொல்லுகிறதே. இது விந்தையாக இருக்கிறது.

விளக்கக் குறிப்புகள்

அ. கடல் = கன்மம். குன்று = மாயை. சூர் = ஆணவம் (மும்மலங்கள்). இம மூன்றும் வேலால் வேதனை உற்றன.
குவலயம் = உலகம் (உலகம் என்ப து உயர்ந்தோர் மாட்டே).
(வேல்பட்டு அழிந்தது வேலையும்
சூரனும் வெற்புமவன்...)-----கந்தர் அலங்காரம் 40.
(வேலுக் கணிகலம் வேலையும்
சூரனும் மேருவுமே)---கந்தர் அலங்காரம் 62.
ஆ. புவனங்கள் ஈன்ற பொன் பாவை.....
(உலகீன்ற பச்சை உமை....) --- திருப்புகழ் (இபமாந்தர்சக்ர)
(...சகல புவனமும் உதவிய பதிவ்ருதை சமய முதல்வி..)---- திருப்புகழ் (கருணை சிறிதுமில்)

6.
பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மாநந்தந் தித்தித்த றிந்தவன்றோ
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே.

பதம் பிரித்தல்

பெரும் பைம்புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய் அன்பினால் மெல்ல மெல்ல உள்ள
அரும்பும் தனி பரமாநந்தம் தித்தித்தது அறிந்தவன்றோ
கரும்பும் துவர்த்து செந்தேனும் புளித்து அற கைத்ததுவே.

பத உரை

பெரும் பைம் புனத்தினுள் = பெரிய பசுறை வாய்ந்த (தினைப்) புனத்தில். சிற்றேனல் = சிறிய தினைக் கதிர்களை. காக்கின்ற பேதை = காத்திருந்த பேதையாகிய வள்ளியின். கொங்கை விரும்பும் = கொங்கை மீது ஆசை கொண்ட. குமரனை = ஆசை கொண்ட குமரக் கடவுளை. மெய் அன்பினால் = உண்மையான அன்புடன். மெல்ல = மெதுவாகப் பயின்று. உள்ள = சிந்தனை செய்ய. அரும்பும் = (அப்போது) உண்டாகும். பரமாநந்தம் = தனிப்பட்ட மகிழ்ச்சி. தித்தித்தது = அந்த ஆனந்த ருசியின் இனிமையை. அறிந்தவன்றோ = அனுபவித்து உணரும் போது. கரும்பும் துவர்த்து = கரும்பும் துவர்க்கும். செந் தேனும் புளித்து = நல்ல தேனும் புளிக்கும். அற = மிகவும். கைத்ததுவே = கசக்கும் என்னலாகும்.

சுருக்க உரை

தினைப் புனத்தில் கதிர்களைக் காத்திருந்த வள்ளியின் கொங்கையை விரும்பிய முருகவேளை உண்மையான அன்புடன் தியானம் செய்தால் அதனால் உண்டாகும் ருசியின் இனிமையை அனுபவிக்கும் போது கரும்பு, தேன் இவைகளின் சுவையும் வெறுக்கத் தக்கவைகளாக மாறிவிடும்.

விளக்கக் குறிப்புகள்

அ. கரும்பும் துவர்த்துச் செந்தேனும்......
(...திருப்புத்தூரனைச் சிந்தைசெயசெயக்
கருப்புச் சாற்றிலும் அண்ணிக்கும் காண்மினே) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 5-61-5.
(...விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே) -- திருமந்திரம் 2935.
ஆ. சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை.....
பேதை கொங்கை விரும்பும் குமரன் = ஜீவாத்மாவின் பக்குவ நிலையைக் குறிக்கும். பேதை - வள்ளி (ஜீவாத்மா). கொங்கை - அந்த ஆத்மாவின் பக்குவ நிலை.

7.
சளத்திற் பிணிபட் டசட்டுக் ரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே.

பதம் பிரித்தல்

சளத்தில் பிணி பட்டு அசட்டு க்ரியைக்குள் தவிக்கும் என்றன்
உளத்தில் ப்ரமத்தை தவிர்ப்பாய் அவுணர் உரத்து உதிர
குளத்தில் குதித்தும் குளித்தும் களித்தும் குடித்தும் வெற்றிக்
களத்தில் செருக்கி கழுது ஆட வேல்தொட்ட காவலனே.

பத உரை

சளத்தில் = வஞ்சனையிலும் பொய்யிலும். பிணிபட்டு = கட்டுண்டு. அசட்டுக் க்ரியைக்குள் = மூடத்தனமான செய்கைகள் செய்து. தவிக்கும் = தவிக்கின்ற.

என்றன் = என்னுடைய. உளத்தில் = மனதில். ப்ரமத்தைத் தவிர்ப்பாய் = உள்ள மயக்க அறிவை ஒழித்தருளுக.
அவுணர் உரத்து – அசுரர்களுடைய மார்பில். உதிரக் குளத்தில் = இரத்தக் குளத்தில். குதித்துக் குளித்து = குதித்தும் குளித்தும். களித்து = மகிழ்ந்தும். குடித்து = பருகியும். வெற்றிக் களத்தில் = ஐயம்வெற்றி விளங்கின அந்தப் போர்க் களத்தில். செருக்கி = இன்பம் அனுபவித்து. கழுது ஆட = பேய்கள் கூத்தாடும்படி. வேல் தொட்ட = வேலைச் செலுத்திய. காவலனே = அரசே.

சுருக்க உரை

வஞ்சனையிலும், பொய்யிலும் கட்டுண்டு, மூடச்செய்கைகளை செய்யும் என்னுடைய மயக்க அறிவை ஒழித்தருளுக. போர்க்களத்தில் அசுரர்களுடைய மார்பிலிருந்து பெருகும் இரத்தத்தைப் பருகிப் பேய்கள் கூத்தாடும்படி அவர்களை அழித்த அரசே. வீணான தொழில்களைச் செய்யும் எனது மயக்க அறிவை நீக்கி அருளுக.

விளக்கக் குறிப்புகள்

அ. இப்பாடலின் 3,4 அடிகள் ஆசிரியர் சந்தக் கவி என்பதைக் காட்டும்.
ஆ. ப்ரமத்தைத் தவிர்ப்பாய்.....
(அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா)---- கந்தர் அனுபூதி 8.
ப்ரமம் என்னும் சொல் எழுத்து மாறிப் பிமரம் என மயக்க அறிவு என்ற பொருளில் வந்துள்ளது.
(பேற்றைத் தவம்சற்றும் இல்லாத
என்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா)--- கந்தர் அலங்காரம் 1.

8.

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பா ழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

பதம் பிரித்தல்

ஒளியில் விளைந்த உயர் ஞான பூதரத்து உச்சியின் மேல்
அளியில் விளைந்தது ஒரு ஆநந்த தேனை அநாதி இல்
வெளியில் விளைந்த வெறும் பாழை பெற்ற வெறுநம் தனியை
தெளிய விளம்பிய வா முகம் ஆறுடை தேசிகனே.

பத உரை

ஒளியில் விளைந்த –= இன்ப ஒளியாக (சிவ ஒளியாக) ஏற்பட்ட. உயர் ஞானபூதரத்து = மேலான ஞானமாகிய மலையின். உச்சியின் மேல் = உச்சியில் மேலே. அளியில் = கருணை மயமாய் விளங்கி. விளைந்தது = விளங்கி எழும். ஒரு = ஒப்பற்ற. ஆநந்தத் தேனை = ஆனந்தத் தேன் போல் இனிக்கும். அநாதி இல் = முதல் இல்லாத. வெளியில் = பர வெளியில். விளைந்த = தோன்றி விளங்கும். வெறும் பாழை = இது என்று சுட்டிக் காட்டுதற்கு இல்லாத வெற்று இடத்தை (நாததத்துவம்). பெற்ற = கொண்ட. வெறும் தனியை = தன்னந் தனியான ஒரு நிலையை. தெளிய விளம்பியவா = நான் தெளிவுற அறியும்படி உபதேசித்த கருணையை என்ன என்று வியப்பேன். முகம் ஆறு உடை = ஆறு முகங்களை உடைய. தேசிகனே.

சுருக்க உரை

சிவ மயமான ஞான மலை மீது விளையும் தேனை, முதல் இல்லாத வெட்ட வெளியில் விளங்கும் தனி நிலையை, ஆறுமுகப் பெருமான் எனக்குத் தெளிவாக உபதேசித்தது என்ன ஆச்சரியம்.

விளக்கக் குறிப்புகள்

அ. வெறுந் தனியை....

(உருவி லாத பாழில் வெட்ட
வெளியி லாடு நாத நிர்த்த
உனது ஞான பாத பத்ம முறுவேனோ) --- திருப்புகழ் (துடிகொணோய்களோடு)
(தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ)--- கந்தர் அனுபூதி 49.
(முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழாய்
அப்பாழுக் கப்பால்நின் றாடுமதைப் போற்றாமல்)---- பட்டினத்தார் (நெஞ்சோடு புலம்பல்) 3.
(முப்பாழ் ஒளியை விழுங்கி இருந்த என் நந்தி இதயத் துளானே..)---திருமந்திரம் 2547.

9.
தேனென்று பாகென் றுவமிக் கொணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே.

பதம் பிரித்தல்
தேன் என்றும் பாகு என்றும் உவமிக்க ஒணாத மொழி தெய்வ வள்ளி
கோன் அன்று எனக்கு உபதேசித்தது ஒன்று உண்டு கூறவற்றோ
வான் அன்று கால் அன்று தீ அன்று நீர் அன்று மண்ணும் அன்று
தான் அன்று நான் அன்று அசரீரி அன்று சரீரி அன்றே.
பத உரை
தேன் என்றும் பாகு என்றும் = தேன் சர்க்கரை ஆகியவைகளுக்கு நிகராகும். என்று உவமிக்க ஒணா = என்று உவமைகள் கூற முடியாத. மொழி = இனிய சொற்களைப் பேசும். தெய்வ வள்ளி கோன் = தெய்வீகம் விளங்கும் வள்ளிக்குத் தலைவன். அன்று எனக்கு உபதேசித்தது ஒன்று உண்டு = முதல் நாளில் எனக்கு உபதேசம் செய்ததான ஒரு பொருள் உண்டு. கூறவற்றோ - அது இன்னது, இத்தன்மைத்து என்று சொல்லுந் தக்கதன்று. (அது). வான் அன்று = ஆகாயம் இல்லை. கால் அன்று - வாயு இல்லை. தீ அன்று நீர் அன்று = நெருப்பும் தண்ணீரும் இல்லை. மண் அன்று = நிலமும் (ஆகப் பஞ்ச பூதங்களும்) இல்லை. தான் அன்று = அவன் அன்று. நான் அன்று = நானும் இல்லை. அசரீரி அன்று சரீரி அன்று = சரீரம் இல்லாததும் (அருவப் பொருளும்), சரீரம் உடையதும் (உருவப் பொருளும்) இல்லை.
சுருக்க உரை
தெய்வீகம் விளங்கும் வள்ளி நாயகியின் தலைவனான முருகன் எனக்கு உபதேசித்ததை இன்னது, இத்தன்மைத்து என்று விளக்கிக் கூற முடியாது. அது ஐந்து பூதங்களோ, தான் என்ற உணர்வோ, அருவமோ, உருவமோ இல்லை என்று மட்டும் தான் கூற முடியும்.
விளக்கக் குறிப்புகள்
அ. தெய்வ வள்ளி...
(சேவக மன்ன மலர்க்கோமுன் னீசொலத் தெய்வவள்ளி...) --- கந்தர் அந்தாதி 64.
ஆ. வானன்று காலன்று.....
(நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி யேறி நீயன்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே) --- திருப்புகழ் (மூளும்வினைசேர)
இ. ஒன்று உண்டு கூறவற்றோ.....
(அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே) --- கந்தர் அனுபூதி 30.

10.
சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்து சும்மா விருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வாஇகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே.

பதம் பிரித்தல்

சொல்லுகைக்கிலை என்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும்
எல்லையுள் செல்ல எனை விட்ட வா இகல் வேலன் நல்ல
கொல்லியை சேர்க்கின்ற சொல்லியை கல்வரை கொவ்வை செவ்வாய்
வல்லியை புல்கின்ற மால்வரை தோள் அண்ணல் வல்லபமே.

பத உரை

இகல்வேலன் = வலிமை வாய்ந்த வேலாயுதக் கடவுள். நல்ல = சிறந்த. கொல்லியை – நவரோக ராகத்தை (பண் இந்தளம் அல்லது நாதநாமக்ரியை ராகம்). சேர்க்கின்ற = ஒத்ததான. சொல்லியை = பேச்சை உடையவளும். கல் வரை = கல் மலை நிலமாகிய வள்ளி மலையில் வாழ்பவளும். கொவ்வைச் செவ்வாய் = கொவ்வைப் பழம் போன்று சிவந்த வாயை உடையவளும். வல்லியை = கொடி போன்றவளுமாகிய வள்ளி நாயகியை. புல்கின்ற = அணைகின்ற. மால் வரைத் தோள் அண்ணல் = பெரிய மலை போன்ற தோள்களை உடைய பெருமானாகிய முருகனின். வல்லபம் = சாமர்த்தியம். சொல்லுகைக்கு = இத்தன்மைத்து என்று சொல்லுவதற்கு. இல்லை என்று = இல்லை என்று. எல்லாம் இழந்து = யாவற்றையும் இழந்து. சும்மா இருக்கும் = சும்மா இருக்கின்ற. எல்லையுள் = மனம், வாக்கு காயம் இவைகளின் செயலற்ற மௌன நிலையில். செல்ல = புகுந்திருக்க. எனை விட்டவா = என்னைக் கொண்டு விட்ட திறம் ஆச்சரியமாக இருக்கின்றது.

சுருக்க உரை

கொல்லிப் பண்ணை ஒத்ததான இனிய பேச்சை உடையவளும், வள்ளி மலையில் வாழ்பவளும், சிவந்த வாயை உடையவளுமான வள்ளியை அணைகின்ற முருகனுடைய திறம் இத்தன்மைத்து என்று சொல்லுவதற்கு இயலாது. யாவற்றையும் இழந்து, மனம் வாக்கு காயம் இல்லாத மௌன நிலையில் என்னைச் சேர்த்தது என்ன ஆச்சரியம்.

விளக்கக் குறிப்புகள்

அ. கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக்.....
திருப்புகழிலும் வள்ளியின் பேச்சின் இனிமையைப் பண் இந்தளத்துக்கு ஒப்பிடப்பட்டது.
(....குங்கு மாசல யுகளமு மதுரித
இந்த ளாம்ருத வசனமு முறுவலு மபிராம)--- திருப்புகழ் (கொந்துவார்குர)
ஆ. சும்மா இருக்கும் எல்லையுள்....
(சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே)---கந்தர் அனுபூதி 12.

11.
குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே.

பதம் பிரித்தல்

குசை நெகிழா வெற்றி வேலோன் அவுணர் குடர் குழம்பக்
கசை இடு வாசி விசை கொண்ட வாகன பீலியின் கொத்து
அசை படு கால் பட்டு அசைந்தது மேரு அடியிட எண்

திசை வரை தூள் பட்ட அத்தூளின் வாரி திடர் பட்டதே.

பத உரை

குசை - கடிவாளம். நெகிழா = நெகிழாத வகையில் தளராமல் பிடித்த. வெற்றி வேலோன் = வெற்றி வேல் முருகன். அவுணர் = அசுரர்களின். குடர் குழம்ப = குடல் கலங்கும்படி. கசை இடு= சவுக்கடி கொடுத்து ஓட்டும். வாசி = குதிரையின். விசை கொண்ட வாகனம் = வேகத்தைக் கொண்ட மயிலின். பீலியின் கொத்து = தோகைகளின் திரள். அசை படு = அசைவதால். கால் பட்டு = காற்று மோதுவதால். அசைந்தது மேரு = மேரு மலையே அசைந்தது. அடி இட = அந்த மயில் அடி எடுத்து நடக்க. எண் திசை வரை = எட்டுத் திசைகளில் உள்ள மலைகளும். தூள் பட்ட = தூளாயின. அத்தூளில் = அந்தத் தூள்கள் படிவதால். வாரி = கடலும். திடர் பட்டதே = நீர் வற்றி மேடாயிற்று.

சுருக்க உரை

வெற்றி வடிவேலன் அசுரர்களின் குடல் கலங்கும்படி குதிரையின் வேகத்தைக் கொண்ட வாகனமாகிய மயில் தோகைகள் அசைவதால் உண்டான காற்று மோதுவதால் மேருமலையே அசைந்தது. அந்த மயில் அடி எடுத்து வைக்க கடலும் வற்றி மேடாயிற்று.

விளக்கக் குறிப்புகள்

அ. இது மயிலின் ஆற்றலை விளக்கும் பாடல். மயிலின் திரோதன சக்தியைக் குறிக்கும்.

(...சூறை
துடித்திட அண்டகூடந் துளக்குறக் கலாபம் வீசி
இடித்தொகை புரள ஆர்த்திட் டேகிற்றுத் தோடைக மஞ்ஞை)---- கந்த புராணம் 4-13-500.

(எண்திக்குத் தடங்குவடு ஒக்கக் குலுங்கவரு சித்ரப்பதம்
பெயரவே...நடிக்கு மயிலாம்)---- மயில் விருத்தம் 2.

(வெகுக்கோடி மலைகளும் அடியினில் தகர்ந்திரு விசும்பிற் பறக்க....வேலைசுவற....
சிறகை வீசிப் பறக்கு மயில்)--- மயில் விருத்தம் 4.

ஆ. போரில் தோற்ற சூரபதுமனது (சூரன், பதுமன் என்னும்) இரண்டு அம்சங்களில் சூரன் மயிலாகவும், பதுமன் சேவலாகவும் வர அவற்றைத் தமது திருவருளால் ஆட்கொண்டு மயிலைத் தம் வாகனமாகவும், சேவலைத் தம் கொடியாகவும் முருக வேள் ஏற்றுக் கொண்டார்.

12.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

பதம் பிரித்தல்

படைபட்ட வேலவன் பால் வந்த வாகை பதாகை என்னும்
தடைபட்ட சேவல் சிறகு அடிக்கொள்ள சலதி கிழிந்து
உடை பட்டது அண்ட கடாகமும் உதிர்ந்தது உடு படலம் உதிர்ந்தது
இடைபட்ட குன்றமும் மேரு வெற்பும் இடிபட்டவே.

பத உரை

படை பட்ட வேலவன் பால் வந்த = படைகளுக்குள் சிறந்ததான வேலை ஏந்திய முருகனிடம் வந்து சேர்ந்த. வாகைப்பதாகை = வெற்றிக்கொடி என்று சொல்லப்பட்ட. தடைபட்ட = போர் செய்யும் எண்ணத்துடன் வந்த அந்த எண்ணம் நிறைவேறாது. (முருகன் அருள் கண்ணால் ஞான உணர்வு கொண்ட) சேவல் சிறகடிக் கொள்ள = தனது சிறகை அடிக்க. (அந்த வேகத்தால்). சலதி = கடல். கிழிந்து = கிழிபட்டு. அண்ட கடாகம் உடைபட்டது = அண்டகோளத்தோடு உடைபட்டது. உடுபடலம் - நட்சத்திரக் கூட்டங்கள். உதிர்ந்தது = உதிர்ந்து

போயின. இடை பட்ட = இடையிலிருந்த. குன்றமும் = மலைகளும். மா மேரு வெற்பும் = மகா மேருமலையும். இடிபட்டன = பொடியாயின.

சுருக்க உரை

சிறந்த வேல் படையை உடைய முருகன் திருவருளால் ஞான உணர்வு கொண்ட சேவல் தன் சிறகை அடித்துக் கொள்ள, அந்த வேகத்தால் கடல் கிழிந்து, அண்ட லோகங்களும் உடைபட்டன. நட்சத்திரக் கூட்டங்கள் கீழே உதிர்ந்தன. இடையேயிருந்த குன்றுகளும் மேரு மலையும் பொடியாயின.

விளக்கக் குறிப்புகள்

இப்பாடல் சேவலின் சிறப்பைக் குறிக்கும்.
(கோழியோங்கிய வென்றிடு விறற்கொடி
வாழிய பெரிது என்று ஏத்தி.....) --- திருமுருகாற்றுப்படை 38-39.
மயில் ஓங்கார வடிவம். விந்து தத்துவத்தைக் குறிக்கும்.
சேவல் நாத தத்துவம். (நாத விந்து கலாதி நமோ நம)--- திருப்புகழ்(நாதவிந்து)

13.

ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

பதம் பிரித்தல்

ஒருவரை பங்கின் உடையாள் குமாரன் உடை மணி சேர்
திருவரை கிண் கிணி ஓசை பட திடுக்கிட்டு அரக்கர்
வெருவர திக்கு செவிடு பட்டு எட்டு வெற்பும் கனக
பருவரை குன்றும் அதிர்ந்தன தேவர் பயம் கெட்டதே.

பத உரை

ஒருவரை - ஒப்பற்ற சிவபெருமானை. பங்கில் உடையாள் = தனது பாகத்தே கொண்ட பார்வதி தேவியின். குமாரன் = புதல்வனான முருகன். உடைமணி கிண்கிணி சேர் - உடைமணி என்னும் ஆபரணம் சேர்ந்த. திருவரைக் கிண்கிணி = திருவரையிற் கட்டி உள்ள கிண்கிணியின். ஓசை பட = சப்தம் உண்டாக. திடுக்கிட்டு அரக்கர் = (அதைக் கேட்டு) திடுக்கிட்டு அசுரர்கள். வெருவர = அஞ்ச. திக்கு = எட்டுத் திசைகளில் உள்ளவர்களும். செவிடு பட்டு = செவிடாகி. எட்டு வெற்பும் = எட்டுத் திசையில் உள்ள மலைகளும். கனகப் பருவரைக் குன்றும் = பொன் மலையான பெரிய மேரு மலையும். அதிர்ந்தன = அதிர்ச்சி அடைந்தன. தேவர் பயம் கெட்டதே= தேவர்கள் பயமும் நீங்கியதே.

சுருக்க உரை

சிவபெருமானைப் பாகத்தில் கொண்ட பார்வதி பெற்ற மகனான முருகனின் திருவரைக் கிண்கிணியின் ஓசையைக் கேட்டு, அரக்கர்கள் அஞ்சினர். எட்டுத் திசைகளில் உள்ளவர் செவிடாகினர். எட்டுத் திசைகளில் உள்ள மலைகளும், பொன் மயமான மேருமலையும் அதிர்ச்சி அடைந்தன. தேவர்கள் பயமும் நீங்கியது.

விளக்கக் குறிப்புகள்

அ. திருவரைக் கிண்கிணி.....
(.....திரு அரையில்
கிண்கிணி ஓசை பதினாலு
உலகமும் கேட்டதுவே)---- கந்தர் அலங்காரம் 93.

14.

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்

சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

பதம் பிரித்தல்

குப் பாச வாழ்க்கையுள் கூத்தாடும் ஐவரில் கொட்பு அடைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்றுவாய் இரு நான்கு வெற்பும்
அப்பாதியாய் விழ மேருவும் குலுங்க விண்ணாரும் உய்ய
சப்பாணி கொட்டிய கை ஆறிரண்டு உடை சண்முகனே.

பத உரை

கு = இழிவானதும். பாச வாழ்க்கையுள் = இழிவானதும் பாசங்களுக்கும் ஆசைகளுக்கும் இடமானதுமான உலகை வாழ்க்கையில். கூத்தாடும் ஐவரில் = கூத்தாடுகின்ற ஐம்பொறிகளால். கொட்பு அடைந்த = மனக் கலக்கம் அடைகின்ற. இப் பாச நெஞ்சினை = ஆசைகளுக்கு இடம் தருகின்ற உள்ளத்தை உடைய என்னை. ஈடேற்றுவாய் = ஈடேற்றி அருள்வாயாக.

இரு நான்கு வெற்பும் = எட்டுத் திசையிலுள்ள எட்டு மலைகளும். அப்பாதியாய் விழ = அந்தப் பாதியாய் உடைபட்டு விழ. மேரு(வு)ம் குலுங்க = மேரு மலையும் அதிர்ச்சி கொள்ள. விண்ணாரும் உய்ய = தேவர்களும் பிழைத்து ஈடேறி. சப்பாணி கொட்டிய கை = சப்பாணி கொட்டின கைகள். ஆறிரண்டு உடைச் சண்முகனே = பன்னிரண்டு உடைய சண்முகனே.

சுருக்க உரை

இழிவானதும் ஆசா பாசங்களுக்கு இடமானதுமான இந்த உலக வாழ்க்கையில் கூத்தாடுகின்ற ஐம்பொறிகளால் மனம் கலங்கி ஆசைகளுக்கு இடம் தரும் உள்ளத்தை உடையவனாகிய அடியேனை ஈடேற்றி அருள்வாயாக.

எட்டுத் திசையில் உள்ள மலைகள் பாதியாய் உடைபட்டு விழவும், மேரு மலை அதிர்ச்சி அடையவும் தேவர்கள் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய பன்னிரண்டு கைகளை உடைய சண்முகனே. என்னை ஈடேற்றுவாயாக.

விளக்கக் குறிப்புகள்

அ. இப்பாடல் பிள்ளைத் தமிழில் சப்பாணிப் பருவப் பாடலுக்கு இணையாகும். இப்பருவத்தில் பாட்டுடைத் தலைவன் தன் இரு கரங்களையும் சேர்த்துக் கொட்டி விளையாடுவதாகக் கற்பனை செய்வது மரபு.

ஆ. இப்பாடலில் திருவருட் பேறு பெற்ற அருணகிரியார் உலக மக்களுக்குக்காக அவர்கள் படும் துன்ப வாழ்வைத் தாம் பெற்று வருந்துமாறு பாடியுள்ளார். சளத்திற் பிணி பட்ட அசடன் என்று ஏழாவது பாடலிலும் பிறருடைய குறைகளைத் தம் மீது ஏற்றிப் பாடியுள்ளார்.

இ. குப்பாசை வாழ்க்கை.....

கு = சிறுமையைக் காட்டும், குக்குடில் என்பது போல்.

(பானி றக்க ணேசர் குவா குவா கனர் இளையோனே)---- திருப்புகழ்(சீர்சிறக்கும் மோனி)

15.

தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.

பதம் பிரித்தல்

தாவடி ஓட்டும் மயிலிலும் தேவர் தலையிலும் என்
பா அடி ஏட்டிலும் பட்டது அன்றோ படி மாவலி பால்
மூவடி கேட்டு அன்று மூது அண்ட கூட முகடு முட்ட
சேவடி நீட்டும் பெருமான் மருகன் தன் சிற்றடியே.

பத உரை

மாவலி பால் = மாவலிச் சக்ரவர்த்தியிடம். மூவடி = மூன்று அடி. படி கேட்டு = மண் கொடு என்று கேட்டு. அன்று = அந்நாள். மூது அண்ட கூட முகடு முட்ட = பழைமையால் நிற்கும் அண்ட கோளத்தின் மேற் கூரை முட்டும்படியாக. சேவடி நீட்டும் = தனது செவ்விய அடியை விசுவரூபம் எடுத்து நீட்டிய. பெருமான் = திருமாலின். மருகன் = மருகனான முருகனுடைய. சிற்றடியே = சிறிய திருவடியானது.
தாவடி ஓட்டும் = பிரயாணத்துக்குத் (அல்லது போருக்குத்) தாவிப் பாய்ந்து செல்லும். மயலிலும் = மயிலின் மீதும். தேவர் தலையிலும் = தேவர்களின் தலையின் மீதும். என் பா அடி ஏட்டிலும் = என்னுடைய பாடல்களின் அடிகளைக் கொண்ட ஏட்டுப் புத்தகத்தினுள்ளும். பட்டது அன்றோ = பதிந்துள்ளது அல்லவா.

சுருக்க உரை

மாவலி சக்ரவர்த்தியிடம் அந்நாள் மூன்று அடி மண் கேட்டபோது தனது திருவடியை விசுவரூபம் எடுத்து நீட்டிய திருமாலின் மருகனான முருகனின் சிறிய திருவடிகள், தேவர்கள் தலையிலும், மயிலின் மீதும், அடியேனுடைய பாக்களின் மீதும் பதிந்துள்ளது அல்லவா. அதுவும் உன் கருணை.

விளக்கக் குறிப்புகள்

மாவலியும் அருணகிரியாரும் மேலே உள்ள தேவர் சாட்சியாகத் தத்தம் ஆணவம் கீழ் அடக்கப்பட்டு இறைவன் திருவடி முத்திரைப் பெற்று ஏற்று கொள்ளப்பட்டனர்.
அ. தாவடி ஓட்டும் மயில்......
தாவடி = பிரயாணம் (போர், தாண்டுகோல்)
(கடிதுல கெங்கணுந் தாவடி யிட்டு வந்த
மயிலுமி லங்கலங் கார பொற்ச தங்கை)---- திருப்புகழ்(தமரகுர)
ஆ. மாவலிபால் மூவடி கேட்டன்று.......
(மாவலி வேள்வியில் மாணுருவாய்ச் சென்று
மூவடிதா என்று இரந்த இம்மண்ணினை
ஓரடியிட்டு இரண்டா மடிதன்னிலே
தாவடியிட்டானால் இன்றுமுற்றும்
தரணி அளந்தானால் இன்று முற்றும்) --- பெரியாழ்வார் நாலாயிர திவ்ய ப்ரபந்தம் 2-10-7.
மற்ற திருப்புகழ்க் குறிப்புகள் --- (வதனசரோ, எலுப்புநாடி, செறிதரும்).
மாவலியின் தலை மீது திருமாலின் திருவடி பட்டதால் ஆட்கொள்ளப் பட்டார்.
அருணகிரியாரின் பாடல்கள் மீது முருகனின் திருவடிகள் பட்டதால் ஆட்கொள்ளப் பட்டார்.

16.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

பதம் பிரித்தல்

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை தானம் என்றும்
இடுங்கோள் இருந்தபடி இருங்கோள் எழு பாரும் உய்யக்
கொடும் கோப சூருடன் குன்றம் திறக்க தொளைக்க வை வேல்
விடுங்கோன் அருள் வந்து தானே உமக்கு வெளிப்படும்.

பத உரை

தடுங்கோள் மனத்தை = மனதின் வேகத்தைத் தடுங்கள். வெகுளியை விடுங்கோள் = கோபத்தை விட்டு விடுங்கள். தானம் என்றும் இடுங்கோள் = எப்போதும் பிறருக்குத் தானத்தை இடுங்கள். இருந்த படி இருங்கோள் = நிலை மாறாது அமைதியாக இருங்கள். (இங்ஙனம் செய்தால்). எழு பாரும் உய்ய = ஏழு உலகங்களும்

பிழைக்கும் பொருட்டு. கொடும் கோபச் சூருடன் = கொடிய கோபம் கொண்டவனான சூரனையும். குன்றம் = (அவனுக்குத் துணையாக இருந்த) ஏழு மலைகளையும். திறக்க = பிளவு பட. வை = கூரிய. வேல் விடும் கோன் = வேலைச் செலுத்திய நாயகனான முருகனது. அருள் வந்து = திருவருள் கிட்டி. தானே உமக்கு வெளிப்படும் = தானாகவே உங்களுக்கு வெளிப்பட்டு உதவும்.

சுருக்க உரை

மனத்தை அடக்கிக், கோபத்தை விடுத்து, பிறருக்குத் தானத்தை அளித்து, நிலை மாறாது அமைதியாக இருந்தால், ஏழு உலகங்களும் பிழைப்பதற்காகச் சூரனையும், அவனுக்குத் துணை இருந்த ஏழு மலைகளையும் பிளக்கும் படி வேலைச் செலுத்திய முருகனின் திருவருள் உங்களுக்குத் தானாகவே வெளிப்படும்.

விளக்கக் குறிப்புகள்

அ. எழு பாரும் உய்ய.....
எழுபார் - பூ , புவ , சுவ , சன , தவ , மகா , சத்திய லோகங்கள்.

ஆ. விடுங்கோள் வெகுளியை.....
(உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்) --- திருக்குறள் 309.
இ. தானம் என்றும் இடுங்கோள்....
(கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்...)---- கந்தர் அனுபூதி 7.
(.....இரவோருக் கேதுமித்தனை தானம் இடாதவர் ...... நரகுழல்வாரே)----
திருப்புகழ் (ஓதுவித்தவர்)
ஈ. இருந்தபடி இருங்கோள்...
சத்துவம், இராஜசம், தாமசம் என்று முக்குணங்களால் பீடிக்காமல் எப்பொழுதும் அமைதியாக இருப்பது. உயர்ந்த பதவி கிடைத்த போதிலும் முன் இருந்தபடியே அடக்கமாகவும் கர்வம் கொள்ளாமலும் இருக்க வேண்டும் என்றும் பொருள் கொள்ளலாம்.
(நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது)--- திருக்குறள் 124.

17.
வேதா கமசித்ர வேலா யுதன் வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே.

பதம் பிரித்தல்

வேத ஆகம சித்ர வேலாயுதன் வெட்சி பூத்த தண்டை
பாதாரவிந்தம் அரணாக அல்லும் பகலும் இல்லா
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்து சும்மா இருக்கப்
போதாய் இனி மனமே தெரியாது ஒரு பூதர்க்குமே.

பத உரை

வேத ஆகம = வேதங்களாலும் ஆகமங்களாலும் போற்றப்படும். சித்ர வேலாயுதன் = அழகிய வேலாயுதக் கடவுள். வெட்சி பூத்த = வெட்சி மலர் நிறைந்து விளங்குவதும். தண்டை = தண்டை அணி பூண்டதுமான. பாதார விந்தம் = தாமரைத் திருவடிகளை. அரணாக = துணையாகக் கொண்டு. அல்லும் பகலும் இல்லா = இரவு பகல் என்பன இல்லாததும். சூதானது அற்ற = வஞ்சகம் ஒன்றும் இல்லாததுமான. வெளிக்கே = சுத்த ஞான வெளியான சிதாகாசத்தில். ஒளித்து = மறைந்திருந்து. சும்மா இருக்க = மௌன நிலையில் நிலை பெற்றிருக்க. போதாய் இனி மனமே = மனமே, இனி நீ

செல்வாயாக. தெரியாது ஒரு பூதர்க்குமே = இந்த நிலை உலகத்தோர் யாவருக்கும் தெரியாது.

சுருக்க உரை

வேதாகமங்களால் போற்றப்படும் அழகிய வேலாயுதக் கடவுளின் வெட்சி மலர் அணிந்தத் தாமரைத் திருவடிகளைத் துணையாகக் கொண்டு, இரவு பகல் அற்றதும், வஞ்சனை ஒன்றும் இல்லாததுமான சுத்த ஞான வெளியில் இருந்து சும்மாவிருக்கும் நிலையைப் பெற்றிருக்க, மனமே, நீ செல்வாயாக. இந்த நிலை உலகத்தவருக்குத் தெரியாததொன்றாகும்.

விளக்கக் குறிப்புகள்

அ. சூதானது அற்ற வெளிக்கே.....
(...அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற...)---- கந்தர் அலங்காரம் 8.
ஆ. தெரியாது ஒரு பூதர்க்கே......
(ஒருபூ தருமறி யாத்தனி
வீட்டில் உளையுணர்வற்று)---- கந்தர் அலங்காரம் 45.
இ. அல்லும் பகலும் இல்லா.....
(இரவு பகலில்லா இன்ப வெளியூடே விரவி விரவி நின் றுந்தீ பற)---- திருவுந்தியார் 20.
ஈ. இது உலகுக்கு உபதேசம் செய்யும் பாடல்.

18.

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

பதம் பிரித்தல்

வையில் கதிர் வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்
நொய்யின் பிளவு அளவேனும் பகிர்மின்கள் நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறு நிழல் போல்
கையில் பொருளும் உதவாது காண் உம் கடை வழிக்கே.

பத உரை

வையில் = கூர்மையைத் தன்னில் கொண்ட. கதிர் வடி வேலோனை = ஒளி வீசும் அழகிய வேலை ஏந்தும் முருகனை. வாழ்த்தி = வாழ்த்தி. வறிஞர்க்கு என்றும் = ஏழைகளுக்கு எப்பொழுதும். நொய்யின் பிளவு அளவேனும் = ஒரு நொய்யின் சிறிய பிளவு அளவையாவது. பகிர்மின்கள் = பகிர்ந்து கொடுத்து உண்ணுங்கள். நுங்கட்கு = உங்களுக்கு. இங்ஙன் = இங்கு (இப்பிறப்பில்). வெய்யிற்கு ஒதுங்க= வெய்யிலுக்கு ஒதுங்குவதற்குக் கூட. உதவா = உதவியற்ற. உடம்பின் வெறு நிழல் போல் = இந்த உடலின் நிழலைப் போல்.
கையில் பொருளும் = உங்கள் கையிலிருக்கும் பொருளும். உம் கடைவழிக்கே உதவாது காண் = நீங்கள் இறந்த பின் செல்லும் அவ்வழிக்கு உதவாது.

சுருக்க உரை

வேலாயுதக் கடவுளை வாழ்த்தி, ஏழைகளுக்கு நொய்யளவேனும் தானம் இட்டு உண்ணுங்கள். இப்பிறப்பில் வெய்யிலுக்குக் கூட உதவாத உங்கள் நிழலைப் போல், உங்களிடம் இருக்கும் பொருளும், இறந்த பின்னரும் உதவாது என்பதை உணர்ந்து கொள்க.

விளக்கக் குறிப்புகள்

அ. நொய்யில் பிளவு அளவேனும் பகிர்மின்கள்....
(குன்றிப் பிளஅளவு தினையளவு பங்கிட்டு
உண்கைக்கு இளையும் முதுவசை தவிர
இன்றைக் கன்றைக் கெனநாடாது இடுககடிது)--- திருப்புகழ் (அமுதுததி)..

ஆ. உதவாது காண் உம் கடைவழிக்கே......
(காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே)---- பட்டினத்தார் பொது 57-10.
இ. இதுவும் உலகோருக்கு ஒரு உபதேச பாடல்.

19.
சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவித் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

பதம் பிரித்தல்

சொன்ன கிரௌஞ்ச கிரி ஊடுருவித் தொளைத்த வை வேல்
மன்ன கடம்பின் மலர் மாலை மார்ப மௌனத்தை உற்று
நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன் இறந்து விட்டது இவ்வுடம்பே.

பத உரை

சொன்ன = பொன் மயமான. கிரௌஞ்ச கிரி = கிரௌஞ்ச மலையை. ஊடுருவி = உருவிச் சென்று. தொளைத்த வை வேல் = தொளை செய்த கூரிய வேலை ஏந்தும். மன்ன = அரசே. கடம்பின் மலர் மாலை = கடப்ப மலர் மாலையை அணிந்த. மார்ப = மார்பனே.
மௌனத்தை உற்று = மௌன நிலையை அடைந்து. நின்னை உணர்ந்து உணர்ந்து = உனது திருவருளில் ஊறி, ஊறி உன்னை அறிந்து. எல்லாம் ஒருங்கிய = ஐம்பொறிகளின் சேட்டைகள் எல்லாம் ஒடுங்கிய. நிர்க் குணம் பூண்டு = சத்துவம், ராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்களின் தாக்குதல் இல்லாத தன்மையை அடைந்து. என்னை மறந்திருந்தேன் = நான் நான் என்னும் அகங்கார நிலையை ஒழித்திருந்தேன். இறந்து விட்டதே இவ் வுடம்பு = (அப்போது) இந்த உடம்பு ஒன்று இருக்கின்றது என்ற எண்ணமும் அற்றுப் போய்விட்டது.

சுருக்க உரை

பொன் மயமான கிரௌஞ்ச மலையை ஊடுருவிச் சென்று தொளைத்த வேலை ஏந்திய அரசே. மௌனத்தைக் கடைப்பிடித்து, ஐம்பொறிகளின் சேட்டைகள் ஒடுங்கி, முக்குணங்களின் தாக்குதல் இல்லாத நிர்க் குணத் தன்மையை அடைந்து, நான் என்னும் அகங்காரம் அற்ற நிலையை ஒழித்திருந்தேன். அப்போது இந்த உடம்பு ஒன்று இருக்கின்றது என்ற எண்ணமே என்னை விட்டுப் போய் விட்டது.

விளக்கக் குறிப்புகள்

அ. சொன்ன கிரௌஞ்ச கிரி....
சொன்ன = சொர்ண.
(கனகக் கிரியைப் பொரும்வேலா) ---- திருப்புகழ்(குவளைக்கணை).
ஆ. கிரி ஊடுருவத் தொளைத்த வைவேல்....
(கொடுங்கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் துளைக்கவைவேல்..)---- கந்தர் அலங்காரம் 16.
(சூர்வே ரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல் புரந்தர பூபதியே)---- கந்தர் அனுபூதி 24.
இ. மௌனத்தையுற்று......
(அருணைநகர் மிசை கருணையொ டருளிய
மவுனவசனமும் இருபெருசரணமும் மறவேனே) --- திருப்புகழ்(முருகுசெறிகுழல்).
ஈ. நின்னை உணர்ந்து உணர்ந்து......
(செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வுறக்
கந்தனை அறிந்தறிந்து அறிவினில்
சென்று செருகுந் தடம் தெளிதர...)---- திருப்புகழ் (அந்தகன்வரு).
உ. எல்லாம் ஒருங்கிய நிர்க் குணம்.....
(..எல்லாம் இழந்து சும்மா விருக்கும் எல்லை)----கந்தர் அலங்காரம் 10.

(யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே) --- கந்தர் அனுபூதி 28.
ஊ. இறந்து விட்டதே இவ்வுடம்பே.....
(உடம்பொடு செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே)----திருமந்திரம் 165.

20.
கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.
பதம் பிரித்தல்
கோழி கொடியன் அடி பணியாமல் குவலயத்தே
வாழ கருதும் மதியிலிகாள் உங்கள் வல்வினை நோய்
ஊழில் பெருவலி உண்ண ஒட்டாது உங்கள் அத்தம் எல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால் வருமோ நும் அடிப்பிறகே.
பத உரை
கோழிக் கொடியன் = சேவல் கொடியை உடைய குமர வேளின். அடி பணியாமல் = திருவடிகளை வணங்காமல். குவலயத்தே = இவ்வுலகில். வாழக் கருதும் = வாழ்வதற்கு எண்ணுகின்ற. மதி இலிகாள் = அறிவிலிகளே. உங்கள் வல் வினை நோய் = உங்களுடைய வலிய வினை நோயானது. ஊழில் பெருவலி = பழவினையாகிய பலத்தை உடையது. உண்ண ஒட்டாது = அது உங்கள் செல்வத்தையும் அனுபவிக்க விடாது.
உங்கள் அத்தம் எல்லாம் = உங்களுடைய செல்வப் பொருளை எல்லாம். ஆழப் புதைத்து வைத்தால் = நீங்கள் அனுபவிக்காமலும் ஏழைகளுக்கு ஈயாமலும் ஆழமாகப் புதைத்து வைத்தாலும். நும் அடிப்பிறகே வருமோ = (நீங்கள் இறந்த பிறகு) அந்தச் செல்வம் உங்களுடன் கூடத் தொடர்ந்து வருமோ. வராது என்றபடி.
சுருக்க உரை
சேவற் கொடியோனாகிய கந்த வேளைத் துதிக்காமல் இவ்வுலகில் வாழலாம் என்று எண்ணும் அறிவீனர்களே. உங்கள் பழைய கொடிய வினையாகிய நோய் மிக வலிமை உள்ளது. அது உங்கள் செல்வத்தையும் அனுபவிக்க விடாது. ஏழைகளுக்கு ஈயாமல் புதைத்து வைத்த செல்வம் நீங்கள் இறந்த பிறகு உங்களுடன் தொடர்ந்து வருமோ? வராது என்று உணர்க.
விளக்கக் குறிப்புகள்
அ. ஆழப் புதைத்து வைத்தால் வருமோ.....
(பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அநுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்) ----- நல்வழி 23.

21.
மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.
பதம் பிரித்தல்
மரண ப்ரமாதம் நமக்கு இல்லையாம் என்றும் வாய்த்த துணை
கிரண கலாபியும் வேலும் உண்டே கிண்கிணி முகுள
சரண ப்ரதாப சசிதேவி மங்கல்ய தந்து

ரக்ஷாபரண க்ருபாகர ஞானாகர சுர பாஸ்கரனே.

பத உரை

மரண ப்ரமாதம் நமக்கு இல்லை = இறப்பு என்கின்ற வருத்தம் நமக்குக் கிடையாது. (ஏனெனில்) என்றும் = எப்பொழுதும். வாய்த்த துணை = உளதாகிய துணையாக. கிரண கலாபியும் = ஒளி வீசும் தோகையை உடைய மயிலும். வேலும் உண்டு = வேலும் உள்ளன.

கிண்கிணி = பாத கிண்கிணி என்னும் அணி. முகுள = குவிந்து விளங்கும். சரண = திருவடிகளை உடையவனே. ப்ரதாப = கீர்த்திமானே. சசிதேவி - இந்திராணியின். மாங்கல்ய தந்து = மாங்கல்ய நூலை.

ரக்ஷாபரண = பாதுகாத்துத் தாங்கியவனே. க்ருபாகர = கிருபைக்கு உறைவிடமானவனே. ஞானா கர= ஞானத்துக்கு உறைவிடமே. சுர = தேவனே. பாஸ்கரனே = ஞான சூரியனே.

சுருக்க உரை

கிண்கிணிகள் அணிந்த திருவடிகளை உடையவனே. கீர்த்திமானே. இந்திராணியின் மாங்கல்யத்தைக் காத்தவனே. ஞான சூரியனே. எப்போதும் எங்களுக்குத் துணையாக மயிலும், வேலும் இருப்பதால் மரண பயம் என்ற வருத்தம் கிடையாது.

விளக்கக் குறிப்புகள்

அ. மரண ப்ரமாத நமக்கில்லை....

(நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்)--- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-98-1.

(...பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே) --- கந்தர் அலங்காரம் 70.

ஆ. சசி தேவி மங்கல்ய தந்து....

(சசிதன் விளங்கிய மங்கல நூல் வாங்குகிலாள் வாழ்ந்தனள்)---- வேல் வாங்கு வகுப்பு 14-11.

இந்தப் பாடல் வட மொழிச் சொற்கள் நிறைந்தது

22.

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

பதம் பிரித்தல்

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழ வைப்போன் வெய்ய வாரணம் போல்
கை தான் இருபது உடையான் தலை பத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

பத உரை

மொய் தார் அணி குழல் - வண்டுகள் மொய்க்கின்ற மலர் மலை அணிந்த கூந்தலை உடைய. வள்ளியை வேட்டவன் = வள்ளி நாயகியை விரும்பி மணந்தவனும். முத்தமிழால் = இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழால். வைதாரையும் = தன்னை வைதவர்களையும். வாழ வைப்பவன் = அப்பொழுதே வாழ வைப்பவனும் ஆகிய முருகன். வெய்ய = கொடிய. வாரணம் போல் = யானையைப் போல. கை தான் இருபது உடையான் = இருபது கைகளை உடையவனாகிய இராவணனுடைய. தலை பத்தும் கத்தரிக்க = பத்துத் தலைகளும் துண்டாய் விழ. எய்தான் மருகன் = அம்பைச் செலுத்திய இராமனின் மருகன். உமையாள் பயந்த = பார்வதி அம்மையார் பெற்ற. இலஞ்சியமே = சரவணபவனே.

சுருக்க உரை
இருபது கைகளை உடைய இராவணன் மீது அம்பைச் செலுத்திய இராமனின் மருகனாகிய முருகன் சரவணப் பொய்கையில் உதித்தவன். வள்ளி நாயகியை விரும்பி மணம் புரிந்தவனும், உமா தேவியின் மகனுமாகிய முருகன் தன்னை முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன்.
விளக்கக் குறிப்புகள்
அ. முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன்....
(வள்ளி முருகனை முத்தமிழால் வைதாள்).
(நல்லறிவு சற்றுமிலீர், எத்துக்கு மூத்தீர்), (பித்துக் கொண்டார் போற் பிதற்றுவீர்)---கந்த புராணம் (வள்ளி) 108.. ------இயல் தமிழால் வைதது.
கொல்லிப் பண் போன்ற தனது குரலாம் இசைத்தமிழால் வைதது.
வைத போது கை, கால், தலை இவைகளைக் கூத்தாட்டத்தில் ஆடுவதுபோல் ஆட்டிப் பேசிய முறையால் நாடகத் தமிழில் வைதது என்று குறிக்கப்பட்டது.
வள்ளியை முத்தமிழ் மான் என்றும் பிறிதோரிடத்தில் கூறினார்.
(..சோதிப்பிர காசச்செய லாள்முத்தமிழ் மானைப்புணர்
சோதிப்புலி யூர் நத்திய பெருமாளே)---- (திருப்புகழ் (நீலக்குழலார்).

23.
தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.
பதம் பிரித்தல்
தெய்வத் திருமலை செங்கோட்டில் வாழும் செழும் சுடரே
வை வைத்த வேற்படை வானவனே மறவேன் உனை நான்
ஐவர்க்கு இடம் பெறக் கால் இரண்டு ஓட்டி அதில் இரண்டு
கை வைத்த வீடு குலையும் முன்னே வந்து காத்தருளே.
பத உரை
தெய்வத் திருமலை = தெய்வீகம் பொருந்திய திருமலையாகிய. செங்கோட்டில் வாழும் = திருச்செங்கோட்டில் வாழும். செழும் சுடரே = திவ்ய சோதியே. வை வைத்த = கூர்மை கொண்ட. வேல் படை வானவனே = வேல் படை ஏந்திய தெய்வமே. உனை நான் மறவேன் = நான் உன்னை மறக்க மாட்டேன்.
ஐவர்க்கு = மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும். இடம் பெற = வாசம் பண்ணும்படி. இடம் தந்து. கால் இரண்டு ஓட்டி = இரண்டு கால்களை அமைத்து. அதில் இரண்டு கை வைத்த = பின்னும் அங்கு இரண்டு கைகளையும் வைத்துள்ள. வீடு = இந்த வீடாகிய உடல். குலையும் முன்னே = அழிவதற்கு முன்னர். வந்து காத்தருள்க= என்னை வந்து காத்து அருள்வாயாக.
சுருக்க உரை
தெய்வ மலையாகிய திருச்செங்கோட்டில் வாழும் திவ்ய சோதியே. கூரிய வேற்படை ஏந்திய தெய்வமே. நான் உன்னை எப்போதும் மறவேன். ஐம்பொறிகளும் வாசம் செய்யும்படி, இரண்டு கால்களையும், கைகளையும் அமைத்த இந்த உடல் அழியும் முன்னர் என்னைக் காத்தருள வேண்டும்.
விளக்கக் குறிப்புகள்
அ. தெய்வத் திருமலை செங்கோட்டில்....
கந்தர் அலங்காரத்தில் சொல்லப்பட்ட தலங்கள் ஐந்து - அருணை, செங்கோடு, செந்தில், திருத்தணி, பழனி ஆகியவை. திருச்செங்கோடு ஏழு இடங்களில் கூறப்பட்டுள்ளது.
(செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான் முகனே)--- கந்தர் அலங்காரம் 90.

24.
கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கச் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

பதம் பிரித்தல்

கின்னம் குறித்து அடியேன் செவி நீ அன்று கேட்கச் சொன்ன
குன்னம் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடு குழல்
சின்னம் குறிக்க குறிஞ்சிக் கிழவர் சிறுமி தனை
முன்னம் குறிச்சியில் சென்று கல்யாணம் முயன்றவனே.

பத உரை

கின்னம் குறித்து - என் மனத் துயரத்தைக் கவனித்து. அடியேன் செவி = அடியேனுடைய காதில். நீ அன்று கேட்கச் சொன்ன = அன்று நான் கேட்டு, நீ சொல்லிய. குன்னம் = ரகசிய உபதேசத்தை. குறிச்சி வெளியாக்கி விட்டது = இந்த வள்ளி மலையே வெளிப்படுத்தி விட்டது.
கோடு குழல் = ஊது கொம்பு, குழல். சின்னம் = காளம் (சங்கு). குறிக்க = ஊதி ஒலிக்க. குறிஞ்சிக் கிழவர் = மலை நிலத்துக்கு உரியர்களான வேடர்களின். சிறுமி தனை = மகளாகிய வள்ளியை. முன்னம் = முன்பு. குறிச்சியில் சென்று = மலை நில ஊராகிய வள்ளி மலைக்குச் சென்று. கல்யாணம் முயன்றவனே = திருமணத்துக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தவனே.

சுருக்க உரை

ஊது கொம்பு குழல், சங்கு முதலிய இசைக் கருவிகள் ஒலிக்க முன்பு வள்ளி மலைக்குச் சென்று வள்ளி நாயகியைத் திருமணம் செய்ய முயற்சிகளைச் செய்தவனே. அடியேனுடைய துயரத்தை எண்ணி அதைத் தீர்க்கத் திருவருள் கொண்டு என் காதில் நான் உய்யும்படி ரகசிய உபதேசத்தை இந்த வள்ளி மலை வெளிப் படுத்தி விட்டது. (ஆணவ மலம் நீங்கி, அவனே கதி எனச் சரணம் புகுவோர்க்கு எளிதில் அருள் புரிவது அவனது இயல்பு என்பது பொருள்).

விளக்கக் குறிப்புகள்

அ. கின்னம் குறித்து அடியேன்....
(கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே)--- கந்தர் அனுபூதி 49.
ஆ. சிறுமிதனை முன்னங் குறிச்சியிற் சென்று கல்யாண......
வள்ளித் திருமணம் ஜீவாத்மா பரமாத்மாவுடன் கலக்கும் தத்துவத்தைக் குறிப்பது.
(...சிற்றேனல்
காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை...)---- கந்தர் அலங்காரம் 6.
(மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன்...)------ கந்தர் அலங்காரம் 22.
(வள்ளிச்சன் மார்க்கம் விள்ளைக்கு நோக்க
வல்லைக்கு ளேற்று மிளையோனே
வள்ளிக்கு ழாத்து வள்ளிக்கல் காத்த
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே) ---- திருப்புகழ் (கள்ளக்குவா).
இ. நீயன்று கேட்கச் சொன்ன குன்னம் குறிச்சி வெளியாக்கி விட்டது.....
(உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருள் பெறுவேனோ)----திருப்புகழ் (கருப்பற்றூறி)

25.
தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்

தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

பதம் பிரித்தல்

தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழ விடுவேன் செந்தில் வேலனுக்கு
தொண்டாகிய என் அவிரோத ஞான சுடர் வாள்
கண்டாய் அடா அந்தகா வந்து பார் சற்று என் கைக்கு எட்டவே.

பத உரை

அடா அந்தகா = அட எமனே. செந்தில் வேலனுக்கு = திருச்செந்தூரில் உள்ள வேற்பெருமானுக்கு. தொண்டாகிய = தொண்டனாகிய. என் = என்னுடைய.
அவிரோத ஞானச் சுடர் = விரோதமின்மை என்னும் ஞான ஒளி வீசும் வாள்.
கண்டாயடா = இருப்பதைக் காண்பாயாக.
தண்டாயுதமும் = தண்டாயுதமும். திரி சூலமும் = முத்தலைச் சூலமும். விழத் தாக்கி = கீழே விழும்படியாகத் தாக்கி. உன்னை = உன்னை. திண்டாட வெட்டி விழ விடுவேன் = திண்டாடும்படி விழும்படி செய்வேன். சற்று = (வேண்டுமென்றால்) சிறிது. என் கைக்கு எட்டவே = என் கைக்கு எட்டும்படியான இடத்தில். வந்து பார் = வந்து பார்ப்பாயாக.

சுருக்க உரை

அட எமனே. திருச்செந்தூரில் உறையும் வேற் பெருமானுக்குத் தொண்டனாகிய என்னிடம் ஒளி வீசும் ஞான வாள் இருப்பதைக் காண்பாயாக. தண்டாயுதமும் திரிசூலமும் கொண்டு உன்னைத் தாக்கிக் கீழே விழும்படி செய்வேன்.
வேண்டுமென்றால் என் அருகே வந்து பார்க்கவும். ஆதலால் என்னை அணுக வேண்டாம்.

விளக்கக் குறிப்புகள்

அ. அவிரோத ஞானச் சுடர் வாள்...
அவிரோத ஞானம் பின் வரும் திருப்புகழ்ப் பாடல்களில் விளக்கப் படுகின்றது.
(எனதி யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும் இதய பாவனாதீதம்) ---திருப்புகழ் (அமலவாயு).
(நிகரில் பஞ்சபூதமு நினைவு நெஞ்சு மாவியு
நெகிழவந்து நேர்படு மவிரோதம்)---- திருப்புகழ் (நிகரில்பஞ்ச).
(உள்ளது மிலாது மல்லத
விரோதம் உல்லாச விநோதம்)--- திருப்புகழ் (பையரவுபோலு).
யார் ஒருவர் யான், எனது என்னும் ஆணவ நிலை அற்று என்னை
வழிபடுகின்றார்களோ அவர்களுக்கு நான் எளியன் (குற்றேவல் செய்பவன்) என்பது கருத்து.
ஆ. அடா அந்தகா வந்து பார்....
முருகன் பக்தியில் திளைத்திருப்போர்களுக்கு யமனையும் வெருட்ட வல்ல தீரம் வருகின்றது. இதை விளக்கும் கந்தர் அலங்காரச் செய்யுட்கள் பின் வருமாறு.
(மரணப்ர மாதம் நமக்கல்லை) --- பாடல் 21.
(பட்டிக் கடாவில் வரும் அந்த
கா, உனைப் பார் அறிய
வெட்டிப் புறங்கண்டு அலாது) --- பாடல் 64.
(..கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டும்..)--- பாடல் 65.
(....காலன் வெம்பி
வந்திப் பொழுதெ ன்னை என்செய்யலாம்? --- பாடல் 69.
(வாராது அகல்அந்த காவந்த
போது உயிர் வாங்குவனே)--- பாடல் 81.
(பால்ஆ யுதம்வரு மோயம
னோடு பகைக்கினும்) ---- பாடல் 86.

(எமராசன் விட்ட கடையேடு
வந்து இனி என் செயுமே) --- பாடல் 87.
(புவிக்குன் பாத மதைநினை பவர்க்குங் கால தரிசனை
புலக்கண் கூடு மதுதனை அறியாத) ---- திருப்புகழ்(புவிக்குன்).
(நாமார்க்குங் குடியல்லோம்
நமனை அஞ்சோம்)--- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-98-1.

முருகவேள் பன்னிரு திருமுறை (எட்டாந் திருமுறை)
கந்தர் அலங்காரம்

பாகம் 2 - பாடல் 26-50

26.
நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே.

பதம் பிரித்தல்
நீல சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோல குறத்தி உடன் வருவான் குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ள தெளிந்து அறிவார் சிவ யோகிகளே
காலத்தை வென்று இருப்பார் மரிப்பார் வெறும் கர்மிகளே.
பத உரை
நீலச் சிகண்டியில் = நீல மயில்மீது. ஏறும் பிரான் = ஏறுகின்ற பெருமானும். எந்த நேரத்திலும் = எப்போது நினைத்தாலும் (அப்போதெல்லாம்). கோலக் குறத்தி உடன் = அழகிய குறத்தியாகிய வள்ளி நாயகியோடு. வருவான் = வருபவனுமான. குரு நாதன் = குருநாதன். சொன்ன சீலத்தை = கூறிய உத்தம மொழியை. சிவ யோகிகளே = சிவ யோகம் கை வந்த பெரியோர்களே. மெள்ளத் தெளிந்து அறிவார் = மெதுவாக ஆராய்ந்து தெளிந்து அறிவார்கள். காலத்தை வென்று இருப்பார் = கால தத்துவத்தை (பிறப்பு இறப்பை) வெற்றி கொண்டு இருப்பார்கள். வெறும் கர்மிகளே மரிப்பார் = ஏனையோர் வெற்றுக் கருமங்கள் புரிந்து இறந்து போவார்கள்.
சுருக்க உரை
நீல மயில் மீது வருபவனான முருகன், அடியார்கள் எப்போது நினைத்தாலும் அப்போதே அழகிய குற மாதாகிய வள்ளி நாயகியுடன் வருவார். குருநாதராகிய அவர் கூறிய உத்தம மொழிகளைச் சிவயோகிகள் ஆராய்ந்து தெளிந்து அறிவர். பிறப்பு இறப்புகளைக் குறித்த தத்துவங்களையும் கடந்தவர்களாக இருப்பர். மற்றவர்கள் வெறும் கருமங்களைச் செய்து மடிவர்.
விளக்கக் குறிப்புகள்
அ. காலத்தை வென்றிருப்பார்....
காலம் = வித்தியா தத்துவங்கள் ஏழனுள் ஒன்று. அது சரீராதிகளைப் பரிமணித்து அழியச்செய்வது.
(சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்)---- கந்தர் அனுபூதி 41.
ஆ. பிரான் எந்த நேரத்திலும்.....
(எங்கே நினைப்பினும் அங்கேயென்
முன்வந்து எதிர்நிற்பனே) --- கந்தர் அலங்காரம் 103.

27.
ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.
பதம் பிரித்தல்
ஓலையும் தூதரும் கண்டு திண்டாடல் ஒழித்து எனக்கு

காலையும் மாலையும் முன் நிற்குமே கந்தவேள் மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும் கையில் சிவந்த செச்சை
மாலையும் சேவல் பதாகையும் தோகையும் வாகையுமே.

பத உரை

கந்த வேள் = கந்தக் கடவுளின். மருங்கில் கட்டிய = அரையில் கட்டியுள்ள. சேலையும் = ஆடையும். சீராவும் = உடைவாளும். கையில் = தோளில் அணிந்துள்ள. சிவந்த செச்சை மாலையும் = சிவந்த வெட்சிப் பூமாலையும். சேவல் பதாகையும் = கோழிக்கொடியும். தோகையும் = மயிலும். வாகையும் = வெற்றிக்கு அறிகுறியான வேலும். ஓலையும் = யமனது ஓலையையும். தூதரும் = யமனுடைய தூதுவர்களையும். கண்டு = பார்த்து. திண்டாடல் ஒழித்து = திண்டாட்டம் அடைதலை நீக்கி. எனக்குக் காலையும் மாலையும் = எனக்குக் காலையிலும் மாலையிலும். முன் நிற்குமே = எதிரே தோன்றி காட்சி அளிக்கும்.

சுருக்க உரை

கந்த வேளின் அரையில் கட்டிய ஆடையும், உடைவாளும், வெட்சிப் பூ மாலையும், வேலும், யமனுடைய தூதுவர்களைப் பார்த்து நான் துன்பம் அடையும் முன்னர் காலை, மாலை எந்த நேரத்திலும் என் எதிரே தோன்றி காட்சி அளிக்கும்.

விளக்கக் குறிப்புகள்

அ. சீரா = சிறிய கூரிய வாள்.
(சூர் தூளாய் வீழச் சிறுதாரைச்
சீரா வாலே வாளா லேவே
லாலே சேதித் திடும் வீரா)--- திருப்புகழ் (வாராய்பேதாய்).
(நிசாசரக் குலத்தை யிப்படி
சீராவினா லறத்தறுத் தொதுக்கிய பெருமாளே) --- திருப்புகழ் (ஆனாதஞான).
ஆ. ஓலையும் தூதரும்....
(வருபவர்கள் ஓலைகொண்டு நமனுடைய தூதரென்று
மடிபிடியாதாக நின்று தொடர்போது)---- திருப்புகழ்(வருபவர்க).
இப்பாடல் ஒவ்வொரு நாளும் இரண்டு முறைகள் முருகனைத் தியானிக்கத் தகுந்தது.

28.

வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே.

பதம் பிரித்தல்

வேலே விளங்கும் கையான் செய்ய தாளினில் வீழ்ந்து இறைஞ்சி
மாலே கொள இங்ஙன் காண்பது அல்லால் மன வாக்கு செயலாலே
அடைதற்கு அரிதாய் அரு உருவாகி ஒன்று
போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வதுவே.

பத உரை

வேலே விளங்கும் = வேலாயுதம் விளங்கும். கையான் = திருக்கரத்தை உடையவன். செய்ய தாளினில் = சிவந்த திருவடிகளில். வீழ்ந்து இறைஞ்சி = விழுந்து வணங்கிப் போற்றி. மாலே கொள = ஆசை கொள்ள. இங்ஙன் = இவ்வாறு. காண்பது அல்லால் = காணலாமே தவிர. மனம் வாக்குச் செயலாலே = மனம், மொழி, செயல் ஆகியவற்றால். அடைதற்கு = அடைவதற்கு. அரிதாய = முடியாததாய். அரு உருவாகி = உருவம் இன்மை, உரு உடைமை ஆகிய இரண்டு நிலையையும் உடையதாய். ஒன்று போல இருக்கும் பொருளை = ஏக மூர்த்தியாய் விளங்கும் பொருளை. எவ்வாறு புகல்வதுவே = எப்படி விளக்கிச் சொல்ல முடியும் ?

சுருக்க உரை

வேலாயுதம் ஏந்திய கரங்களை உடைய முருகனின் திருவடிகளில் விழுந்து வணங்கிப்போற்றி அவனிடம் ஆசை கொண்டு அவனைக் காணலாமே தவிர, மனம், வாக்கு, செயல்களால் காண்பது முடியாது. அருவும் உருவமுமாக இரண்டு நிலைகளில் உறையும் ஏக மூர்த்தியை மற்று எவ்வாறு விளக்கிக் கூற முடியும் ?

விளக்கக் குறிப்புகள்

அ. செய்ய தாளினில்....
(செவ்வான் உருவில் திகழ்வே லவன்....) ---- கந்தர் அனுபூதி 30.
ஆ. மாலே இங்ஙன் காண்பதல்லால்.....
(அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவனென் றெழுதிக் காட்டொணாதே) ---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-97-10.
இ. மாலே கொள இங்ஙன்.....
(சுராதிபதி மாலய னுமாலொடு சலாமிடு)--- திருப்புகழ்(அவாமரு).
ஈ. அருவுருவாகி ஒன்று போலே இருக்கும்.......
(ஏகத்து உருவும் அருவும் உருவருவுமாகி
பருவ வடிவம் பலவாய்...)---- குமரகுருபரர் (கந்தர் கலி வெண்பா 10-11.)
(உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்..)--- கந்தர் அனுபூதி 51.

29.

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.

பதம் பிரித்தல்

கடத்தில் குறத்தி பிரான் அருளால் கலங்காத சித்த
திடத்தில் புணை என யான் கடந்தேன் சித்ர மாதர் அல்குல்
படத்தில் கழுத்தில் பழுத்த செவ்வாயில் பணையில் உந்தி
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெம் காம சமுத்திரமே.

பத உரை

சித்ர மாதர் அல்குல் படத்தில் = அழகிய விலை மாதர்களின் பாம்பின் படம் போன்ற அல்குலிலும். கழுத்தில் = கழுத்திலும். பழுத்த செவ் வாயில் = செம்மை வாய்ந்த வாயிலும். பணையில் = மூங்கில் போன்ற தோள்களிலும். உந்தித் தடத்தில் = தொப்புள் என்னும் இடத்திலும். தனத்தில் = கொங்கைகளிலும். கிடக்கும் = ஆசை கொண்டு கிடக்கும். வெம் = கொடிய. காம சமுத்திரமே = காமம் என்னும் கடலை. கடத்தில் = வள்ளி மலைச் சாரலில் வாசம் செய்யும். குறத்தி பிரான் அருளால் = குறமகளான வள்ளி நாயகனின் திருவருளால். கலங்காத = சலனம் இல்லாத. சித்தம் = மனோ திடத்தை. புணை என = தெப்பம் என்று கொண்டு. யான் கடந்தேன் = நான் கடந்து நின்றேன்.

சுருக்க உரை

விலை மாதர்கள் அங்க அழகில் ஆசை கொண்டு மயங்கிக் கிடந்த நான் கொடிய காமம் என்னும் கடலை, வள்ளிமலைச் சாரலில் வாழ்ந்த குற மகள் வள்ளியின் நாயகன் முருகனின் திருவருளைத் தெப்பமாகக் கொண்டு கடந்து சென்றேன்.

விளக்கக் குறிப்புகள்

அ. சித்ர அல்குல் படத்தில்..... .
(வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
பதைக்க வதைக்குங் கண்ணார்க்கு...)--- கந்தர் அலங்காரம் 32..
(மட்டேர்குழல் மங்கையர் மையல் வலைப்

பட்டுசேல் படும் பரிசென் றொழிவேன்) --- கந்தர் அனுபூதி 9.

30.
பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென்ப தாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

பதம் பிரித்தல்

பால் என்பது மொழி பஞ்சு என்பது பதம் பாவையர் கண்
சேல் என்பது ஆக திரிகின்ற நீ செந்திலோன் திருக்கை
வேல் என்கிலை கொற்ற மயூரம் என்கிலை வெட்சி தண்டை
கால் என்கிலை மனமே எங்ஙனே முத்தி காண்பதுவே.

பத உரை

மனமே. மொழி பால் என்பது = (பெண்களின்) பேச்சு பால் போல் இருக்கின்றது. பதம் பஞ்சு என்பது = அடிகள் பஞ்சு போல் மென்மையாக இருக்கின்றது. கண் சேல் என்பது = கண் சேல் மீன் போல் விளங்குகின்றது. ஆகத் திரிகின்ற நீ = என்று இவ்வாறாக வர்ணித்துத் திரிகின்ற நீ.
செந்திலோன் திருக்கை வேல் = திருச்செந்தூரில் உறையும் இறைவன் கையில் விளங்கும் வேல். என்கிலை - என்று சொல்லி போற்றவில்லை. கொற்ற மயூரம் = வீரம் உள்ள மயில். என்கிலை = என்று துதிக்கவும் இல்லை. வெட்சித் தண்டைக் கால் = வெட்சிப் பூக்கள் சூழ்ந்த தண்டை அணிந்த திருவடிகள். என்கிலை = என்று வாழ்த்தவும் இல்லை. முத்தி காண்பது எங்ஙனே = இப்படி இருந்தால் முத்தி நிலையை எப்படி நான் காண முடியும் ?

சுருக்க உரை

விலை மாதர்களின் பேச்சு பால் போல இருக்கின்றது. அவர்கள் அடிகள் பஞ்சு போல் மென்மையாக இருக்கின்றன. கண் சேல் மீன் போல் இருக்கின்றது. இவ்வாறு வர்ணித்துத் திரிகின்ற மனமே,
நீ செந்தில் ஆண்டவன் கையில் ஏந்தும் வேலைப் போற்றவில்லை. மயிலைத் துதிக்கவில்லை. திருவடிகளை வாழ்த்தவில்லை. இப்படி இருந்தால் முத்தி நிலையை எப்படிக் காண முடியும் ?

விளக்கக் குறிப்புகள்

அ. பால் என்பது மொழி பஞ்சென்பது.....
(பாலோ தேனோ பாகோ வானோர்.....) --- திருப்புகழ் (பாலோதேனோ).
(பஞ்சான தடாகம் விடாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி) --- திருப்புகழ் (அனிச்சம்).
(கொலைகொண்ட போர்விழி கோலோ வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ....) --- திருப்புகழ் (கொலைகொண்ட).

31.
பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே.

பதம் பிரித்தல்

பொக்க குடிலில் புகுதா வகை புண்டரீகத்தினும்
செக்க சிவந்த கழல் வீடு தந்தருள் சிந்து வெந்து
கொக்கு தறிபட்டு எறிபட்டு உதிரம் குமு குமு என
கக்க கிரி உருவ கதிர்வேல் தொட்ட காவலனே.

பத உரை

சிந்து = கடல். வெந்து = வற்றிப் போய். கொக்கு = மாமரமாய் நின்ற சூரன். தறி பட்டு எறி பட்டு = துண்டு பட்டு சிதறி எறியப் பட்டு. உதிரம் = (உடலினின்று) இரத்தம். குமு குமு எனக் கக்க = குமு குமு என்று சொரியவும். கதிர் வேல் = ஒளி வீசும் வேலை. கிரி உருவ = ஏழு மலைகளிலும், கிரௌஞ்ச மலையிலும் ஊடுருவவும். தொட்ட காவலனே = செலுத்திய அரசே.
பொக்கம் = பொய்யான. குடிலில் = நிலைத்திராத குடிசையாகிய உடலில். புகுதா வகை = நான் மீண்டும் புகா விதமாக. புண்டரீகத்தினும் = செந்தாமரையினும். செக்கச் சிவந்த = மிகவும் சிவந்த. கழல் வீடு = உனது திருவடியாகிய முத்தி இன்பத்தை. தந்து அருள் = தந்து அருள்வாயாக.
சுருக்க உரை
கடல் வற்றும்படி மாமர வடிவமாக வந்த சூரனைத் துண்டித்து அவன் உடலினின்றும் இரத்தம் சொரியவும், ஏழு மலைகளும், கிரௌஞ்சமும் பொடிபடவும் வேலைச் செலுத்திய அரசே.
நிலையில்லாத இந்த உடலாகிய குடிலில் நான் மீண்டும் புகா வண்ணம் உன்னுடைய செந்தாமரையினும் சிவந்த திருவடி இன்பத்தைத் தந்து அருளுக.
விளக்கக் குறிப்புகள்
அ. பொக்கக் குடிலில்....
(மலஞ்சோரு மொன்பது வாயிற் குடில்) ---- மாணிக்கவாசகர் திருவாசகம் (சிவ புராணம்) 54.
ஆ. குடிலில் புகுதா வகை......
(மட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே கள்ளப்
புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே) ---- மாணிக்கவாசகர் திருவாசகம் (சிவ புராணம்) 87.
(இனி ஒரு காயத்திற் புக்குப் பிறவாமல்
போம்வழி நாடுமின்)---- திருமந்திரம் 2068.
இ. சிந்து வெந்து கொக்குத் தறிபட்டு......
சூர் மா தறிபட்டது. கடல் வெந்தது. கிரௌஞ்சம் உருவப்பட்டது.
இது ஆணவம், கருமம், மாயை என்ற மூன்று மலங்களும் வேலைத் தியானித்தால் ஒழியும் என்பதைக் குறிக்கும். சூரன் = ஆணவம். கடல் = கருமம். கிரௌஞ்சம் = மாயை.

32.
கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங்கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே.
பதம் பிரித்தல்
கிளைத்து புறப்பட்ட சூர் மார்புடன் கிரி ஊடுருவ
தொளைத்து புறப்பட்ட வேல் கந்தனே துறந்தோர் உளத்தை
வளைத்து பிடித்து பதைக்க பதைக்க வதைக்கும் கண்ணார்க்கு
இளைத்து தவிக்கின்ற என்னை எந்நாள் வந்து இரட்சிப்பையே.
பத உரை
கிளைத்துப் புறப்பட்ட = சுற்றத்தாருடன் போருக்கு எழுந்த. சூர் மார்புடன் = சூரனுடைய மார்புடன். கிரி = (அவனுக்கு அரணாக இருந்த ஏழு) மலைகளும். ஊடுருவத் தொளைத்துப் புறப்பட்ட = பட்டு அழியும்படி ஊடுருவிப் பிளந்து வெளிவந்த. வேல் கந்தனே = வேலை ஏந்தும் கந்தப் பெருமானே.
துறந்தோர் = துறவிகளின். உளத்தை = மனதை. வளைத்துப் பிடித்து = வளைத்திழுத்துப் பிடித்து. பதைக்கப் பதைக்க வதைக்கும் = அந்த உள்ளம் பதை பதைக்க வாட்டும். கண்ணார்க்கு = கண்களை உடைய விலை மாதர்களுக்கு.

இளைத்துத் தவிக்கின்ற = வாடித் தவிக்கும். என்னை = அடியனாகிய என்னை.
எந்நாள் வந்து இரட்சிப்பையே = என்று வந்து காப்பாற்றுவாய்.

சுருக்க உரை

சுற்றத்தாருடன் போருக்கு எழுந்த சூரனும் அவனுக்கு அரணாயிருந்த ஏழு மலைகளும் அழிபட எய்திய வேலைக் கையில் ஏந்திய கந்தப் பெருமானே. துறவிகளின் உள்ளத்தையும் பற்றி இழுக்கும் விலை மகளிர்களுக்காகத் தவிக்கும் என்னை என்று வந்து காப்பாற்றுவாய்.

விளக்கக் குறிப்புகள்

அ. கிளைத்துப் புறப்பட்ட சூர்....
(கிளைபட் டெழுசூர் உரமுங் கிரியுங்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே) ---- கந்தர் அனுபூதி 4.
ஆ. துறந்தோர் உளத்தை.......
(துறவினர் சோரச் சோர நகைத்து)--- திருப்புகழ் (அரிசனவாடை).
விலை மாதர் கண்கள் மன உறுதி படைத்திராதவர்கள் உள்ளத்தைக் காம நோய்வாய்ப் படுத்தும் என்பது கருத்து.

33.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

பதம் பிரித்தல்

முடியா பிறவி கடலில் புகார் முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார் வெற்றி வேல் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலம் அடங்க
பொடியாக்கிய பெருமாள் திரு நாமம் புகல்பவரே.

பத உரை

வெற்றி வேல் பெருமாள் = வெற்றி வேலை ஏந்திய கந்தப் பெருமான். அடியார்க்கு நல்ல பெருமாள் = தன்னைத் துதிப்பவர்களுக்கு நலம் வழங்கும் பெருமாள். அவுணர் குலம் அடங்க = அசுரர்களின் குலம் முழுதும் அழியும்படி. பொடியாக்கிய பெருமாள் = பொடியாகும்படி ஆக்கிய பெருமாளின். திரு நாமம் புகல்வர் = முருகவேளின் திருப் பெயர்களைச் சொல்லுபவர்கள்.
முடியா = ஓயாத. பிறவிக் கடலில் புகார் = பிறவி என்னும் கடலில் புகுந்து அலைச்சல் உற மாட்டார்கள்.
முழுதும் கெடுக்கும் = எல்லாவற்றையும் கெடுக்கின்ற. மிடியால் = வறுமையால். படியில் = இந்தப் பூமியில். விதனப் படார் = துன்பம் அடைய மாட்டர்கள்.

சுருக்க உரை

அசுரர் குலத்தை அடியோடு அழித்த வெற்றி வேலன், தன்னைத் துதிக்கும் அடியவர்களுக்கு நலம் வழங்குவார். அவனுடைய திருப் பெயர்களைச் சொல்லுபவர் ஓயாத பிறவிகள் எடுக்க மாட்டார்கள். வறுமையால் வாட மாட்டார்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. முடியாப் பிறவிக் கடலில்.....
(....திரை யேழே போலெழு
பிறவிமாக் கடல்....)---- திருப்புகழ் (நிருதரார்க்கோரு).
(பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்) ---- திருக்குறள் 10.
ஆ. முழுதுங் கெடுக்கும் மிடியால் படியில்....
(நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்)---திருக்குறள் 1045.
(...அடியந் தமிலா அயில்வேல் அரசே

மிடியென்றொரு பாவி வெளிப்படினே)---- கந்தர் அனுபூதி 19.
(வறுமையாகிய தீயின்மேற் கிடந்து) ---- திருப்புகழ் (அறிவிலாதவ)
இ. திரு நாமம் புகல்பவரே......
(கருவூருளவண்ணலார் அடியார்க்கு நல்லரே)--- சம்பந்தர் தேவாரத் திருமுறை 2-28-3.
(இளையவ மூதுரை மலைகிழ வோனெனவெள்ள மெனக் கலந்து
நூறாயிர பேதஞ் சாதமொ ழிந்தவாதான்..)---- திருப்புகழ் (வதனசரோருக)
(தெய்வ மணம்புணர் தீகால் வெளி செய்த தேவரைந்த.....)--- கந்தர் அந்தாதி 30.
(இசைபயில் சடாக்ஷ ரமதாலே இகபர சௌபாக்யம் அருள்வாயே)---- திருப்புகழ் (வசனமிக).

34.
பொட்டாக வெற்பைப் பொருதகந் தாதப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே.

பதம் பிரித்தல்
பொட்டாக வெற்பை பொருத கந்தா தப்பி போனது ஒன்றற்கு
எட்டாத ஞான கலை தருவாய் இரும் காம விடாய்
பட்டார் உயிரைத் திருகி பருகி பசி தணிக்கும்
கட்டாரி வேல் விழியார் வலைக்கே மனம் கட்டுண்டதே.

பத உரை
பொட்டாக - தொளைபடும்படி. வெற்பை = கிரௌவுஞ்ச மலையுடன். பொருத = சண்டை செய்த. கந்தா = கந்தப் பெருமானே.
இருங்காம விடாய் - பெரிய காமம் என்னும் தாகம். பட்டார் - கொண்டவர்.
ஆருயிரை = அருமையான உயிரை.
திருகிப் பருகி = திருகிப் பறித்து, உண்டு. பசி தணிக்கும் = பசி ஆற்றுகின்ற.
கட்டாரி = ஈட்டி போன்றதும். வேல் விழியார் = வேல் போன்றதுமான கண்களை உடைய விலை மாதர்களின். வலைக்கே = வலையில்.
மனம் கட்டுண்டது = என் மனம் கட்டுப் பட்டிருக்கின்றது.
தப்பிப்போனது ஒன்றற்கு = இங்ஙனம் நன்னெறியைக் கைவிட்ட இந்த ஒருயிர்க்கு.
எட்டாத = யாருக்கும் எட்ட முடியாத. ஞான கலை தருவாய் = ஞான கலையைத் தருவாயாக.

சுருக்க உரை
கிரௌஞ்ச மலை தொளை படும்படி போர் செய்த கந்தப் பெருமானே. பெரிய காமம் என்னும் தாகம் உடையவர்கள் உயிரைப் பருகும் விலை மாதர்கள் வலையில் என் மனம் கட்டுப்பட்டு இருக்கின்றது. இங்ஙனம் தப்பான வழியில் சென்று நன்னெறியைக் கைவிட்ட எனக்கு யாருக்கும் எட்டாத ஞான கலையைத் தந்து அருளுக.

விளக்கக் குறிப்புகள்
அ. பொட்டாக வெற்பைப் பொருத....
(சாடு குன்றது பொட்டெழ மற்றும்......)---- திருப்புகழ் (கோலகுங்கும).
(மின்னயில் கொண்டொரு வெற்புப் பொட்டுப்பட) ----திருப்புகழ் (வம்பறாச்சில).
(சூர்பொட்டாகக் குத்திய வேலா)---- திருப்புகழ் (உற்பாதப்பூ).
ஆ. தப்பிப்போனது ஒன்றற்கு....
தம்மைப் பற்றி அஃறிணையில் ஒன்றற்கு எனக் குறிப்பிடுகிறார். இது திணைவழுவமைதி.
(இழிப்பினும் பால்திணை யிழுக்கினும் இயல்பே)---- நன்னூல் 379.
இ. எட்டாத ஞான கலை.....

(கதறிய கலைகொடு சுட்டாத் தீர்பொருள்
பதறிய சமயிகள் எட்டாப் பேரொளி) --- திருப்புகழ் (கதறியகலை).

35.
பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே.
பதம் பிரித்தல்
பத்தி துறையில் இழிந்து ஆநந்த வாரி படிவதனால்
புத்தி தரங்கம் தெளிவது என்றோ பொங்கு வெம் குருதி
மெத்தி குதி கொள்ள வெம் சூரனை விட்ட சுட்டியிலே
குத்தி தரம் கொண்டு அமராவதி கொண்ட கொற்றவனே.
பத உரை
பத்தித் துறையில் இழிந்து = பத்தி என்கின்ற துறையில் இறங்கி. ஆனந்த வாரி = ஆனந்தம் என்கின்ற கடலில். படிவதனால் = குளித்து அனுபவிப்பதால உண்டாகும்.
புத்தித் தரங்கம் - அறிவு அலைகள்
தெளிவது என்றோ = தெளிவு அடைவது எந்நாளோ.
பொங்கும் = பொங்கி எழுகின்ற. வெம் குருதி = வெப்பம் உள்ள இரத்தம். மெத்திக் குதி கொள்ள = நிறைந்து கொப்புளித்துக் குதித்து. வெம் = கொடிய. சூரனை = சூரனை. விட்ட சுட்டியில் - (விளங்குகின்ற) நெற்றியில் (அல்லது குத்தீட்டியினால்). குத்தி = குத்தி. தரம் கொண்டு = மேன்மை பெற்று. அமராவதி கொண்ட - தேவர் உலகை வென்று அதை மீட்டுத் தந்தருளிய. கொற்றவனே = வெற்றியாளனே.
சுருக்க உரை
பொங்கி எழுகின்ற இரத்தம் நிறைந்து வரும்படி சூரனை நெற்றியில் குத்தி, மேன்மை பெற்று, தேவர்கள் விண்ணுலகைப் பெற உதவிய வெற்றியாளனே. பத்தித் துறையில் இறங்குவதால் உண்டாகும் ஆனந்தக் கடலில் மூழ்கி ஞான அலைகளைப் பெற்றுத் தெளிவு பெறுவது எந்நாளோ?
விளக்கக் குறிப்புகள்
அ. மெத்திக் குதிகொள்ள......
மெத்தி = நிறைந்து, மிகுந்து.
(......விடமெத்திய நீலக்
கடிய கணை)--- திருப்புகழ் (சொரியமுகி).
சுட்டி = நெற்றி அணி. ஆகுபெயரால் நெற்றியைக் குறிக்கின்றது.

36.
சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.
பதம் பிரித்தல்
சுழித்து ஓடும் ஆற்றின் பெருக்கு ஆனது செல்வம் துன்பம் இன்பம்
கழித்து ஓடுகின்றது எக்காலம் நெஞ்சே கரிக் கோட்டு முத்தை
கொழித்து ஓடும் காவிரி செங்கோடன் என்கிலை குன்றம் எட்டும்
கிழித்து ஓடும் வேல் என்கிலை எங்ஙனே முத்தி கிட்டுவதே.
பத உரை
நெஞ்சே = மனமே. செல்வம் = பொருட்செல்வம். சுழித்து ஓடும் = சுழி சுழித்துக் கொண்டு ஓடுகின்ற. ஆற்றின் பெருக்கு ஆனது = ஆற்றின் வெள்ளத்தைப்

போன்றது. துன்பம் இன்பம் = துன்பம் இன்பம் இவைகளை. கழித்து = பொருட்படுத்தாது. ஓடுகின்றது = காலத்தைக் கழிப்பது. எக்காலம் = எந்தக் காலத்தில்.
கரிக்கோட்டு முத்தை = யானையின் தந்தத்தில் இருந்து சிதறிய முத்துக்களை. கொழித்து ஓடும் காவிரி = வாரி ஒதுக்கி ஓடிவரும் காவிரியாறு சூழ்ந்து வரும். செங்கோடன் என்கிலை = திருச் செங்கோட்டு வேலன் என்று போற்றுவதில்லை. குன்றம் எட்டும் = மலைகள் எட்டையும். கிழித்து ஓடும் = பிளந்து செல்லும். வேல் என்கிலை = வேலாயுதம் என்று போற்றுவதில்லை. எங்ஙனே முத்தி கிட்டுவது = இப்படி இருந்தால் முத்தி உனக்குக் எப்படிக் கிட்டும் ?

சுருக்க உரை

மனமே. பொருட் செல்வம் சுழித்து ஓடுகின்ற ஆற்று வெள்ளத்தைப் போல நிலையாதத் தன்மை உடையது. ஆதலால் வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவித்து, வெறுத்து, பற்று நீங்கிய நிலையில் வாழ்வது எந்த நாளோ ?
முத்துக்களை வாரி ஒதுக்கி ஓடிவரும் காவிரி ஆறு ஓடும் திருச் செங்கோட்டு வேலனை நீ போற்றுவது இல்லை. மலைகளைப் பிளந்து ஓடும் வேலாயுதம் என்று கூறுவதும் இல்லை. இப்படி இருந்தால் முத்தி கிட்டுவது எப்படி ?

விளக்கக் குறிப்புகள்

அ. ஆற்றின் பெருக்கானது செல்வம்....
(துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக் கால் போல வரும்) --- நாலடியார் 2
(நிறை செல்வம் நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்)---- நீதி நெறி - காப்பு.
ஆ. துன்பம் இன்பம் கழித்து ஓடுகின்ற....
(இன்பம் விழையான் இடும்பை இயல்பெ ன்பான்
துன்பம் உறுதல் இலன்)---- திருக்குறள் 628.
இ. முத்தைக் கொழித்தோடு.....
(திரைகளெல்லாம்...முத்தொடு பொன்வரன்றிக்....
காவிரி கால்பொரு) --- சம்பந்தர் தேவாரத் திருமுறை 1-5-3.
(மத்தயானையின் கோடும்...வாரித் தத்துநீர்ப் பொன்னி) --- சம்பந்தர் தேவாரத் திருமுறை 2-38-1.
(பெருங்களிற்றின் முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று)---
திருமுருகாற்றுப்படை 305.

37.

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடு டூடு டுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே.

பதம் பிரித்தல்

கண்டு உண்ட சொல்லியர் மெல்லியர் காம கலவி கள்ளை
மொண்டு உண்டு அயர்கினும் வேல் மறவேன் முதுகூளி திரள்
டுண்டுண் டுடுடு டூடு டுடுடு டுண்டுடுண்டு
டிண் டிண் என கொட்டி ஆட வெம் சூர் கொன்ற ராவுத்தனே.

பத உரை

கண்டு உண்ட - கற்கண்டு போன்ற. சொல்லியர் = சொற்களைப் பேசும் விலைமாதர்கள். காமக் கலவிக் கள்ளை = காமப் புணர்ச்சி என்னும் கள்ளினை. மொண்டு உண்டு = மொண்டு நுகர்ந்து. அயர்கினும் = நான் தளர்ந்த போதிலும். வேல் மறவேன் = உன் வேலாயுதத்தை மறக்க மாட்டேன்.

முது கூளித் திரள் = வயதான பேய்க் கூட்டங்கள். டுண்....எனக் கொட்டி = சப்தமான வாத்தியங்களைக் கொட்டி முழக்கி. ஆட = கூத்தாட. வெம் = கொடிய. சூர் = சூரனை. கொன்ற ராவுத்தனே = கொன்ற வீரனே.

சுருக்க உரை

பழைய பேய்க் கூட்டங்கள் சப்தமான வாத்தியங்கள் முழங்க கூத்தாடும்படி கொடிய சூரனைக் கொன்ற வீரனே.

கற்கண்டு போன்று இனிக்கும் சொற்களைப் பேசும் விலை மாதர்கள் வழங்கும் காமப் புணர்ச்சி என்னும் கள்ளை மொண்டு உண்டு நான் தளர்ந்த போதிலும் உன் வேலாயுதத்தை மறக்க மாட்டேன்.

விளக்கக் குறிப்புகள்

அ. வேல் மறவேன்.....

(அநுராகப் பரவை படியினும்.......இரு
சரணமு மறவேனே) ---- திருப்புகழ் (மகரமெறி).

ஆ. ராவுத்தனே....

வட மொழியைத் தவிர மற்ற மொழிச் சொற்களையும் (ராவுத்தன், சலாமு) பல இடங்களில் கையாண்டு இருக்கிறார். ராவுத்தன் = குதிரை வீரன்.

(..இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே)---- கந்தர் அலங்காரம் 50.

38.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

பதம் பிரித்தல்

நாள் என் செயும் வினை தான் என் செயும் எனை நாடி வந்த
கோள் என் செயும் கொடும் கூற்று என் செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

பத உரை

குமரேசர் இரு தாளும் = குமரக் கடவுளின் இரண்டு திருவடிகளும். சிலம்பும் = (அந்தத் திருடியில் விளங்கும்) சிலம்பும். சதங்கையும் = சதங்கையும். தண்டையும் = தண்டையும். சண்முகமும் = ஆறு முகங்களும். தோளும் = தோளும். கடம்பும் = கடப்ப மாலையும். எனக்கு முன் வந்து தோன்றிடினே = எனக்கு முன்னே வந்து காட்சி கொடுக்குமானால்.

நாள் என்செயும் = கெட்ட நட்சத்திரங்கள் என்னை என்ன செய்யக் கூடும். வினை தான் = என்னுடைய தீய வினைகளும்.. என் செயும் = என்ன செய்ய முடியும். எனை நாடி வந்த கோள் = என்னைத் தேடி வரும் கெட்ட கிரகங்கள். என் செயும் = என்ன செய்ய முடியும். கொடும் கூற்று = கொடிய யமன். என் செயும் = என்ன செய்ய முடியும். (ஒரு கெடுதலும் செய்ய முடியாது என்றபடி).

சுருக்க உரை

குமரக் கடவுளின் இரண்டு திருவடிகளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும், ஆறு முகமும் என் கண் முன்னே தோன்றினால், என்னுடைய கெட்ட நட்சத்திரங்களும், தீய வினைகளும், தீமை விளைவிக்கும் கிரகங்களும், யமனும் என்னை ஒன்றும் செய்ய முடியாது.

விளக்கக் குறிப்புகள்

அ. நாள் என் செயும்......

(வேயுறு தோளிபங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசு அறு திஙபகள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்து அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசு அறும் நல்ல நல்ல அவை நல்ல
அடியார் அவர்க்கு மிகவே)) --- சம்பந்தர் தேவாரத் திருமுறை (கோளறு திருப்பதிகம்) 2-85-1.
(..சேயவன் புந்தி பணிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றை)--- கந்தர் அந்தாதி 48.
(மண்பாதலம் புக்கு மால் கடல் மூடி மற்றேழுலகும்
விண்பால் திசை கெட்டு இரு சுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கு ஒன்று கண்டோம் பாதிரிப் புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடராவன் கழலிணையே)---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-94-9.

39.
உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னிலொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே.
பதம் பிரித்தல்
உதித்து ஆங்கு உழல்வதும் சாவதும் தீர்த்து எனை உன்னில் ஒன்றா
விதித்து ஆண்டு அருள் காலம் உண்டோ வெற்பு நட்டு உரக
பதி தாம்பு வாங்கி நின்று அம்பரம் பம்பரம் பட்டு உழல
மதித்தான் திரு மருக மயில் ஏறிய மாணிக்கமே.
பத உரை
வெற்பு = மந்தர மலையை. நட்டு = மத்தாக நட்டு. உரகபதி = ஆதிசேடனை (அல்லது வாசுகியை).
தாம்பு = கயிராக. வாங்கி = வளைத்துக் கட்டி.. அம்பரம்= பாற்கடலை. பம்பரம் பட்டு உழல = பம்பரம் சுழல்வது போல் உழலத் திரியவைத்து. மதித்தான் = கடைந்தவன் ஆகிய திருமாலின். திரு மருகா = அழகிய மருகனே. மயில் ஏறிய மாணிக்கமே = மயிலின் மீது ஏறிவரும் மாணிக்கமே.
உதித்தலையும் = (உலகில்) பிறப்பதையும். ஆங்கு உழல்வதும் = அங்கு அலைச்சல் உறுவதையும். சாவதும் = பின்னர் சாதலையும். தீர்த்து = ஒழித்து. எனை = என்னை. உன்னில் ஒன்றாக விதித்து = உன்னோடு ஒன்றாக ஐக்கியம் ஆகும் வண்ணம் விதியை விதித்து. ஆண்டு = ஆட்கொண்டு.. அருள் காலம் உண்டோ = திருவருளைப் பாலிக்கும் ஒரு காலம் எனக்குக் கிட்டுமா.
சுருக்க உரை
மந்தர மலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் வளைத்துக் கட்டி, பாற்கடலைப் பம்பரம் போலக் கடைந்தவராகிய திருமாலின் அழகிய மருகனே. நான் இவ்வுலகில் பிறப்பதையும், அலைச்சல் உறுவதையும், பின் இறப்பதையும் ஒழித்து, உன்னோடு ஐக்கியமாகும்படி விதித்து, என்னை ஆண்டு கொண்டு, எனக்கு அருள் பாலிக்கும் ஒரு நாள் கிடைக்குமா.
விளக்கக் குறிப்புகள்
அ. எனை உன்னில் ஒன்றாக......
(......இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயுநானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள்....) ---- திருப்புகழ் (அறுகுநுனி).
(நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க
நேராக வாழ்வதற்குன் அருள்கூர) --- திருப்புகழ் (நாவேறுபாம).
ஆ. உரகபதித் தாம்பு வாங்கி....
மத்தின் கயிறாக ஆதிசேடன் என்றும், வாசுகி என்றும் புராணங்கள் கூறுகின்றன.

(திருப்புகழ் (குமரகுருபரகுணதர), (வேடர்செழு).

40.
சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.
பதம் பிரித்தல்
சேல் பட்டு அழிந்தது செந்தூர் வயல் பொழில் தேம் கடம்பின்
மால் பட்டு அழிந்தது பூங் கொடியார் மனம் மா மயிலோன்
வேல் பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்
கால் பட்டு அழிந்தது இங்கு என் தலை மேல் அயன் கை எழுத்தே.
பத உரை
செந்தூர் வயல் பொழில் = திருச் செந்தூரில் உள்ள வயல் நிறைந்த சோலைகள். சேல் பட்டு அழிந்தது = சேல் மீன்கள் அழிக்க அழிந்து போயின. பூங் கொடியார் மனம் = பூங்கொடி போன்ற மாதர்களுடைய மனம். தேம் கடம்பின் = முருகனுடைய இனிய கடப்ப மலை கிடைக்க வேண்டுமே என்னும். மால் பட்டு அழிந்தது = ஆசை கலக்கம் செய்ய அதனால் சோர்வுற்றது. மா மயிலோன் = அழகிய மயில் வாகனனாகிய முருகனுடைய. வேல் பட்டு = (திருக்கரத்தில்) ஏந்திய வேல் பாய்ந்ததால். வேலையும் = கடலும். சூரனும் வெற்பும் = சூரனும் எழுகிரியும் கிரௌஞ்ச மலையும். அழிந்தது = பொடி பட்டன. அவன் கால் பட்டு = அந்த முருகனின் திருவடிகள் பட்டதனால். இங்கு = இங்கே. என் தலை மேல் = என்னுடைய தலை மேல். அயன் கை எழுத்து அழிந்தது = பிரமன் எழுதியிருந்த விதி எழுத்துக்கள் அழிந்து போயின.
சுருக்க உரை
திருச்செந்தூரில் உள்ள சோலைகள் சேல் மீன்களால் அழிந்தன. மாதர்கள் மனம் முருகனின் கடப்ப மலை கிடைக்கவில்லையே என்ற ஆசையால் சோர்வடைந்தன. மயில் வாகனனாகிய முருகன் கையில் ஏந்திய வேலால் கடலும், சூரனும், ஏழு கிரிகளும் அழிந்தன. அந்த முருகனின் கால் பட்டு என் தலையில் பிரமன் எழுதிய தலை எழுத்தும் அழிந்தது.
விளக்கக் குறிப்புகள்
அ. வயல் பொழில் அழிந்தது = மண்ணாசை ஒழிந்ததைக் குறிக்கும்.
பூங்கொடியார் மனம் அழிந்தது = பெண்ணாசை அழிந்ததைக் குறிக்கும்.
வெற்பு அழிந்தது = பொன்னாசை அழிந்ததைக் குறிக்கும்.
வேலை அழிந்தது = பிறவிக் கடல் அழிந்ததைக் குறிக்கும்.
சூரன் அழிந்தது = ஆணவ மலம் அழிந்ததைக் குறிக்கும்.
அயன் கையெழுத்து = முருகன் திருவடிப் பேற்றினை அடைந்ததைக் குறிக்கும்.
(தீட்டப் படரவினி யுன்னாலென் சென்னி கறைப் பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்) ---- கந்தர் அந்தாதி 72.
(பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்) --- திருக்குறள் (10).

41.
பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலேகொண் டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.
பதம் பிரித்தல்
பாலே அனைய மொழி மாதர் தம் இன்பத்தை பற்றி என்றும்

மாலே கொண்டு உய்யும் வகை அறியேன் மலர் தாள் அருள்வாய்
காலே மிக உண்டு காலே இலாத கண பணத்தின்
மேலே துயில் கொள்ளு மாலோன் மருக செவ் வேலவனே.

பத உரை

காலே மிக உண்டு = காற்றையே நிரம்ப உண்டு. காலே இலாத = கால்களே இல்லாத. கணபணத்தின் மேலே = கூட்டமான படங்களை உடைய ஆதிசேடன் மீது. துயில் கொள்ளும் = தூங்குகின்ற. மாலோன் மருக = திருமாலின் மருகனே. செவ் வேலவனே = சிவந்த வேலாயுதனே.
பாலே அனைய = பால் போல் இனிக்கின்ற. மாதர் தம் இன்பத்தை = விலை மாதர்களால் கிடைக்கும் இன்ப சுகத்தை. பற்றி = பற்றியவனாக. என்றும் = எந்நாளும். மாலே கொண்டு - காம மயக்கம் உடையவனாய் இருந்து. உய்யும் வகை அறியேன் = அம்மயக்கம் நீங்கிப் பிழைக்கும் வழியை அறிகின்றிலேன். மலர்த் தாள் தருவாய் = உன்னுடைய மலரான திருவடிகளைத் தந்து அருளுக.

சுருக்க உரை

கால்கள் இல்லாத படங்களை உடைய ஆதிசேடன் மீது துயில் கொள்ளும் திருமாலின் மருகனே. வேலாயுதனே.
விலை மாதர்களின் இன்ப சுகத்தைப் பற்றிக் காம மயக்கம் உடையவனாக இருந்து அந்த மயக்கத்தினின்று நீங்கும் வகை அறியாதவன் நான். உன்னுடைய மலர்த் திருவடிகளைத் தந்து அருள் புரிய வேண்டும்.

விளக்கக் குறிப்புகள்

அ. காலே மிக உண்டு.....காலே இலாத...
இதில் உள்ள பொருள் அழகு உணரத் தகுந்தது. விரோத அணி, அதிசய அணி, முரண் அணி இவை மூன்றும் அமைந்துள்ளன.

42.

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே.

பதம் பிரித்தல்

நிணம் காட்டும் கொட்டிலை விட்டு ஒரு வீடு எய்தி நிற்க நிற்கும்
குணம் காட்டி ஆண்ட குரு தேசிகன் அம் குற சிறு மான்
பணம் காட்டும் அல்குற்கு உருகும் குமரன் பத அம் புயத்தை
வணங்கா தலை வந்து இது எங்கே எனக்கு இங்ஙன் வாய்த்ததுவே.

பத உரை

நிணம் காட்டும் கொட்டில் - மாமிசத்தால் விளங்கும் சிறு குடிலாகிய இவ்வுடலை. விட்டு = விட்டு ஒழித்து. நிற்க = நிலைத்திருக்கவும். நிற்கும் குணம் காட்டி = நிலையாய் விளங்குகின்ற தன்மையை உடைய உபதேசப் பொருளைப் போதித்து. ஆண்ட குரு தேசிகன் = என்னை ஆண்டருளிய குரு மூர்த்தி.
அம் = அழகிய. குற சிறு மான் = குற மகளும், மான் போன்றவளுமாகிய வள்ளி நாயகியின். பணம் காட்டும் அல்குற்கு = பாம்பின் படம் போன்ற. அல்குலுக்கு. உருகும் = உருகி நின்ற. குமரன் = குமார மூர்த்தியான முருகனுடைய. பத அம் புயத்தை = பாதத் தாமரைகளுக்கு. வணங்காத் தலை = வணக்கம் செய்யாத தலை ஒன்று. வந்து = வந்து உளதே. இது எங்கே எனக்கு இங்ஙன் வாய்த்துவே = இந்த பயனற்ற தலை எங்கிருந்து எனக்கு இங்ஙனம் ஏற்பட்டது.

சுருக்க உரை

மாமிசத்தால் ஆகிய இந்த உடலாகிய குடிலை விட்டு ஒழித்து நிலையானதான உபதேசத்தை எனக்குப் போதித்து என்னை ஆண்டருளிய குரு நாதரே.
அழகிய குறமகளாகிய வள்ளியின் அல்குலுக்கு உருகும் முருகனுடைய தாமரைத் திருவடிகளை வணங்காத தலை எனக்கு எங்ஙனம் வாய்த்தது ?

விளக்கக் குறிப்புகள்
அ. பதாம் புயத்தை வணங்காத் தலை...
(கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை) --- திருக்குறள் 9.
(தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து)---- திருநாவுக்கரசர்
தேவாரத் திருமுறை 4-9-1.
ஆ. நிணம் காட்டும் கொட்டிலை...
கொட்டில் = ஒதுக்கிடம். பசுக்கள் கட்டும் இடம். இந்த உடல் ஆன்மாவாகிய பசு கட்டப்படும் இடம்.

43.
கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேல் முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே.
பதம் பிரித்தல்
கவியால் கடல் அடைத்தோன் மருகோனை கண பண கண்
செவியால் பணி அணி கோமான் மகனை திறல் அரக்கர்
புவி ஆர்ப்ப எழ தொட்ட போர் வேல் முருகனை போற்றி அன்பால்
குவியா கரங்கள் வந்து எங்கே எனக்கு இங்ஙன் கூடியவே.
பத உரை
கவியால் = குரங்குகளைக் கொண்டு. கடல் அடைத்தோன் மருகோனை = கடலை அணையிட்ட திருமாலின் மருகனை. கண பண = கூட்டமான படங்களைக் கொண்ட. கண் செவியால் = பாம்புகளையே. பணி அணி = ஆபரணங்களாக அணிந்த. கோமான் மகனை = தலைவரான சிவ பெருமானின் மகனை. திறல் அரக்கர் = வலிமை பொருந்திய அசுரர்கள். புவி ஆர்ப்ப எழ = பூமியில் ஆரவாரம் எழுமாறு. போர் வேல் தொட்ட முருகனை = போரில் அழித்த வேலைச் செலுத்திய குமரக் கடவுளை. போற்றி = துதித்து. அன்பால் = அன்புடன். குவியாக் கரங்கள் = கூப்பி வணங்காத கைகள். வந்து எங்கே எனக்கு இங்ஙன் கூடியவே = வந்து இவ்விதம் என்னிடம் வந்து கூடினவோ.
சுருக்க உரை
குரங்குளைக் கொண்டு கடலில் அணை கட்டிய திருமாலின் மருகனை, பாம்புகளை ஆபரணங்களாக அணிந்த சிவ பெருமான் மகனை, அசுரர்களை அழித்த வேலாயதம் ஏந்திய முருகனைப் போற்றித் துதியாத கரங்கள் எனக்கு எப்படி வந்து வாய்த்தனவோ ?
விளக்கக் குறிப்புகள்
அ. புவி ஆர்ப்ப எழ தொட்ட......
(.....நிச்சரர் கூப்பிட
எழுகிரி ஆர்ப்பெழ வென்ற வேலா) --- திருப்புகழ் (விரகறநோக்).
ஆ.கவியால் கடல் அடைத்தோன் மருகனை.....
(அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூரு)----
திருப்புகழ்(அருவரையெடுத்த)
(அடைத்தார்க் லோர்வலி ராவண
குலத்தோடரி யோர்சர னார்சின)---- திருப்புகழ்(குடத்தாமரையா)
(வேலை யடைத்துவ ரங்கள் சாடி யரக்கரி லங்கை....) ----
திருப்புகழ்(சேலையுடுத்து)
இ. குவியாக் கரங்கள் வந்து எனக்கு......
(கைகாள் கூப்பித் தொழீர்)--- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-9-1.

44.
தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளின்றி வேறில்லையே.
பதம் பிரித்தல்
தோலால் சுவர் வைத்து நாலாறு காலில் சுமத்தி இரு
காலால் எழுப்பி வளை முதுகு ஒட்டி கை நாற்றி நரம்பால்
ஆர்க்கை இட்டு தசை கொண்டு மேய்ந்த அகம் பிரிந்தால்
வேலால் கிரி தொளைத்தோன் இரு தாளின்றி வேறு இல்லையே.
பத உரை
தோலால் சுவர் வைத்து = தோலைக் கொண்டு சுவர் எழுப்பி. நாலாறு காலில் சுமத்தி = அந்தச் சுவரை பத்து வகையான காற்றில் தங்க வைத்து. இரு காலால் எழுப்பி = இரண்டு கால்களான தூண்கள் மேல் நிறுத்தி எழுப்பி. வளை = வளையும் படியான. முதுகு ஒட்டி = முதுகு ஒன்றைப் பொருத்தி. கை நாற்றி = இரண்டு கைகளைத் தொங்க வைத்து. நரம்பால் ஆர்க்கையிட்டு = நரம்பு என்னும் கயிற்றால் கட்டி வைத்து.
தசை கொண்டு மேய்ந்த = ஊன் கொண்டு மேயப்பட்டுள்ள. அகம் = இந்த உடலாகிய வீடு.. பிரிந்தால் = உயிரினின்றும் பிரிந்து ஒழிந்தால். வேலால் = வேலாயுதத்தால். கிரி தொளைத்தோன் = கிரௌஞ்ச மலையைத் தொளை செய்த முருகவேளின். இரு தாளின்றி வேறில்லையே = இரண்டு திருவடிகளைத் தவிர வேறு துணை நமக்கு இல்லை.
சுருக்க உரை
தோலால் மூடி, பத்து விதமான காற்று வகைகளை உள்ளடக்கி, கால்கள், கைகள் இவற்றைப் பொருத்தி, தசை கொண்டு மூடி, நரம்பால் கட்டப்பட்டுள்ள இந்த உடலிலிருந்து உயிர் பிரிந்தவுடன், வேலால் கிரௌஞ்ச மலையைத் தொளைத்த முருகவேளின் திருவடிகளைத் தவிர நமக்கு வேறு துணை இல்லை.
விளக்கக் குறிப்புகள்
அ. நாலாறு காலில் சுமத்தி....
நாலு ஆறு கால் = பத்து விதமான காற்று வகைகள். அவை பின் வருமாறு – பிராணன், அபானன், சபானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிரகரன், தேவதத்தன், தனஞ்சயன்.
(கால்கொடுத் தெலும்பு மூட்டிக் கதிர்நரம் பாக்கை
தோலுடுத் துதிரம் அட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை) ---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-67-3.
நாலாறு கால் என்பது ஆன்ம தத்துவங்கள் 24 என்றும் பொருள் கொள்ளலாம். இவை அசுத்த தத்துவம் என்றும் வழங்கப் படும்.
ஆ. இரு தோளன்றி வேறில்லையே...
(உற்றார் ஆர் உளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்குற்றார் ஆருளரோ)----- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-9-10.

45.
ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிரு பூதவீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொரு பூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குரு பூதவேலவ னிட்டூரே சூர குலாந்தகனே.
பதம் பிரித்தல்
ஒரு பூதரும் அறியா தனி வீட்டில் உரை உணர்வு அற்று
இரு பூத வீட்டில் இராமல் இரு கோட்டு ஒரு கை

பொரு பூதரம் உரித்து ஏகாசம் இட்ட புராந்தகற்கு
குரு பூத வேலவ நீட்டூரே சூர குல அந்தகனே.
பத உரை
இரு கோட்டு ஒரு கை – இரண்டு தந்தங்களையும் ஒரு துதிக்கையையும் கொண்டதும். பொரு = சண்டைக்கு வந்ததுமான. பூதரம் = மலை போன்ற யானையின். உரித்து = தோலை உரித்து. ஏகாசமிட்ட = மேற் போர்வையாகக் கொண்ட. புராந்தகற்கு = திரிபுரம் எரித்த சிவ பெருமானுக்கு. குரு பூத = குரு என்னும் புனித இடத்தைக் கொண்ட வேற்கர மூர்த்தி. நிட்டூரம் சூர = கொடுமை வாய்ந்த சூரனுக்கும். குல அந்தகனே = அவனுடைய குலத்துக்கும். அந்தகனே = காலனாயிருந்து அழித்தவனாகிய முருக வேளே. (என்னை)
பூத வீட்டில் இராமல் = ஐந்து பூதங்களால் ஆகிய இந்த உடலில் இல்லாமல். ஒரு பூதரும் = எந்த மனிதரும் அறியா = அறிந்திராத. தனி வீட்டில் = ஏகாந்த ஒப்பற்ற முத்தி நிலையில். உரை = வாக்கும். உணர்வு = தற்போதமும். அற்று இரு = இல்லாத நிலையில் இருப்பாயாக (என்று உபதேசித்தான்).
சுருக்க உரை
மலை போன்ற யானையை உரித்து அதன் தோலைப் போர்வையாகக் கொண்ட திரி புரங்களை எரித்த சிவபெருமானுக்குக் குரு நாதராக விளங்குபவனும், கொடுமை வாய்ந்த சூரனுக்கும் அவன் குலத்துக்கும் யமனாக வந்து அவர்களை அழித்தவனுமாகிய குமரக் கடவுள், ஐந்து பூதங்களால் ஆய இந்த உடலில் இருக்காமல், எந்த மனிதரும் அறியாத ஏகாந்தமான ஒப்பற்ற முத்தி என்னும் நிலையில் வாக்கும், உணர்வும் அற்று இருப்பாயாக என்று உபதேசித்தான்.
விளக்கக் குறிப்புகள்
அ. இரு கோட்டு ஒரு கைப் பொரு பூதரம் உரித்து...
(இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்)---- திருப்புகழ் (இசைந்த ஏறும்).
ஆ. ஒரு பூதரும் அறியாத் தனி வீட்டில் உரை உணர்வற்றிரு...
(..சூதானது அற்ற வெளிக்கே
யொளித்துச்சும் மாவிருக்கப்
போதராய் இனிமன மேதெரி
யாதொரு பூதர்க்குமே) ---- கந்தர் அலங்காரம் 17.
(சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே) --- கந்தர் அனுபூதி 12..
(தணியாத சிந்தையும் அவிழ்ந்தவிழ்ந் துரையொழித்து) --- திருப்புகழ் (அந்தகன்வரும்).

46.
நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்கே.
பதம் பிரித்தல்
நீயான ஞான விநோதம் தனை என்று நீ அருள்வாய்
சேயான வேல் கந்தனே செந்திலாய் சித்ர மாதர் அல்குல்
தோயா உருகி பருகி பெருகி துவளும் இந்த
மாயா விநோத மநோ துக்கமானது மாய்வதற்கே.
பத உரை
சேயான = சிவந்த நிறம் கொண்ட. வேல் கந்தனே = வேல் ஏந்தும் கந்தப் பெருமானே. செந்திலாய் = திருச்செந்தூரில் உறைபவனே. சித்ர = அழகிய. மாதர் அல்குல் = மாதர்களின் அல்குலில். தோயா = தோய்ந்து. உருகி = மனம் உருகி. பருகி = அந்தச் சிற்றின்பத்தைப் பருகி அனுபவித்து. பெருகி = அந்த

இன்பத்திலேயே அதிகமாக ஈடுபட்டு. துவளும் = (நான்) சோர்வு அடையும். இந்த மாயா விநோத = இந்த மாயமான விளையாட்டால் வரும். மநோ துக்கமானது = மன வேதனை. மாய்வதற்கு = அழிவதற்கு.
நீ யான = நீயே நானாக இரண்டறக் கலந்திருக்கும் நிலையினை. ஞான விநோதந்தனை = ஞான விளையாட்டாகிய நிலையை. என்று நீ அருள்வாய் = எனக்கு எப்பொழுது அருள்வாய்.

சுருக்க உரை

சிவந்த நிறம் கொண்ட வேல் கந்தனே. செந்தில் ஆண்டவனே. அழகிய மாதர்களின் அல்குலில் தோய்ந்து, சிற்றின்பத்தில் மனம் உருகி, அந்த இன்பத்திலேயே திளைத்திருந்து, சோர்ந்து, மனம் வருந்தி நிற்கும் மயக்கம் ஒழிய, நீயோ நானாக ஐக்கியம் அடைவதற்கு உரிய ஞான நிலையை எனக்கு எப்போது கொடுத்து அருள்வாய்.

விளக்கக் குறிப்புகள்

அ. நீ யான ஞான விநோதந்தனை....
(ஏகபோகமாய் நீயும் நானுமாய்)---- திருப்புகழ் (அறுகுநுனி).
(நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு அருள்கூர)--- திருப்புகழ் (நாவேறுபாம).
(உதித்தாங்கு உழல்வதும் சாவதும்
தீர்த்தெனை உன்னிலொன்றா
விதித்தாண்டு அருள்தரும் காலமுண்டோ)--- கந்தர் அலங்காரம் 39.

47.
பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.

பதம் பிரித்தல்

பத்தி திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்
தித்தித்து இருக்கும் அமுது கண்டேன் செயல் மாண்டு அடங்க
புத்தி கமலத்து உருகி பெருகி புவனம் எற்றி
தத்தி கரை புரளும் பரம ஆநந்த சாகரத்தே.

பத உரை

என் செயல் மாண்டு அடங்க = என்னுடைய செயல்கள் எல்லாம் நசித்து ஒடுங்கி. புத்திக் கமலத்து உருகி = என் அறிவாகிய தாமரை மலரில் மனம் உருகியும். பெருகி = பெருக்கெடுத்தும். புவனம் எற்றி = அந்தப் பெருவெள்ளம் உலகப் பற்றுக்களை எல்லாம் ஒதுக்கித் தள்ள. தத்திக் கரை புரளும் = பாய்ந்து கரை புரண்டு ஓடின. பரம ஆனந்த சாகரத்தே = பரம ஆனந்தமாகிய பெருங் கடலினிடையே.
பத்தித் திருமுகம் ஆறுடன் = ஒழுங்காய் அமைந்த ஆறு திருமுகங்களுடன். பன்னிரு தோளுமாய் = பன்னிரண்டு தோள்களுடன். தித்தித்து இருக்கும் = இன்பச் சுவை தரும். அமுது கண்டேன் = அமுதம் ஒன்றை நான் தரிசித்தேன்.

சுருக்க உரை

என்னுடைய செயல்கள் எல்லாம் மாண்டு அழிய, என் அறிவாகிய தாமரை மலரில் மனம் உருகி, பெருகிப், பாய்ந்து ஓடும் பெரு வெள்ளத்தில் உலகப் பற்றுகள் எல்லாம் ஒதுக்கித் தள்ளப்பட்டு, பரம ஆனந்தமாகிய பெருங்கடலில், உன் ஆறு திருமுகங்களையும் பன்னிரு தோள்களையும் தரிசித்தேன்.

விளக்கக் குறிப்புகள்

அ. பத்தித் திருமுகம்.....
பத்தி = வரிசை.
(முத்தைத் தரு பத்தித் திருநகை) ---- திருப்புகழ்(முத்தைத்தரு).

ஆ. என் செயல் மாண்டு அடங்க.....
(என் செயல் அழிந்து அழிந்து அழிய மெய்ச் சிந்தை வர
நின் தெரிசனைப் படுவேனோ) ---- திருப்புகழ்(அந்தகன்வரும்).
(செயலற் றிருக்கச் சிவானந்த மாகும்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்திஉண் டாமே) --- திருமந்திரம் 2280.
இ. ஆனந்த சாகரத்தே....
(அழிவன்றி நின்றதோர் ஆனந்த வெள்ளம்)---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) 36-8.

48.
புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சக்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

பதம் பிரித்தல்

புத்தியை வாங்கி நின் பாதாம் புயத்தில் புகட்டி அன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றிலேன் முது சூர் நடுங்க
சக்தியை வாங்க தரமோ குவடு தவிடு பட
குத்திய காங்கேயனே வினையேற்கு என் குறித்தனையே.

பத உரை

குவடு - கிரௌஞ்ச மலையும் எழு கிரியும். தவிடு பட = பொடி பொடியாய் விழ. குத்திய = (அவற்றை வேற் படையைக் கொண்டு) குத்திய. காங்கேயனே = கங்கா புத்திரனே. புத்தியை வாங்கி = (பொறி வழியே ஓடுகின்ற என் மனத்தை) இழுத்துப் பிடித்து. நின் பாதாம் புயத்தில் = உன்னுடைய திருவடித் தாமரைகளில். புகட்டி அன்பாய் = அன்புடன் புகவைத்து. முத்தியை வாங்க = உன்னிடமிருந்து முத்தி வீட்டை வாங்கும் வழியை. அறிகின்றிலேன் = அறியமுடியவில்லை.
முது சூர் நடுங்க = (என் ஆணவத்தை அடக்கு முன்னர்) சூரன் நடுங்கும்படி. சக்தியை = வேற் படையை. வாங்க அத்தரமோ = செலுத்தினாயே அந்த வகை தான் என் ஆணவத்தையும் அழிக்கும். வினையேற்கு = வினைகளில் ஈடுபட்ட என்னை. என் குறித்தனையே = வழிப்படுத்த என்ன வழி தான் நீ குறித்துள்ளாய்.

சுருக்க உரை

கங்கை நதியின் மகனே, கிரௌஞ்ச மலையையும் சூரனையும் அழிக்க வேலை விடுத்தாய். பொறி வழயே ஓடுகின்ற என்மனதை மாற்றி உன் திருவடிகளில் அன்புடன் புக வைத்து முத்தி வீட்டை நான் பெறும் வழியை என்னால் அறிய முடியவல்லை. அதற்கு என்ன வழி வைத்திருக்கின்றீர்களோ?

விளக்கக் குறிப்புகள்

அ. முத்தியை வாங்க அறிகின்றிலேன்....
(அவ்வா றறிவார் அறிகின்ற தலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப்பதுவே)---- கந்தர் அனுபூதி 30.
மாயையைக் குறிக்கும் கிரௌஞ்ச மலையையும், ஆணவம் நிறைந்த சூரனையும் அழிக்க வேலாயுதத்தைப் பயன்படுத்தினாய். என் மயக்க அறிவும், ஆணவமும் அழிய உனது வேலேத்தான் செலுத்த வேண்டியிருக்குமோ.

49.
சூரிற் கிரியிற் கதிர்வே லேறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்

நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.
பதம் பிரித்தல்
சூரில் கிரியில் கதிர் வேல் எறிந்தவன் தொண்டர் குழாம்
சாரில் கதி அன்றி வேறு இல்லை காண் தண்டு தாவடி போய்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வம் எல்லாம்
நீரில் பொறி என்று அறியாத பாவி நெடு நெஞ்சமே.
பத உரை
தண்டு – சேனையுடன். தாவடி போய் = போருக்கு எழுந்து. தேரில் கரியில் பரியில் = தேரிலும், யானை மீதும், குதிரையிலும். திரிபவர் = திரியும் அரசர்களின். செல்வம் எல்லாம் = செல்வம் அனைத்தும். நீரில் பொறி என்று = நீரிலே எழுதிய எழுத்தைப் போல (அழியும் என்று). அறியாத = உணராத. பாவி = பாவ எண்ணங்களையே. நெடு நெஞ்சமே = நீண்ட நேரம் எண்ணிக் கொண்டே இருக்கும் பாவி மனமே.
சூரில் = சூரன் மீதும். கிரியில் = கிரௌஞ்ச மலை மீதும். கதிர் வேல் = ஒளி வீசும் வேலை. எறிந்தவன் = செலுத்திய முருகனுடைய. தொண்டர் குழாம் = அடியார் கூட்டத்தை. சாரில் = சார்ந்து வணங்கினால். கதி அன்றி = கதி பெறலாமே தவிர. வேறு இலை காண் = வேறு வழி ஒன்றும் இல்லை என்னும் உண்மையை அறிவாயாக.
சுருக்க உரை
சேனையுடன் தேர், யானை, குதிரை ஆகியவற்றில் திரியும் அரசர்களின் செல்வம் நீர் மேல் எழுதிய எழுத்தைப் போல் அழியக்கூடியதாகும். இதை உணராது பாவமான எண்ணங்களை எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கும் பாவி மனமே. சூரன் மீதும் கிரவுஞ்ச மலை மீதும் வேலைச் செலுத்திய முருகன் அடியார்கள் கூட்டத்தைச் சேர்ந்து அவனை வணங்குவதை விட, நல்ல கதியை அடைய வேறு வழி ஒன்றும் இல்லை என்பதை அறிவாயாக.
விளக்கக் குறிப்புகள்
அ. தொண்டர் குழாம் சாரில் கதியின்றி....
அடியார் பெருமையை உணர்த்தும் பாடல் இது.
(விண்டொழிந்தன நம்முடை மேல்வினை
தொண்டரோடிலருந்தமையால்) ---- சம்பந்தர் தேவாரத் திருமுறை 2-106-2.
(உய்யப் போந்தேனுக்கும் உண்டு கொலோ..
ஆரூர் திருமூலட் டானனுக்குப் பொய்யன்பிலா அடித்
தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-101- 8,9.
(அடியார்க்கும் அடியேன்) --- சுந்தரர் தேவாரத் திருமுறை 7-39-1.
(அத்தன் ஆண்டுதன் அடியரறிற் கூட்டிய அதிசயம் கண்டோமே)----
மாணிக்கவாசகர் திருவாசகம் 26.
(உன் அடியரொடு கூடும் வகைமையருள் புரிவாயே)---- திருப்புகழ் (சீறலசடன்).
(..கெடுதல் இலாத்தொண் டரில்கூட்
டியவா..)---- கந்தர் அலங்காரம் 100.

50.
படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.
பதம் பிரித்தல்
படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான் மருகா கொடும் சூரன் நடுங்க வெற்பை
இடிக்கும் கலாப தனி மயில் ஏறும் இராவுத்தனே.

பத உரை
பெரும் பாம்பினின்று = பெரிய காளிங்கன் என்னும் பாம்பின் மீது. நடிக்கும் பிரான் மருகா = நடமிடும் திருமாலின் மருகனே. கொடும் சூரன் = கொடிய சூரன். நடுங்க = நடுக்கம் கொள்ள. வெற்பை இடிக்கும் = அவனுக்கு அரணாயிருந்த எழு கிரியைப் பொடி செய்த. கலாப = தோகை நிரம்பிய. தனி = ஒப்பற்ற. மயில் ஏறும் இராவுத்தனே = மயிலின் மேல் ஏறிவரும் வீரனே.
படிக்கும் திருப்புகழ் போற்றுவன் = கற்றோரால் ஓதப்படும் உனது திருப்புகழை மேலும் நான் போற்றுவேன். கூற்றுவன் = யமன். பாசத்தினால் = பாசக் கயிற்றால். பிடிக்கும் பொழுது = என்னைக் கட்டிப் பிடிக்கும் போது. வந்து = என் எதிரே தோன்றி. அஞ்சல் என்பாய் = பயப்படாதே என்று திருவாய் மலர்ந்து அருள்க.
சுருக்க உரை
பெரிய காளிங்கன் எஎன்னும் பாம்பின் மீது நடமிடும் திருமாலின் மருகனே. கொடிய சூரனையும் அவனுக்கு அரணாயிருந்தஏழு மலைகளையும் பொடி செய்த மயில் வீரனே.
கற்றவர்கள் ஓதும் உனது திருப்புகழை நான் மேலும் போற்றுவேன். பாசக் கயிற்றால் யமன் என்னைப் பிடிக்க வரும் போது என் எதிரே தோன்றி பயப்படாதே என்று திருவாய் மலர்ந்து அருள வேண்டும்.
விளக்கக் குறிப்புகள்
அ. பெரும் பாம்பினின்று நடிக்கும்....
திருப்புகழ் பாடல்கள் - (சரவணபவ), (மாந்தளிர்கள்), (தும்பிமுக).
ஆ. படிக்கும் திருப்புகழ் போற்றுவன்...
(திருப்புகழ் விருப்பாற் பாடிய அடியேன் படுதுயர் களைவாய்) --- சுந்தரர் தேவாரத் திருமுறை 7-69-2..
(திருப்புகழ் விருப்பாற் பன்னலம் தமிழாற் பாடுவேற் கருளாய்) ---- சுந்தரர் தேவாரத் திருமுறை 7-69-4.
இ. கூற்றுவன் பாசத்தினால் பிடிக்கும் பொழுது....
(காலன் எனை நடுங்க அழைக்கும் பொழுது வந் தஞ்சலென்பாய்)---- அபிராமி அந்தாதி 33.
ஈ. இராவுத்தனே....
இராவுத்தன் = குதிரை வீரன்.
(சூர் கொன்ற ராவுத்தனே ---- கந்தர் அலங்காரம் 37.

முருகவேள் பன்னிரு திருமுறை (எட்டாந் திருமுறை)
கந்தர் அலங்காரம்

பாகம் 3 - பாடல் 51 - 80

51.
மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை தேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

பதம் பிரித்தல்

மலை ஆறு கூறு எழ வேல் வாங்கினானை வணங்கி அன்பில்
நிலையான மா தவம் செய்குமின் நும்மை தேடி வரும்
தொலையா வழிக்கு பொதி சோறும் உற்ற துணையும் கண்டீர்
இலையாயினும் வெந்தது ஏதாயினும் பகிர்ந்து ஏற்றவர்க்கே.

பத உரை

மலை ஆறு கூறு எழ - கிரௌஞ்ச மலை ஆறு கூறாகப் பிளவுபட. வேல் வாங்கினானை = வேலைச் செலுத்திய முருகனை. அன்பில் வணங்கி = உண்மை அன்புடன் துதித்து.
ஏற்றவர்க்கு = உம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்கு. இலையாயினும் = கீரைக் கறிகளையாயினும். வெந்தது ஏதாயினும் = வெந்த உணவு எதையாயினும். பகிர்ந்து = அன்புடன் பகிர்ந்து கொடுத்து. நிலையான மா தவம் = நிலையானதொரு சிறந்த தவச் செயலை. செய்குமின் = செய்யுங்கள். (அவ்வாறு செய்தால்)
நும்மை = உங்களை. தேடி வரும் = தேடிப் பின்னர் வர இருக்கின்ற. தொலையா வழிக்கு = நீண்ட வழிப் பிரயாணத்துக்கு. பொதி சோறும் = வழியில் உண்ணத் தக்கக் கட்டுச் சோறும். துணையும் = தகுந்த வழித் துணையும் ஆகும். கண்டீர் = இதைக் கண்டு கொள்ளுங்கள்.

சுருக்க உரை

கிரௌஞ்ச மலை ஆறு கூறாகப் பிளவுபட வேலைச் செலுத்திய முருக வேளை அன்புடன் துதித்து, உம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்குப் பச்சையான அல்லது வெந்த உணவுப் பொருள் எதையாவது அன்புடன் பகிர்ந்து கொடுங்கள்.
அப்படிச் செய்யும் ஈகை, பின்னர் வர இருக்கும நீண்ட பிரயாணத்துக்குத் தேவையான கட்டுச் சோறாகவும், வழித் துணையாகவும் இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. வேல் வாங்கினானை.....
(வாங்கினார் மதில் மேற் கணை) ---- சம்பந்தர் தேவாரத் திருமுறை 2-26-2.
வேல் வாங்கு வகுப்பு என்ற நூலும் உள்ளது. இது அருணகிரிநாதர் இயற்றிய நூலாகும். முருகவேள் பன்னிரு திருமுறையில் ஒன்பதாம் திருமுறையான திருவகுப்பின் ஒரு பகுதியாகும்.
ஆ. இப்பாடலில் ஈதலின் சிறப்பு கூறப்பட்டிருக்கின்றது.
(..தானமென்றும் இடுங்கோள்..)---- கந்தர் அலங்காரம் 16. தானத்தைப் பற்றிக் கூறும் மற்ற கந்தர் அலங்காரப் பாடல்கள் வருமாறு -
(வறியர்க்கென்றும் நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்)--- பாடல் 18.
(பாடிக் கசித்துள்ள போதே கொடாதவர்)--- பாடல் 53.
(அன்றித் தளர்ந்தவர்க்கு ஒன்று
ஈகைக்கு எனை விதித்தாயிலையே)---- பாடல் 54.
(எங்கேயாயினும் வரும் ஏற்பவர்க்கு
இட்டது இடாமல் வைத்த..)---- பாடல் 59.

(..பசித்து வந்தே
ஏற்கும் அவர்க்கு இட என்னினெங்
கேனும் எழுந்திருப்பர்)---- பாடல் 66.
(...முருகா என்
கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலை...) ---பாடல் 75.
(இடுதலைச் சற்றேனும் கருதேனை) ---- பாடல் 100.
(மனனே கதிகேள் கரவா திடுவாய்)---- கந்தர் அனுபூதி 7.

52.
சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே.

பதம் பிரித்தல்
சிகராத்ரி கூறிட்ட வேலும் செம் சேவலும் செம் தமிழால்
பகர் ஆர்வம் ஈ பணி பாச சங்கிராமம் பணா மகுட
நிகரம் அட்சமம் பட்ச பட்சி துரங்கம் நிருப குமரா
குக ராட்சச பட்ச விட்சோப தீர குண துங்கனே.

பத உரை
பணி = பாம்பின். பாச = தன்னைக் காக்க வேண்டும் என்ற பற்றினால். சங்க்ராமம் = போர் செய்கின்ற. பணா மகுட = படட உச்சிகளின். நிகரம் = கூட்டத்தின். அட்சமம் = பொறுமை இழந்த கோபத்தை. பட்ச(ண) = (தனது வாயால்) உணவு கொள்வது போல் கொத்தி அடக்குகின்ற. பட்சி துரங்கம் = குதிரை வாகனம் போன்ற மயிலை (வாகனமாக உடைய). ந்ருப = அரசே. குமரா = குமர மூர்த்தியே. குக = குகனே. ராட்சச பட்ச = அசுரர்கள் பால். விட்சோப = இரக்கம் காட்டாத. தீர = தீரனே. குண துங்கனே = குணம் மிக்கவனே.
சிகராத்ரி = சிகரங்களை உடைய கிரௌஞ்ச மலையை. கூறு இட்ட = கூறு செய்த. வேலும் = வேலாயுதத்தையும். செம் = செவ்விய. சேவலையும் = கோழியையும். செம் தமிழால் = செந்தமிழ்ப் பாக்களால். பகர் ஆர்வம் ஈ = போற்றி செய்யும் விருப்பத்தைத் தந்தருள்க.

சுருக்க உரை
பாம்பு கூட்டங்களை உணவு கொள்வது போல் கொத்தி அடக்குகின்ற குதிரை வாகனம் போன்ற மயிலைத் தனது வாகனமாகக் கொண்ட அரசே. குமரனே. குகனே. அசுரர்கள் மீது இரக்கம் காட்டாதவனே. குணம் மிக்கவனே.
கிரௌஞ்ச மலையைக் கூறு செய்த வேலையும், சிவந்த சேவலையும் செம்மையான தமிழ்ப் பாக்களால் போற்றிப் பாடும் விருப்பத்தைத் தந்தருளுக.

விளக்கக் குறிப்புகள்
அ. செந்தமிழால் பகர் ஆர்வம் ஈ.....
வேலையும் சேவலையும் போற்றிப் பாடவேண்டும் என்ற ஆவல் மனதில் உதித்த போது ஆசு கவியின் சொற்கள் எல்லாம் வட மொழியில் அமைந்தன. அதைத் தமிழ்க் கடவுளாகிய முருகனிடம் விண்ணப்பித்த போது செந்தமிழில் அமைத்து செந்தமிழால் பகர் ஆர்வம் ஈ என்றார்.
ஆ. ஈ என்பது இழிந்தோன் மாட்டு இரக்கும் சொல்.
(ஈ தா கொடு எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை) ---- நன்னூல் 407.
இ. அருணகிரி நாதர் செந்தமிழில் தமது பாடல்கள் அமைய வேண்டும் என்ற பேராவல் உடையவர் என்பது பின் கண்ட திருப்புகழ்ப் பாடல்களால் அறியப்படும்.
(செந்தமிழ் பாடும் புலப்பட்டம் கொடுத்தற்கும்
க்ருபைச் சித்தம் புரிவாயே)--- திருப்புகழ் (பெருக்கஞ்சஞ்).

(......செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்க மனம் அருள்வாயே) --- (ஐங்கரனை).
(புகலியில் வித்தகர் போல
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே) (புமியதனிற்).
ஈ. வேலும் செஞ்சேவலும் செந்தமிழால்......
(ஆடும்பரி வேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாயே)--- கந்தர் அனுபூதி 1.
(தாரை வடிவேலைச் சேவல் தனை.....சிந்தியேனோ)--- திருப்புகழ் (போதகவிரோ).
(வெற்றி வேலதும்...அதிர அரற்று கோழியும்...மறவேனே) --- திருப்புகழ் (கதியைவிலக்கு).

53.
வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

பதம் பிரித்தல்

வேடிச்சி கொங்கை விரும்பும் குமரனை மெய் அன்பினால்
பாடி கசிந்து உள்ள போதே கொடாதவர் பாதகத்தால்
தேடி புதைத்து திருட்டில் கொடுத்து திகைத்து இளைத்து
வாடி கிலேசித்து வாழ் நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

பத உரை

வேடிச்சி = வேடர் பெண்ணாகிய வள்ளி நாயகியின். கொங்கை விரும்பும் குமரனை = கொங்கையை விரும்பும் குமரக் கடவுளை. மெய் அன்பினால் = உண்மையான அன்பு கொண்டு. பாடி = பாடி. கசிந்து = உள்ளம் உருகி. உள்ள போதே = கையில் பொருள் இருக்கும் போதே. கொடாதவர் = தானம் செய்யாதவர்கள். பாதகத்தால் = பெரிய பாவ வழியிலே. தேடிப் புதைத்து = தாம் தேடிய பொருளைத் தமக்குப் பயன்படாத வகையில் புதைத்து வைத்தும். திருட்டில் கொடுத்தும் = திருட்டிலே இழந்தும். திகைத்து = திகைப்புற்றும். இளைத்து = சோர்வுற்றும். வாடி = மெலிந்தும். கிலேசித்து = கவலைப்பட்டும். வாழ் நாளை = தமது வாழ் நாட்களை. வீணுக்கு மாய்ப்பவரே = வீண் பொழுதாக அழித்தவர்கள் ஆவார்கள்.

சுருக்க உரை

வேடர் பெண்ணாகிய வள்ளியின் கொங்கையை விரும்பும் குமரனை உண்மையான அன்பினால் பாடி, மனம் கசிந்து உருகி, கையில் பொருள் இருக்கும் போதே தானம் செய்யாதவர்கள், அப் பொருளைப் புதைத்து வைத்தும், திருட்டில் இழந்தும், திகைப்புற்று, வாடி, வருந்தித் தம் வாழ் நாளை விணாக அழிப்பவர்கள் ஆவார்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. உள்ள போதே கொடாதவர்.....
(கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்மின்) ---- நாலடியார் 19.
(ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்) ---- கொன்றை வேந்தன் 4.
(கொடா அது வைத்தீட்டினார் இழப்பர்)--- நாலடியார் 10.

54.
சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

பதம் பிரித்தல்

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும் அன்றி தளர்ந்தவர்க்கும் ஒன்று
ஈகைக்கு எனை விதித்தாய் இலையே இலங்காபுரிக்கு
போகைக்கு நீ வழி காட்டு என்று போய் கடல் தீ கொளுந்த
வாகை சிலை வளைத்தோன் மருகா மயில் வாகனனே.

பத உரை

இலங்காபுரிக்கு = இலங்கைப் பட்டணத்துக்கு. போகைக்கு நீ வழி காட்டு = போவதற்கு நீ வழி காட்டுவாயாக. என்று போய் = என்று கடற் கரையை அடைந்து. தீ கொளுந்த = (வருணன் வழி காட்டாததால் கோபித்து) கடலைத் தீப்பற்றும்படி. வாகை = வெற்றி பொருந்திய. சிலை = வில்லை. வளைத்தோன் = வளைத்தவனாகிய இராமனின். மருகா = மருகனே. மயில் வாகனனே = மயில் வாகனனே. சாகைக்கும் = இறந்து போவதற்கும். மீண்டு பிறக்கைக்கும் = மறுபடியும் பிறப்பதற்கும். அன்றி = (என்னைப் படைத்தனையே) தவிர. தளர்ந்தவர்க்கு ஒன்று = வருந்துபவர்களுக்கு ஏதேனும் ஒரு பொருளை. ஈகைக்கு = கொடுப்பதற்கு. எனை விதித்தாய் இலையே = அந்த நல்ல எழுத்தை எழுதி என்னைப் பிறப்பிக்க வில்லையே.

சுருக்க உரை

இலங்காபுரிக்குப் போகும வழியைக் காட்டுக என்று கடற் கரையை அடைந்து வருணன் வழியைக் காட்டாததால் கடல் தீப்பற்றும்படி வில்லை வளைத்த இராமனின் மருகனே. மயில் வாகனனே.
இறப்பதற்கும் பிறப்பதற்கும் மட்டும் என்னைப் படைத்தனையே அன்றி, வருந்துபவர்களுக்கு ஏதேனும் ஒரு பொருளைத் தானம் கொடுக்கும் படி என்னை விதித்துப் பிறப்பிக்கவில்லையே.

விளக்கக் குறிப்புகள்

அ. ஈகைக்கு எனை விதித்தாயிலை......
(ஈயமாட்டேன் என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-95-9.
ஆ. என்று போய்க் கடல் தீக்கொளுத்த...
(சுடுசரந் துரந்தான்...பெய்கணை நெருப்பால்
அங்கியின் குண்ட மொதித்து கடற்குட்டம்..அளக்கர் சேறு
தீந்தெழக் காந்தின சேடன் தன் சிரங்கள் ....வெந்து தீந்தன...) --- கம்ப இராமாயணம் (வருணனை வழி வேண்டு படலம்) 17-26.

55.

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே.

பதம் பிரித்தல்

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரம ஆநந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார் தினை போதளவும்
ஓங்காரத்து உள் ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என் செய்வார் யம தூதருக்கே.

பத உரை

ஆங்காரமும் = நான் என்னும் அகங்காரத்தையும். அடங்கார் = அடக்க மாட்டார்கள். ஒடுங்கார் = ஐம்புலன்களை ஒடுக்க மாட்டாவர்கள். பரம ஆனந்தத்தே தேங்கார் = இறைவனைத் தியானிப்பதால் வரும் பரம ஆனந்தத்தை அனுபவிக்க மாட்டார்கள். நினைப்பும் மறப்பும் அறார் = நினைப்பு, மறப்பு என்னும் நிலைகள் அறச் சும்மா இருக்கமாட்டார்கள். தினைப் போதளவும் = தினை அளவு பொழுதேனும் கூட. ஓங்காரத்து உள் ஒளிக்குள்ளே = ஓங்காரத்துள் இருக்கும் பிரணவத்தின் உள் ஒளியாய் விளங்கும். முருகன் உருவம் கண்டு = முருக வேளின்

திருவுருவத்தைப் பார்த்து. தூங்கார் = சமாதி நிலையில் இருக்க மாட்டார்கள். தொழும்பு செய்யார் = இறைவனுக்குத் தொண்டு செய்ய மாட்டார்கள். (இங்ஙனம் இருப்பவர்கள்) யம தூதருக்கு என் செய்வார் = யம தூதர்கள் வரும் போது என்ன செய்யக் கூடும் ?

சுருக்க உரை

நான் என்னும் அகங்காரத்தை அடக்காதவர்களும், ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தாதவர்களும், இறைவனைத் தியானம் செய்து அந்த ஆனந்தத்தை அனுபவிக்காதவர்களும், கொஞ்ச நேரம் கூட நினைப்பு மறப்பு இல்லாமல் சும்மா இருக்க முடியாதவர்களும், சிறிது நேரம் கூட ஓங்காரத்துள் இருக்கும் பிரணவத்தின் உள் ஒளியாய் விளங்கும் முருகன் திரு உருவத்தைக் கண்டு சமாதி நிலையில் இருக்காதவர்களும், இறைவனுக்குத் தொண்டு செய்யாதவர்களும், யம தூதர்கள் வரும் சமயத்தில் என்ன செய்யக் கூடும் ?

விளக்கக் குறிப்புகள்

அ. ஆங்காரமும் அடங்கார் ....
(ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் துணங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்) --- பத்திரகிரியார் புலம்பல்.
(யான்தான் எனும்சொல் இரண்டும்கெட்
டாலன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம்..) --- கந்தர் அலங்காரம் 95.
ஆ. நினைப்பு மறப்பும் அறார்....
(நினைப்பு மறப்பு மிலாதவர் நெஞ்சம்
வினைப் பற்றருக்கும் விமல னிருக்கும்) ---- திருமந்திரம் 2929.
(கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தர...) ---- கந்தர் அனுபூதி 21.
இ. ஓங்காரத்துள் ஒளிக்குள்ளே முருகன் உருவங் கண்டு....
(ஓங்காரத் துட்பொருளை ஐயனெனக் கருதியவா றார்பெறுவா ரச்சோவே) -----
மாணிக்கவாசகர் (திருவாசகம் - அச்சோபதிகம்) 7.
(தூங்கிக் கண்டார் சிவலோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமுந் தம்முள்ளே
தூங்கிக் காண்டார் நிலை சொல்வதெவ் வாறே) ---- திருமந்திரம் 173.
(ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்) ---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-63-3.
(ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளி யாய்)---- கந்தர் கலி வெண்பா 59.
(தூங்காமல் தூங்கிச் சுகப் பெருமான் நின் நினைவில்
நீங்காமல் நிற்கும் நிலை பெறவும் காண்பேனோ---- (தாயுமானவர்).

56.

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

பதம் பிரித்தல்

கிழியும்படி அடல் குன்று எறிந்தோன் கவி கேட்டு உருகி
இழியுங் கவி கற்றிடாது இருப்பீர் எரி வாய் நரக
குழியும் துயரும் விடாய்ப் பட கூற்றுவன் ஊர்க்கு செல்லும்
வழியும் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

பத உரை

கிழியும்படி = கிழிந்து பிளவுபடும்படி. அடல் குன்று = வலிய கிரெளஞ்ச மலையை. எறிந்தோன் = வேலை எறிந்தவனாகிய முருகனைப் போற்றும். கவி கேட்டு உருகி =

பாடல்களைக் கேட்டி மனம் உருகி. இழியும் கவி = ஏனைய இழிவான கவிகளை. கற்றிடாது இருப்பீர் = படித்து வீண் பொழுது போக்காமல் வாழ்வீர்களாக. குழியும் = எரியைக் கக்கும் கும்பி பாகம் என்னும் நரகக் குழி ஒன்று இருப்பதையும். துயரும் = அந்தக் குழியில் பட வேண்டிய வேதனையையும். விடாய்ப் பட = தாகம் மேன்மேல் எடுக்க. கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் = யம புரிக்குச் செல்லும். வழியும் துயரும் = வழியின் துன்பத்தையும். பகரீர் பகரீர் = மீண்டும், மீண்டும் சொல்லுங்கள். மறந்தவர்க்கே = மறந்தவர்களுக்கு ஞாபகம் ஊட்டுங்கள்.

சுருக்க உரை

வலிய கிரௌஞ்ச மலை பிளவுபடும்படி வேலை எய்த முருகனைப் போற்றும் பாடல்களைக் கேட்டு மனம் உருகாமல், ஏனைய கவிகளைக் கேட்டு வீண் பொழுது போக்காதீர்கள். யமனுடைய ஊருக்குப் போகும் வழியில் ஏற்படும் துன்பங்களை மீண்டும் மீண்டும் சொல்லுங்கள். மறந்தவர்களுக்கு ஞாபகப் படுத்துங்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழி.....

(தொலையா வழி)--- கந்தர் அலங்காரம் 51.

(உயிர்போம் அத்தனி வழி)---- கந்தர் அலங்காரம் 59.

57.

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

பதம் பிரித்தல்

பொரு பிடியும் களிறும் விளையாடும் புன சிறுமான்
தரு பிடி காவல சண்முக வா என சாற்றி நித்தம்
இரு பிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரு வினையோம் இறந்தால்
ஒரு பிடி சாம்பரும் காணாது மாய உடம்பு இதுவே.

பத உரை

பொரு பிடி = பொருந்தி உள்ள பெண் யானையும். களிறும் = ஆண் யானையும். விளையாடும் = விளையாடுகின்ற. புனம் = மலைச் சார்பான கொல்லையில். சிறு மான் தரு = சிறிய மான் உருவுடன் வந்த இலக்குமி ஈன்றெடுத்த. பிடி = பெண் யானை போன்ற வள்ளியின். காவல = நாயகனே. சண்முக = சண்முகனே. எனச் சாற்றி = என்று வாய் குளிரக் கூறி. நித்தம் = நாள்தோறும். இரு = இருப்பாயாக. பிடி சோறு கொண்டு இட்டு = ஒரு பிடி சோற்றைப் பசித்து வந்தவர்களுக்கு அளித்து. உண்டு இரு = அதன் பின்னர் நீயும் உண்டு இருக்கவும். வினையோம் = தீ வினைக்கு ஆளாகிய நாம். இறந்தால் = மாண்டால். ஒரு பிடி சாம்பரும் காணாது = (நமது உடல் தீக்கிரையானால்) ஒரு பிடி சாம்பல் அளவு கூடக் காணாது. மாய உடம்பு இதுவே = அத்தகைய மாயமான உடம்பு இதுவாகும்.

சுருக்க உரை

பெண் யானையும் ஆண் யானையும் விளையாடும் மலைச் சாரலில் உள்ள தினைப் புனத்தில் மான் உருவாக வந்த இலக்குமி ஈன்றெடுத்த வள்ளி நாயகியின் கணவனே, சண்முகனே, என்று நாள்தோறும் மனமாறக் கூறி, பசித்தவர்களுக்கு ஒரு பிடி சோறு அளித்து பின்னர் உண்டு வாழவும்.

ஏனென்றால் தீ வினைக்கு ஆளாகிய நாம் இறந்த பின், நமது உடல் தீக்கு இரையானால் எஞ்சி இருப்பது ஒரு பிடி சாம்பல் கூட காணாது. அத்தகைய மாய உடம்பு இதுவாகும்.

விளக்கக் குறிப்புகள்

அ. பிடி காவல.....

பிடி என்பது வள்ளியைக் குறிக்கும்.

(தினைகள் காத்த பிடி) --- திருப்புகழ் (உறவின்முறையோர்க்கு).

தரு பிடி என்பதால் கற்பகத் தருவில் வளர்ந்த பிடி எனக் கொண்டு தேவசேனையையும் பொருத்தமாகக் கூறலாம்.
ஆ. பிடி சோறு கொண்டு இட்டு....
(யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி)---- திருமந்திரம் 109.
(எமக்கென் னென் றட்டுண்டிரும்) ---- ஔவையார் (நல்வழி) 11.
(அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒரு வன்
பெற்றான் பொருள்வைப் புழி) ---- திருக்குறள் 226.
(அருட்படு தானந் தம்முள் விழுமிதாம் அன்னதானம்) ---- திருவிளையாடற் புராணம் – மூர்த்தி 8.
இ. ஒரு பிடி சாம்பரும் காணாது....
(இருவினை நீண்ட காயம்
ஒருபிடி சாம்பலாகி விடலாமோ)---- திருப்புகழ் (தினமணி).
(ஒருபிடி நீறும் இலாத உடம்பை)--- பட்டினத்தார்– உடற்கூற்று வண்ணம்.

58.
நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே.

பதம் பிரித்தல்
நெற்றா பசும் கதிர் செவ் ஏனல் காக்கின்ற நீல வள்ளி
முற்றா தனத்திற்கு இனிய பிரான் இக்கு முல்லையுடன்
பற்றாக்கையும் வெந்து சங்க்ராம வேளும் பட விழியால்
செற்றார்க்கு இனியவன் தேவேந்த்ர லோக சிகா மணியே.

பத உரை
நெற்றா = முதிராத. பசும் கதிர் = பசுமையான கதிர்களை உடைய. செவ் ஏனல் = செம்மை வாய்ந்த தினைக் கொல்லையை. காக்கின்ற = காத்திருந்த. நீல வள்ளி = நீல நிறம் கொண்ட வள்ளியின். முற்றா = முற்றாத. தனத்திற்கு இனிய = கொங்கைக்கு இனிய. பிரான் = உகந்த மேலோன் ஆகிய கந்த வேள். தேவேந்த்ர லோக சிகா மணியே = தேவலோகத்துக்கு ஒரு சிறந்த இரத்தினம் போன்றவனே. இக்கு = கரும்பு வில்லும். முல்லையுடன் = முல்லை, நீலம், தாமரை, மாம்பூ, அசோகு ஆகிய மலர்ப் பாணங்களும். பற்றாக்கையும் = அம்பு கட்டும் கயிறும். வெந்து = தீயினால் வெந்து. சங்க்ராம வேளும் = அவையுடன் போர் செய வந்த மன்மதனும். பட = அழிய. விழியால் செற்றார்க்கு = தமது கண் நெருப்பால் எரித்து அழித்த சிவ மூர்த்திக்கு. இனியவன் = உகந்தவன்.

சுருக்க உரை
பசுமையான கதிர்களை உடைய தினைப் புனத்தில் காவல் செய்த வள்ளி நாயகியின் கொங்கையை விரும்பும் கந்த வேள் மிகவும் மேலானவன். தேவலோகத்துக்கு ஒரு சிறந்த இரத்தின்ம் போன்றவன்.
கரும்பு வில்லும், மலர்ப் பாணங்களும், அம்பு கட்டும் கயிறும் ஏந்திப் போர் செய்ய வந்த மன்மதனைத் தன் நெற்றிக் கண் நெருப்பால் எரித்து அழித்த சிவ பெருமானுக்கு உகந்தவன்.

விளக்கக் குறிப்புகள்
அ. வேளும் பட.....
முல்லை முதலிய மலர்கள் மன்மதனுடைய பாணங்கள் ---- திருப்புகழ் (அம்பொத்த).
ஆ. வேளும் பட விழியால் செற்றார்க்கு...
(சரணீட்டி மதனுடல் திருநீறாய்....) ---- திருப்புகழ் (பாட்டிலுருகிலை).

59.
பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல் வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.

பதம் பிரித்தல்

பொங்கு ஆர வேலையில் வேலை விட்டோன் அருள் போல் உதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க்கு இட்டது இடாமல் வைத்த
வங்காரமும் உங்கள் சிங்கார வீடும் மடந்தையரும்
சங்காதமோ கெடுவீர் உயிர் போம் அத் தனி வழிக்கே.

பத உரை

கெடுவீர் = (ஈயாது வைத்துக்) கெட்டுப் போகின்றீர்களே. பொங்கு ஆர வேலையில் = அலைகள் பொங்கி எழுகின்றதும் முத்துக்களை உடையதுமான கடல் மீது. வேலை விட்டோன் = வேலாயுதத்தைச் செலுத்திய. முருகனின். அருள் போல் = திருவருள் போல.
எங்கேயாயினும் வரும் = எங்கிருந்தாவது வந்து. ஏற்பவர்க்கு = யாசித்தவர்களுக்கு. இட்டது = தானமாக இட்டது. உதவ = உதவி செய்யும்.
இடாமல் வைத்த = அங்ஙனம் பிறருக்கு இட்டு உதவி செய்யாது நீங்கள் சேகரித்து வைத்த. வங்காரமும் = பொன்னும். சிங்கார வீடும் = அலங்கரிக்கபட்ட வீடும். மடந்தையரும் = வீட்டு மாதர்களும். உயிர் போம் = நீங்கள் இறந்த பின் உங்கள் உயிர் செல்லுகின்ற. அத் தனி வழிக்கு = அந்தத் தனிமையான வழிக்கு.
சங்காதமோ = துணையாய் வருவார்களா ?

சுருக்க உரை

ஈயாது பொருளைச் சேர்த்து வைத்துக் கெட்டுப் போகின்றீர்களே. பொங்கி எழும் அலை கடலின் மீது வேலைச் செலுத்திய முருகனின் திருவருள் போல, உங்களுக்கு உதவி செய்யக் கூடியது யாதெனின் எங்கிருந்தாவது வந்து யாசித்தவர்களுக்கு நீங்கள் மனதாற இட்ட தானமாகும். அங்ஙனம் இன்றி யாருக்கும் கொடாமல் சேர்த்து வைத்த பொன்னும், அலங்காரமான வீடும், மாதர்களும் நீங்கள் இறந்த பின்னர் போகும் அந்தத் தனி வழிக்கு உங்களுக்குத் துணையாக வருவார்களா ? மாட்டார்கள் என்றபடி.

விளக்கக் குறிப்புகள்

அ. சங்காதமோ....
சங்காதம் = துணையாகக் கூட வருதல்.
ஆ. வேலையில் வேலை விட்டோன் அருள்....
(வேலையுறை நீட்டி வேலைதனி லோட்டு
வேலைவிளை யாட்டு வயலூரா) ---- திருப்புகழ் (ஆரமுலை).
(மைக்க ருங்கட லன்றெரி மண்டிட
மெய்க்ர வுஞ்சசி லம்புடன் வெம்பிட) ---- திருப்புகழ் (ஒக்கவண்).
இ. ஏற்பவர்க்கு இட்டது......
(உற்றார் ஆர் உளரோ உயிர் கொண்டு போம்பொழுது) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-9-10.
(மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ) --- மணிமேகலை 6-103.
(இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே வழித்துணை யாவது
தானஞ் செய்யெனத் தருமதத்தனும்...வான்பொருள் காட்டி) --- மணிமேகலை 22, 135,140.
(அத்தமும் வாழ்வும் அகத்துமட் டே விழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டே விம்மி விம்மி இரு

கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே) --- பட்டினத்தார் (பொது) 13.

60.
சிந்திக் கிலேனின்று சேவிக் கிலேன்றண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனொன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக்கி லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

பதம் பிரித்தல்

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டை சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனை
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்தி கிலேசமும் காய கிலேசமும் போக்குதற்கே.

பத உரை

புந்திக் கிலேசமும் = மன வேதனையும். காயக் கிலேசமும் = உடலுக்கு உற்ற வேதனையும். போக்குதற்கு = நீக்குவதற்காக. மயில் வாகனனை = மயிலேறும் முருகனை. சிந்திக்கிலேன் = (நான்) முழு மனதோடு தியானம் செய்யவில்லை. நின்று சேவிக்கிலேன் = நின்று பணியவில்லை. தண்டைச் சிற்றடியை = தண்டைகள் அணிந்த சிறிய திருவடிகளை. வந்திக்கிலேன் = வணங்குவதில்லை. வாழ்த்துகிலேன் = துதிக்கவும் இல்லை. சந்திக்கிலேன் = அவன் சந்நிதியை அடைந்து அவனைத் தரிசிக்கவில்லை. பொய்யை நிந்தித்து = பொய் என்பதை இகழ்ந்து. உண்மை சாதிக்கிலேன் = உண்மையைக் கடைப்பிடித்து நிலையாகப் பேசுவதும் இல்லை.

சுருக்க உரை

என்னுடைய மன வேதனையும், உடல் வருத்தமும் நீங்க மயில் வாகனான முருகனைத் தியானிக்கவில்லை, அவனைப் பணியவில்லை, அவன் திருவடிகளை வணங்கவில்லை, அவனைத் துதிக்கவும் இல்லை, அவன் கோயிலுக்குச் சென்று அவனைத் தரிசிக்கவும் இல்லை, பொய்யை இகழ்ந்து உண்மையை நிலையாகப் பேசவும் இல்லை.

விளக்கக் குறிப்புகள்

அ. மனம், வாக்கு, காயம் இவை சுத்தி பெறச் செய்ய வேண்டிய நெறிகள் இப்பாலில் குறிக்கப்பட்டுள்ளன.
(சித்தம தொன்றிச் செய்கழல் உன்னிச் சிவனென்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே) ---- சம்பந்தர் தேவாரத் திருமுறை 1- 100- 8.

61.
வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்தவா பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

பதம் பிரித்தல்

வரை அற்று அவுணர் சிரம் அற்று வாரிதி வற்ற செற்ற
புரை அற்ற வேலவன் போதித்தவா பஞ்ச பூதமும் அற்று
உரை அற்று உணர்வு அற்று உடல் அற்று உபாயம் அற்று
கரை அற்று இருள் அற்று எனது அற்று இருக்கும் அக் காட்சி அதே.

பத உரை

பஞ்ச பூதமும் அற்று = மண், நீர், தீ, காற்று, வான் எனப்படும் ஐந்து பூதங்களால் வரும் கேடுகள் நீங்கி. உரை அற்று = வாக்கு அடங்கி. உணர்வு அற்று =

உணர்ச்சிப் புலன்கள் அடங்கி. உடல் அற்று = உடலைப் பற்றிய உணர்ச்சி நீங்கி. உபாயம் அற்று = சித்தித் திறங்கள் இன்றி. கரை அற்று = எல்லை கடந்து. இருள் அற்று = அஞ்ஞான இருள் நீங்கி. எனது அற்று = நான் எனது என்னும் இருமைகள் நீங்கி. இருக்கும் அக் காட்சி அதே = இருப்பதாகிய ஒரு காட்சி நிலையை.
வரை அற்று = கிரௌஞ்சம் தொலைந்து. அவுணர் சிரம் அற்று = அசுரர்கள் தலைகள் எல்லாம் அறுபட்டு அழிந்து. வாரிதி வற்ற = கடல் வற்ற. செற்ற = கோபித்து அழித்த. புரை அற்ற = குற்றம் இல்லாத. வேலவன் = வேலாயுதப் பெருமான். போதித்தவா = உபதேசித்த பெருமை தான் என்ன. (இது விந்தையாக இருக்கிறது.)

சுருக்க உரை

பஞ்ச பூதங்கள் அற்று, உரை, உணர்வு, உடல், சித்தம் இவை யாவும் அற்று, எல்லை கடந்து, அஞ்ஞான இருள் நீங்கி, எனது என்னும் ஆகங்காரம் நீங்கி, கிரௌஞ்ச மலை பிளவுபட்டு, அசுரர்கள் அழிந்து, கடல் வற்றும்படி வேலை ன்எய்திய வேலவன் அடியேனுக்கு உபதேசித்த பெருமையை என்ன என்று சொல்ல முடியும்.

விளக்கக் குறிப்புகள்

முருகன் அருணகிரியாருக்கு உபதேசம் செய்ததைப் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.
அ. போதத்தவா....
(உளத்தொ டுரை செயல் ஒளித்து விடுவதும்
அறுமுக ஒருத்தன் அருளிய பெருத்த வசனமே) ---- திருவகுப்பு (பெருத்த வசன வகுப்பு) 5 -13.
(வெளியில் விளைந்த வெறும்பாழைப்
பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுகம்
ஆறுடைத் தேசிகனே) ---- கந்தர் அலங்காரம் 8.
(சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே) --- கந்தர் அனுபூதி 12. (மற்றும் 20,28,30,42,43,49)
(உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருந்தினன் சொல்லிறந் தோமே) ---- திருமந்திரம் 1567.

62.
ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

பதம் பிரித்தல்

ஆலுக்கு அணி கலம் வெண் தலை மாலை அகிலம் உண்ட
மாலுக்கு அணி கலம் தண் அம் துழாய் மயில் ஏறும் ஐயன்
காலுக்கு அணி கலம் வானோர் முடியும் கடம்பும் கையில்
வேலுக்கு அணி கலம் வேலையும் சூரனும் மேருவுமே.

பத உரை

ஆலுக்கு - கல் ஆலின் கீழ் தட்சிணாமூர்த்தி வடிவத்தில் வீற்றிருக்கும் சிவ பெருமானுக்கு. அணி கலம் = ஆபரணமாக உள்ளது. வெண் தலை மாலை = வெண்மை நிறமான தலைமாலை. அகிலம் உண்ட = உலகத்தை உண்ட. மாலுக்கு =

திருமாலுக்கு. அணிகலம் = ஆபரணம். தண் = குளிர்ந்த. அம் = அழகிய. துழாய் = துளசி.
மயில் ஏறும் ஐயன் = மயில் வாகனத்தில் ஏறும் பிரானாகிய முருக வேளின். காலுக்கு = திருவடிகளுக்கு. அணி கலம் = ஆபரணம். வானோர் = தேவர்களின். முடியும் = முடியும். கடம்பும் = கடப்ப மாலையும். கையில் வேலுக்கு = அவர் கையில் ஏந்திய வேலாயுதத்துக்கு. அணி கலம் = ஆபரணம். வேலையும் = கடலும். சூரனும் = சூரனும். மேருவுமே = கிரௌஞ்ச கிரியுமே.

சுருக்க உரை

ஆல மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு ஆபரணம் வெண்ணிறமான தலை மலை. உலகம் உண்ட திருமாலுக்கு ஆபரணம் குளிர்ந்த துளசி. மயில் வாகனனாகிய முருகனுக்கு ஆபரணம் தேவர்கள் முடியும் கடப்ப மாலையும். அவர் கையில் ஏந்திய வேலுக்கு ஆபரணம் கடலும், சூரனும், கிரௌஞ்ச கிரியுமே.

விளக்கக் குறிப்புகள்

அ. ஆலுக்கு அணிகலம்.....
ஆல் = கல் ஆல மரம் அல்லது ஆலகால விடம்.
(பூந்தருத்தி மகிழும் ஆலனை) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-88-1.
(நாலுவேதியர்க் கின்னருணன்னிழல் ஆலன்) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 5-72-4.
ஆ. வெண் தலைமாலை.....
(தலையே நீ வணங்காய் தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேறும் தலையே நீ வணங்காய்) ---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-9-1.
(தலைக்குத் தலைமலை அணிந்ததென்ன)--- சுந்தரர் தேவாரத் திருமுறை 7-4-1.
இ. உலகம் உண்ட மாலுக்கு...
(உய்ய உலகு படைத்து உண்ட மணி வயிறா) --- பெரியாழ்வார் திருமொழி 1-5.
(....படிக்க டத்தையும் வயிறடை நெடியவர் மருகோனே)--- திருப்புகழ் (தொடத்துள).
(...மாடி தாத்திரி பட்சித் தாவென வுமிழ்வாளி
ஆடல் கோத்த சிலைக்கை)--- திருப்புகழ்(வேலைதோற்க).

63.

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

பதம் பிரித்தல்

பாதி திருவுரு பச்சை என்றவர்க்கு தன் பாவனையை
போதித்த நாதனை போர் வேலனை சென்று போற்றி உய்ய
சோதித்த மெய் அன்பு பொய்யோ அழுது தொழுது உருகி
சாதித்த புத்தி வந்து எங்கே எனக்கு இங்ஙன் சந்தித்ததே.

பத உரை

பாதித் திருவுரு = தமது திருவுருவத்தில் உமாதேவியின் பாகமாகிய பாதி. பச்சை என்றவர்க்கு = பச்சை நிறமாக உடைய சிவபெருமானுக்கு. தன் பாவனையை = தன்னைக் குருநாதனாகப் பாவிக்கும் முறையில். போதித்த = பிரணவத்தின் பொருளை இன்னதென்று உபதேசித்த. நாதனை = நாயகனை. போர் வேலனை = போருக்கு உற்ற வேல் ஏந்திய முருகனை. சென்று = அடைந்து. போற்றி உய்ய = துதித்து (நான்) உய்வதற்கு. சோதித்த = அவரால் சோதிக்கப்பட்ட. மெய்யன்பு = எனது உண்மையான அன்பு. பொய்யோ = பொய்யாகுமோ.
அழுது தொழுது = (அவனுடைய திருவருளை நினைத்து) அழுதும் தொழுதும். உருகி = உருகியும். சாதித்த = நிலைப்பட்ட. புத்தி = எனது புத்தியானது. வந்து எங்கே

எனக்கு இங்ஙன் சந்தித்தது = எங்கிருந்து என்ன புண்ணிய வசத்தினால் எனக்கு இவ்வாறு கிடைத்தது ?

சுருக்க உரை

தமது திருவுருவத்தில் உமா தேவியின் பாகம் பச்சையாக உடைய சிவபெருமானுக்குத் தன்னைக் குருநாதனாகப் பாவிக்கும் முறையில் பிரணவத்தின் பொருளை இன்னதென்று உபதேசித்த நாயகனே. போர் வேலனே. உன்னை அடைந்து நான் உய்வதற்கு சோதிக்கப்பட்ட எனது மெய் அன்பும் பொய்யாகுமா ? உனது திருவருளை நினைத்து அழுது, தொழுது, உருகி என்னிடம் நிலைப்பட்ட புத்தி எங்கிருந்து என்ன பாக்கியத்தினால் எனக்கு இவ்வாறு கிடைத்தது. (இங்ஙனம் கிடைத்தது உன் திருவருளால் தான் என்பது கருத்து).

விளக்கக் குறிப்புகள்

அ. புத்தி வந்து எங்கே எனக்கு இங்ஙன் சந்தித்ததே....
நிலைத்த புத்தி முருகன் திருவருளாலன்றி வேறு எப்படி தனக்குக் கிடைத்திருக்கும் என்று வியந்துள்ளார்.
(அவனருளாலே அவன் தாள் வணங்கி) --- மாணிக்கவாசகர் (திருவாசகம் - சிவபுராணம்) 18.
(நிலைத்த புத்திதனைப் பிரியாமற் கனத்த
தத்துவ முற்று நித்திய சித்தருள்வாயே)---- திருப்புகழ் (நினைத்ததெத்த).
(முருகன் குமரன் குகன் என்று மொழிந்
துருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்) --- கந்தர் அனுபூதி 15.

64.

பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாது விடேன்வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மான்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

பதம் பிரித்தல்

பட்டி கடாவில் வரும் அந்தகா உனை பார் அறிய
வெட்டி புறம் கண்டு அலாது விடேன் வெய்ய சூரனை போய்
முட்டி பொருத செவ்வேள் பெருமான் திரு முன்பு நின்றேன்
கட்டி புறப்படு அடா சத்தி வாள் என்றன் கையதுவே.

பத உரை

பட்டிக் கடாவில் = களவு எண்ணம் கொண்ட எருமைக் கடாவின் மீது. வரும் அந்தகா = ஏறி வருகின்ற யமனே. உனைப் பார் அறிய = உன்னை உலகத்தோர் நன்றாக அறியும்படி. வெட்டி = வெட்டி. புறம் கண்டு இலாது = நீ முகுகு காட்டி ஓடும்படிச் செய்யாது. விடேன் = விட மாட்டேன்.
வெய்ய = கொடிய. சூரனைப் போய் = சூரனிடம் சென்று. முட்டிப் பொருத = தாக்கிப் போர் செய்த. செவ் வேல் பெருமான் = செவ்விய வேலை ஏந்திய முருகனின். திரு முன் நின்றேன் = (நான்)அழகிய சந்நிதியில் நிற்கின்றேன். கட்டிப் புறப்படு அடா = (நீ வீச எடுத்த பாசக் கயிறு, தண்டாயுதம் முதலிய ஆயுதங்களைக்) கட்டி எடுத்துக் கொண்டு வந்த வழியைப் பார்த்துக் கொண்டு புறப்பட்டுப் போய்விடு. சத்தி வாள் = ஞான சக்தி என்கின்ற ஞான வாள். என்றன் கையதுவே = என் கையில் உள்ளது. (இதைக் கவனிப்பாயாக.)

சுருக்க உரை

எருமைக் கடா மீது வருகின்ற யமனே. உலகத்தோர் அறியும்படி உன்னை வெட்டிப் புற முதுகாட்டி ஓடும்படி செய்யாமல் விட மாட்டேன். ஏனென்றால் சூரனைத் தாக்கிப்போர் செய்த செவ்வேலை ஏந்தும் முருகன் சந்நிதியில் நான் நின்று கொண்டிருக்கின்றேன். நீ வீச வந்த பாசக் கயிறு முதலியவற்றை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போய் விடு. மேலும் ஞான சக்தி என்னும் ஞான வாள் என்கையில் இருக்கின்றது.

விளக்கக் குறிப்புகள்
அ. அந்தகா உனைப் பார் அறிய.....
(யாமார்க்கும் குடி யல்லோம் யாதும் அஞ்சோம்)---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) திருச்சதகம் 30.
(கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்) ---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) அச்சாப் பத்து 10.
(நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்)---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-98-1.
ஆ. சத்தி வேள் என்றன் கையதுவே.....
சத்தி வாள் - இச்சா, கிரியா, ஞானம் ஆகிய முப்பிரிவில் ஞான சத்தியாகிய வாள் என்னிடம் உள்ளது என்பது பொருள்.
(நமன்வரின் ஞான வேள் கொண்டே எறிவன்) ---- திருமந்திரம் 2927.
(அவிரோத ஞானச் சுடர் வாள் கண்டாயடா) ---- கந்தர் அலங்காரம் 25.
(தந்தைக்கு முன்னம் தனிஞான
வாள் ஒன்று சாதித்தருள்...)--- கந்தர் அலங்காரம் 69.
(சீராவும் கையிற் சிறுவாளும்
வேலுமென் சிந்தையவே
வாராது அகல் அந்த காவந்த
போதுஉயிர் வாங்கவே)---- கந்தர் அலங்காரம் 81.

65.
வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே.

பதம் பிரித்தல்
வெட்டும் கடா மிசை தோன்றும் வெம் கூற்றன் விடும் கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும் கராசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும் விட்டு ஓட எட்டாத வெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே.

பத உரை
கரம் அசலங்கள் எட்டும் = யானைகள் எட்டும். குலகிரி எட்டும் = எட்டு குலகிரிகளும். விட்டு ஓட = விட்டு ஓடும்படி. எட்டாத வெளி மட்டும் = பர வெளி வரையிலும். புதைய = மறையும்படி. கலாபம் விரிக்கும் = தனது தோகையை விரிக்கின்ற. மயூரத்தனே = மயில் வாகனனே.
வெட்டும் கடா மிசை = எதிர்த்து வெட்ட வருவது போல வரும் எருமைக் கடாவின் மேல். தோன்றும் = தோன்றி வரும். வெம் = கொடிய. கூற்றன் = யமன். விடும் கயிற்றால் = வீசும் பாசக் கயிற்றால். கட்டும் பொழுது = என்னைக் கட்டும் போது. விடுவிக்க வேண்டும் = நீ வந்து அவன் கையினின்று என்னை மீள்விக்க வேண்டும்.

சுருக்க உரை
எட்டு திக்கு யானைகளும் குலகிரிகளும் விட்டு ஓடும் படி, பர வெளி வரையில் தனது தோகையை விரிக்கும் மயில் வாகனனே.
எருமைக் கடாவில் வரும் யமன் என்னைப் பாசக் கயிற்றால் கட்ட வரும் போது நீ வந்து விடுவிக்க வேண்டும்.

விளக்கக் குறிப்புகள்
அ. கராசலங்கள் எட்டும்....
கரம் = கை. அசலம் = மலை. (மலை போன்ற உருவங்களைக் கொண்ட யானை). எட்டுத் திக்குகளில் உள்ள யானைகளும் எட்டு மலைகளும் உலகைத் தாங்கி வருகின்றன என்பது புராணம்.
ஆ. எட்டாத வெளி மட்டும் புதைய விரிக்கும்.....

(வடக்கிற் கிரிக்கப் புறத்துநின்
தோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப்
புறத்தும் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்தும்) ---- கந்தர் அலங்காரம் 96.
இ. கூற்றன் விடும் கயிற்றால் கட்டும் பொழுது விடுவிக்க.....
மரண காலத்தில் தன்னைக் காக்க வேண்டும் என்று பல இடங்களில் பல இடங்களில் அருணகிரியார் குறிப்பிட்டிருக்கின்றார்.
(கார்மா மிசை கா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்) --- கந்தர் அனுபூதி 10.
(ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே) --- கந்தர் அலங்காரம் 23.
(......கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்) --- கந்தர் அலங்காரம் 50.
(மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்) ---- கந்தர் அலங்காரம் 80.

66.
நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கும ரற்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே.

பதம் பிரித்தல்

நீர் குமிழிக்கு நிகர் என்பர் யாக்கை நில்லாது செல்வம்
பார்க்கும் இடத்து அந்த மின் போலும் என்பர் பசித்து வந்தே
ஏற்கும் அவர்க்கு இட என்னில் எங்கேனும் எழுந்து இருப்பார்
வேல் குமரனிடம் அன்பு இல்லாதவர்கள் ஞானம் மிகவும் நன்றே.

பத உரை

யாக்கை = உடல். நீர்க் குமிழுக்கு நிகர் என்பர் = நீரில் தோன்றும் குமிழியைப் போல திடீரென்று தோன்றி மறையும் தன்மை உடையது என்பார்கள்.
பார்க்குமிடத்து = ஆராய்ந்து பார்க்கின். செல்வம் மின் போலும் என்பர் = செல்வம் மின்னலைப் போல விரைவில் தோன்றி மறையும் தன்மையது என்று (உலகோர்கள்) சொல்லுவார்கள்.
பசித்து வந்து = (ஆனால்) பசியுடன் வந்து. ஏற்கும் அவர்க்கு = பிச்சை எடுப்பவர்களுக்கு. இட என்னில் = ஏதேனும் கொடுக்க வேண்டி வந்தால்.
எங்கேனும் எழுந்திருப்பார் = (எங்கேயாயினும் நழுவி) எழுந்து போய் விடுவார்கள்.
வேல் குமரனிடம் அன்பு இலாதவர் = (இங்ஙனம் செய்பவர்கள்) வேல் ஏந்தும் கந்தனிடம் அன்பு இல்லாதவர்களாகும். ஞானம் மிகவும் நன்றே = இத்தகையவர்கள் அறிவு மிகவும் சிறந்தது என்று தான் பரிகசித்துக் கூற வேண்டியிருக்கின்றது.

சுருக்க உரை

உடல் நீர்க் குமிழி போல் நிலையாதது, செல்வம் தோன்றி விரைவில் மறையக் கூடியது, என்று உலகத்தவர்கள் பலர் பேசுவார்கள். ஆனால் பசித்து யாராவது பிச்சை கேட்க வந்தால் எங்கோயாவது எழுந்து போய் விடுவார்கள்.
இத்தகையவர்கள் வேல் கந்தனிடம் அன்பு இல்லாதவர்கள் ஆவார்கள். ஏனென்றால் குமரனிடம் அன்பு இருந்தால் எவ்வுயிரிலும் முருகன் உளன் என்பதை உணர்ந்திருப்பர். எனவே இவர்கள் ஞானம் மிக்க எப்படிச் சிறந்தது என்று வியப்பாக இருக்கின்றது.

விளக்கக் குறிப்புகள்

அ. நீர்க் குமிழிக்கு நிகர்....
(நீரிற் குமிழி இளமை நிறை செல்வம்

நீரிற் சுருட்டு நெடுந் திரைகள்.
நீரில் எழுத்தாகும் யாக்கை....) --- நீதி நெறி விளக்கம் (காப்பு).
(செல்வம் சகடக் கால் போல வரும்)--- நாலடியார் 2.
(..கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்)---- கந்தர் அனுபூதி 7.

67.
பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

பதம் பிரித்தல்
பெறுதற்கு அரிய பிறவியை பெற்று நின் சிற்றடியை
குறுகி பணிந்து பெற கற்றிலேன் மத கும்பம் கம்பம்
தறுகண் சிறு கண் சங்க்ராமம் சயிலம் சரசவல்லி
இறுக தழுவும் கடகாசல பன்னிரு புயனே.

பத உரை
மத = மதம் பெருகும். கும்பம் = மத்தகத்தை உடையதாய். கம்பம் = கட்டப்படும் தூணை உடையதாய். தறுகண் = அஞ்சாமையை உடையதாய். சிறு கண் = சிறிய கண்களைக் கொண்டதாய். சங்க்ராம = போருக்கு உற்றதான. சயில = மலை போன்ற ஐராவதம் என்னும் யானையால் வளர்க்கப்பட்டவளும். சரசவல்லி = இனிய குணத்தை உடையவளும், கொடி போன்றவளுமாகிய தேவசேனையை. இறுகத் தழுவும் = அழுந்தத் தழுவி மகிழும். கடகாசல = கடகத்தை அணிந்த. பன்னிரு புயனே = பன்னிரண்டு தோள்களை உடையவனே.
பெறுதற்கு அரிய பிறவியை = பெறுதற்கு மிக அரியதான இப்பிறவியை. பெற்று = புண்ணிய வசத்தால் நான் பெற்றிருந்தும். நின் சிற்றடியை = உன் திருவடிகளை. குறுகிப் பணிந்து = நெருங்கிப் பணிந்து. பெற = வீடு பேற்றைப் பெறும் வழியை. கற்றிலேன் = கற்கவில்லை. (ஈதென்ன பாவம்).

சுருக்க உரை
மத்தகத்தையும், கம்பத்தையும், அஞ்சாமையையும், சிறிய கண்களையும் கொண்ட ஐராவதத்தால் வளர்க்கப் பட்டவளும், இனியவளுமாகிய தேவசேனையைத் தழுவும் பன்னிரு புயங்களைக் கொண்ட முருகனே.
பெறுதற்கரிய இந்த மானிடப் பிறவியைப் பெற்றும், உன் திருவடிகளை வணங்கி, வீடு பேற்றை அடையும் வழியை நான் கற்கவில்லை. என்ன பரிதாபம்.

விளக்கக் குறிப்புகள்
அ. பெறுதற்கரிய பிறவியைப் பெற்று.....
(பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார் --- திருமந்திரம் 2052.
(அரிது அரிது மானிடராதல் அரிது) ---- (ஔவையார்)
(எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரியது காண்)---
தாயுமானவர்(சித்தர) 4.
(பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்) ---- பெரிய புராணம் (காரைக்கால் அம்மையார்) 60.
(பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்) ---- திருக்குறள் 10.
ஆ. மத கும்ப கம்பத் தறுகண் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி...
(செரு கும்ப ராக அயிராவதத் தெய்வயானை மணம்)--- கந்தர் அந்தாதி 46.
இ. கடகாசல....
கடகம் = ஒரு வகை ஆபரணம்.

(கடகபுய மீது ரத்ன)--- திருப்புகழ் (சரணகமலாலயத்தை).

68.
சாடுஞ் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே.
பதம் பிரித்தல்
சாடும் சமர தனி வேல் முருகன் சரணத்திலே
ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு உகம் போய் சகம் போய்
பாடும் கவுரி பவுரி கொண்டாட பசுபதி நின்று
ஆடும் பொழுது பரமாய் இருக்கும் அதீதத்திலே.
பத உரை
ஓடுங் கருத்தை = நிலையற்று ஓடிக்கொண்டே இருக்கும் எண்ணங்களைக் கொண்ட மனதை. சாடும் = கொலை புரியும். சமரத் தனி வேல் = போருக்கு உற்ற ஒப்பற்ற வேலை ஏந்தும். முருகன் சரணத்திலே = முருகனின் திருவடிகளில். கருத்தை நிறுத்த வல்லார்க்கு = நிலைத்து இருக்கும்படி செய்ய வல்லாருக்கு. உகம் போய் = (அந்த மனம்) கால அளவு அற்று. சகம் போய் = உலக வாசனை அற்று. பாடும் கவுரி = பாட்டைப் பாடும் உமாதேவி. பவுரி கொண்டாட = தனது கூத்தைக் கொண்டாட. பசுபதி = உயிர்களுக்குத் தலைவனான கூத்தப் பிரான். நின்று ஆடும் போது = நின்று நடனம் புரியும் போது. அதீதத்தில் = மன வாசம் கடந்த நிலையில். பரமாய் இருக்கும் = மேலான பேரானந்த மயமாக இருக்கும்.
சுருக்க உரை
நிலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கும் மனதை, வேல் ஏந்தும் முருகனின் திருவடிகளில் நிலைத்து இருக்கச் செய்ய வல்லவர்களால், கால வரைகளையும், உலகப் பற்றையும் கடந்த, இறைவி அம்பிகை சுழன்று கூத்தாட, உயிர்களுக்கு எல்லாம் தலைவனான கூத்தப்பிரான் நின்று ஆடுகின்ற அந்த மேலான பரமானந்த நிலையைப் பெறக்கூடும்.
விளக்கக் குறிப்புகள்
அ. சாடும் தனி வேல்.....
(சாடுந் தனிவேல் முருகன் சரணம்) --- கந்தர் அனுபூதி 44.
ஆ. முருகன் சரணத்திலே ஓடும் கருத்தை....
(சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத)--- திருப்புகழ் (சரணகமலாலயத்தை)
(காட்டில் குறத்தி பிரான்பதத்
தேகருத் தைப்புகட்டின்)---- கந்தர் அலங்காரம் 85.
இ. ஓடும் கருத்தை யிருத்த.....
(ஒரு கால் திரிகையில் ஆயிரக் கோடி சுற்று ஓடும் உளம்)---- கந்தர் அந்தாதி 34.
ஈ. பசுபதி நின்றாடும் பொழுது....
(ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாக குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக
இந்து தாழ் சடையான் ஆடும்)---- பெரிய புராணம் (தடுத்தாட்) 106.

69.
தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்சத்தி வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே.
பதம் பிரித்தல்

தந்தைக்கு முன்னம் தனி ஞான வாள் ஒன்று சாதித்து அருள்
கந்த சுவாமி எனை தேற்றிய பின்னர் காலன் வெம்பி
வந்து இப்பொழுது என்ன செய்யலாம் சத்தி வாள் ஒன்றினால்
சிந்த துணிப்பன் தணிப்பரும் கோப த்ரி சூலத்தையே.

பத உரை

தந்தைக்கு = தன் தந்தைக்கு. முன்னம் = முன்பு தனி வாள் ஒன்று = ஞான வாளாகிய மௌன உபதேசம் ஒன்றை. சாதித்து = அருளிய. கந்த சுவாமி = கந்த சாமிக் கடவுள். எனை தேற்றிய பின்னர் = என்னை அந்த உபதேச மொழியைத் தெளிவு பெறச் செய்து திடப் படுத்திய பின்னர். காலன் = யமன். வெம்பி = கோபித்து. வந்து இப்பொழுது என்ன செய்யலாம் = வந்து என்னை என்ன செய்யக் கூடும்.
சத்தி வாள் ஒன்றினால் = ஞான வாள் எனப்படும் சத்தி வாள் ஒன்று கொண்டே.
தணிப்பரும் = அடக்க முடியாத. கோப = கோபத்துடன் வரும். த்ரி சூலத்தை = (அந்த யமனின்) முத்தலைச் சூலத்தை. சிந்தத் துணிப்பன் = துண்டாய் விழும்படி வெட்டி விடுவேன்.

சுருக்க உரை

தன் தந்தையாகிய சிவ பெருமானுக்கு மௌன உபதேசத்தை அருளிய கந்த சுவாமி எனக்கும் அந்த உபதேசத்தைத் தெளிவு பெறச் செய்த பின், யமன் கோபித்து வந்து என்னை என்ன செய்யக் கூடும் ?
அப்படி வந்தால் என்னிடம் உள்ள ஞான வாளால் அவனுடைய முத்தலைச் சூலத்தைத் துண்டாய் விழும்படி வெட்டி விடுவேன்.

விளக்கக் குறிப்புகள்

அ. சத்தி வாள் ஒன்றினால்....
(எமபடரை மோது மோன உரையில் உபதேச வாளை) ---- திருப்புகழ் (ஒருவழிய).
ஞான வாள் - ஆணவம் ஆகிய மலங்களை வெட்டக் கூடியது ஆதலின்.
(என் அவிரோத ஞானச் சுடர் வடி வாள் கண்டாயடா)--- கந்தர் அலங்காரம் 25.
ஆ. வெம்பி வந்து இப்பொழுது....
(வெம்ப வருகிற்பதன்று கூற்றம் நம்மேல்) ---- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 6-95-2..
இ. கோப த்ரி சூலத்தையே....
(சூலம் பிடித்து எம பாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கு ஒரு காலும் அஞ்சேன்...)----கந்தர் அலங்காரம் (நூற்பயன்) 107.

70.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

பதம் பிரித்தல்

விழிக்கு துணை திரு மென் மலர் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்கு துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்கு துணை அவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்கு துணை வடி வேலும் செங்கோடன் மயூரமுமே.

பத உரை

திரு மென் மலர் மாதங்கள் = (முருக வேளின்) அழகிய மென்மை வாய்ந்த திருவடிகள். விழிக்குத் துணை = எனது கண்களுக்குத் துணை. முருகா எனும் நாமங்கள் = முருகா, குமரா, குகா, கந்தா முதலான அவன் திரு நாமங்கள்.
மெய்ம்மை குன்றா = உண்மையான. மொழிக்குத் துணை = மொழியே பேசுவதற்கு உற்ற துணையாக நிற்கும். அவன் பன்னிரு தோளும் = முருகனுடைய பன்னிரண்டு தோள்களும். முன்பு செய்த = நான் முன்பு செய்த. பழிக்குத் துணை = பழிக்கிடமான

செயல்களால் வந்த பாபத்தைப் போக்குவதற்குத் துணையாக இருக்கும். வடி வேலும் செங்கோடன் மயூரமும் = கூரிய வேலாயுதமும் திருச்செங்கோட்டு வேலனது மயிலும். பயந்த தனி வழிக்குத் துணை = நான் பயந்து செல்ல வேண்டிய தனி வழிகளிலெல்லாம் துணை புரியும்.

சுருக்க உரை

முருகவேளின் மென்மையான திருவடிகள் என் கண்களுக்கும், முருகா, குமரா முதலான நாமங்கள் நான் மெய்ம்மையே பேசுவதற்கும், அவனுடைய பன்னிரு தோள்கள் நான் முன்பு செய்த பழிக்கிடமான செயல்களால் வரும் பாபத்தைப் போக்குவதற்கும், நான் பயந்து செல்ல வேண்டிய தனி வழிக்கு முருகனுடைய கூரிய வேலும், செங்கோடனுடைய மயிலும் துணையாயிருந்து என்னைக் காக்கும்.

விளக்கக் குறிப்புகள்

அ. முருகன் திருவடி, திருநாமம், பன்னிரு தோள்கள், வேல், மயில் இவைகளுக்குச் சொல்லப்பட்ட சிறப்பைக் கருதியே (பக்கரை விசித்ரமணி) என்று தொடங்கும் திருப்புகழில் இவைகளைப் புகழ வேண்டும் என்ற அருணகிரிநாதருக்கு வித்தகமருப்புடைய பெருமானின் கட்டளை பிறந்தது.

(ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்) --- கந்தர் அனுபூதி 1.

முருகா எனும் நாமங்கள் - ஆகாமிய வினையையும், பன்னிரு தோள் சஞ்சித வினையையும் பொடி படுத்தும்.

மயில் கன்மங்களை நுகர்வித்து மல பரிபாகம் தரும்.

வேல் - ஞானத்தை அருளிப் பிறவியை நீக்கும்.

ஆ. பயந்த தனி வழிக்கே.....

இது இறந்த பின் (உயிர் போம் அத் தனி வழியையும்))----(கந்தர் அலங்காரம் 59) குறிக்கலாம்.

இ. வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே......

(வேலு மயிலும் நினைந்தவர் தந்துயர்தீர அருள் தரு கந்த)--- திருப்புகழ் (வாளின்முனை).

71.

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொருக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன் சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

பதம் பிரித்தல்

துருத்தி எனும்படி கும்பித்து வாயுவை சுற்றி முறித்து
அருத்தி உடம்பை ஒருக்கில் என்னாம் சிவ யோகம் என்னும்
குருத்தை அறிந்து முகம் ஆறு உடை குருநாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங்கள் கண்டீர் முத்தி கை கண்டதே.

பத உரை

துருத்தி எனும்படி = தோலால் ஆய உலை ஊது கருவி என்று சொல்லும்படி. வாயுவைக் கும்பித்து = (பிராண வாயுவை) உள்ளே நிறுத்தி. சுற்றி முறித்து = அதை வளைத்துத் தடுத்து. அருத்தி = அதையே உடலுக்கு உண்பித்து உடம்பை ஒருக்கில் = உடம்பை வருத்துவதால். என்ன ஆம் = என்ன பயன் பெற முடியம் ? சிவ யோகம் என்னும் குருத்தை = சிவ யோகம் என்கின்ற ஞான மூளையை. அறிந்து = இன்னதென அறிந்து. முகம் ஆறு உடைக் குரு நாதன் = ஆறு முகங்களை உடைய குரு மூர்த்தி. சொன்ன கருத்தை = (சும்மா இரு என்று) உபதேசித்து அருளிய கருத்தை. மனத்தில் இருத்தும் = மனத்தில் அழுத்தி வைத்து வழிபடுங்கள். கண்டீர் முத்தி கை கண்டதே = (அப்பொழுது) உங்களுக்கு முத்தி கை மேல் கண்ட பலனாகச் சித்திக்கும் என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

சுருக்க உரை

(பிராணாயாம முறைப்படி) பிராண வாயுவை உள்ளே இழுத்து, உள்ளடக்கி, அதை உடலுக்கு உண்பித்து, யோகம் செய்து உடலை வருத்துதலால் மட்டும் என்ன பயன் ?
சிவ யோக ஞான அறிவை இன்னதென அறிந்து, ஆறுமுகன் உபதேசித்த சும்மா இரு என்ற கருத்தை மனதில் நன்கு அழுந்த வைத்தால், முத்தி கை கண்ட பலனாகக் கிடைக்கும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. அருத்தி உடம்பை ஒருக்கி....
அருத்தி = பூரகம் செய்து பிராணாயாம முறைப்படி யோகம் செய்வது. பூரகம் (மூச்சை உள்ளே இழுத்தல்), கும்பகம் (உள்ளே இழுத்த மூச்சை நிறுத்துதல்), ரேசகம் (மூச்சை வெளியே விடுதல்) என்னும் செயல்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு செய்வதால், குண்டலினி சக்தியை மூலாதாரத்திலிருந்து எழுப்பி, ஆறு ஆதாரங்கள் வழியாக சமாதி நிலை கைவரப்பட்டு பின் முத்தியை அடையலாம் என்று கருதப்படுகின்றது. இம்முறையில் முத்தி கிடைப்பது மிக அரிது. இத்தகைய யோகமுறையைக் காட்டிலும் பக்தியால் விளையும் சிவ யோக முறையே நன்று என்பது அருணகிரியார் கருத்து.
(மூட்டில் கபாலமூ லாதார
நேர்அண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்து எங்கும் ஓடாமல்
சாதிக்கும் யோகிகளே) ---- கந்தர் அலங்காரம் 85.
ஆ. குருநாதன் சொன்ன கருத்தை....
(சும்மா ருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே)---- கந்தர் அனுபூதி 12.
இ. சிவயோகம் என்னும் குருத்தை....
(சீலத்தை மௌளத் தெளிநாது அறி
வார்சிவ யோகிகளே) --- கந்தர் அலங்காரம் 26.

72.
சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தழிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

பதம் பிரித்தல்

சேந்தனை கந்தனை செங்கோட்டு வெற்பனை செம் சுடர் வேல்
வேந்தனை செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனை கந்த கடம்பனை கார் மயில் வாகனனை
சாந்துணை போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வு இல்லையே.

பத உரை

சேந்தனை = செந்நிறம் உடையவனை. கந்தனை = கந்தப் பெருமானை. செங்கோட்டு வெற்பனை = திருச்செங்கோட்டு மலையில் உறைபவனை. செம் சுடர் வேல் வேந்தனை = செவ்விய ஒளி வீசும் வேலை ஏந்திய அரசே. செந் தமிழ் நூல் விரித்தோனை = (அகப் பொருள் இலக்கணத்தின் உண்மைப் பொருளைத் தெரிவித்துச்) செந்தமிழ் நூல்களுக்கு விளக்கம் தந்தவனை. விளங்கு வள்ளி = விளங்கும் வள்ளி தேவியின். காந்தனை = நாயகனை. கந்த = நறு மணம் உள்ள. கடம்பனை = கடப்ப மலை அணிந்தவனை. கார் மயில் வாகனனை= நீல மயிலை வாகனமாகக் கொண்டவனை. சாந்துணைப் போதும் = இறக்கும் பொழுதும் கூட. மறவாதவர்க்கு = மறவாதவர்களுக்கு. ஒரு தாழ்வும் இல்லையே = யாதொரு குறையும் இல்லை.

சுருக்க உரை

செந்நிறம் உடையவனை, கந்தனை, திருச்சேங்கோட்டு மலையில் இருப்பவனை, வேலனை, செந்தமிழ்ப் பாவலனை, வள்ளி நாயகனை, கடம்பனை, நீல மயில் வாகனனை மறவாதவர்களுக்கு இறக்கும் பொழுதும் கூட யாதொரு குறையும் இல்லை.

விளக்கக் குறிப்புகள்

அ. சேந்தனை....
சேந்தன் = செந்நிறமுடையவன்.
(பவளத்தன்ன மேனி) --- குறுந்தொகை - கடவுள் வாழ்த்து
(செய்யன் சிவந்த ஆடையன்) --- நக்கீரர் (திருமுருகாற்றுப்படை) 206.
(செய்யோய் மயிலேறிய சேவகனே) --- கந்தர் அனுபூதி 25.
ஆ. கந்தனை....
கந்தன் = ஆறு திருவுருவங்களும் ஒன்றாகச் சேர்க்கப் பட்டவன்.
(சேயவன் வடிவ வாறும் திரட்டிநீ ஒன்றாச் செய்தாய்
ஆயதனாலே கந்த னாமெனும் நாமம் பெற்றான்) ---- கந்த புராணம் 1-14-17.
இ. செந்தமிழ் விரித்தோனை...
செந்தமிழ்க் கடவுளாய் அகத்தியருக்குத் தமிழ் உபதேசித்தவர். அகத்தியர் மூலம் தமிழைப் பரவ வைத்தவர்.
(ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்)----- திருப்புகழ்(சீரானகோல).
(மோகன விருப்பைக் காட்டி ஞானமு மெடுத்துக் காட்டி
மூதமிழ் முனிக்குக் கூட்டு குருநாதா)---- திருப்புகழ்(மேகலைநெகி).
மற்றும் திருஞான சம்பந்தரை முருகனது திரு அவதாரம் என்ற கருத்து உண்டு.
(நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்) --- சுந்தரர் தேவாரத் திருமுறை 7- 62- 68.
(நல்ல செந் தமிழ் வல்லவன் ஞான சம்பந்தன்) ---- சம்பந்தர் தேவாரத் திருமுறை 2-82-11.
(ஞான சம்பந்தன் உரை செய் சங்கமலி செந்தமிழ்கள்) ---- சம்பந்தர் தேவாரத் திருமுறை 3-74-11.
ஈ. சாந்துணைப் போதும் மறவாதவர்.......
சாவுந்துணை, சாம்போதும் துணை எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம்.
(காலன் எனதாவய தனையே குறுகி வருபோது...ஆதிமுருகா எனவும்...நினைவு தருவாயே)--- திருப்புகழ் (சூதினுணவாசை).

73.

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மநோலயந் தானே தருமெனைத் தன் வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆநந்தமே.

பதம் பிரித்தல்

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும் இல்லாத ஒன்று வந்து வந்து
தாக்கும் மநோலயம் தானே தரும் எனை தன் வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணாது இந்த ஆநந்தமே.

பத உரை

அறு முகவா = ஆறு முகப் பெருமானே. போக்கும் வரவும் = அழிதலும், தோன்றுதலும். இரவும் பகலும் = இரவும் பகலும். புறம்பும் உள்ளும் = வெளியேயும் உள்ளேயும். வாக்கும் வடிவும் முடிவும் = வாக்கு, வடிவு முடிவு என்பன. இல்லாத = இல்லாததான. ஒன்று = ஒரு பொருள். வந்து வந்து = அடிக்கடி வந்து. தாக்கும் = அலைபோல என்னை மோதுகின்றது. (மேலும்). மநோ லயம் தானே தரும் = அது

யான், எனது என்னும் நிலையை இழக்கச் செய்து. எனைத் தன் வசத்தே ஆக்கும் = என்னையும் தன் வசமாகி விடுகின்றது. சொல்லொணாது இந்த ஆனந்தமே = இந்தப் பேரானந்தம் இத்கையது என்று எடுத்து உரைக்க முடியாது.

சுருக்க உரை

பிறத்தல், இறத்தல், இரவு, பகல், வெளி, உள், உரை, வடிவு, முடிவு இவை எதுவும் இல்லாத ஒரு பொருள் அலை போல் என்னை வந்து மோதுகின்றது. மேலும் அது யான், எனது என்னும் நிலையை இழக்கச் செய்து, என்னையும் தன் வசமாக்கி விடுகின்றது. இந்த ஆனந்தமான நிலையை இத்தகையது என்று எடுத்து உரைக்க முடியாது. அதை அனுபவிக்க மட்டும் தான் இயலும்.

விளக்கக் குறிப்புகள்

அ. போக்கு வரவும்......
(போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே) ---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) சிவ புராணம் 77.
(போக்கும் வரவும் புறப்புள்ளு மாகிநின்று
தாக்கும் ஒருபொருளைச் சந்திப்ப தெக்காலம்) ---- பத்திரகிரியார் (மெய்ஞ்ஞானப் புலம்பல்) 190.
ஆ. இரவும் பகலும் .....
(இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்) --- திருமந்திரம் 318.
இ. புறம்புமுள்ளும்....
(உள்ளும் புறம்பு நின்ற துற்றறிவ தெக்காலம்)----- பத்திரகிரியார் (மெய்ஞ்ஞானப் புலம்பல்) 203.
ஈ. வாக்கும்.....
(சொல்லிறந்து நின்ற தொன்மை ஆதிகுணம் ஒன்றும் இல்லான்)----- மாணிக்கவாசகர் (திருவாசகம்) குயில் 1.
(மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே) ---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) - சிவபுராணம 45.
உ. வடிவும்.....
(உருவாய் அருவாய் உளதாய் இலதாய்)---- கந்தர் அனுபூதி 51.
ஊ. முடிவு இல்லாதது.....
(ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி)---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) - திருவெம்பாவை 1.
எ. மநோலயம் தானே.....
(மவுன பஞ்சர மனோலய சுகந் தருவாயே)---- திருப்புகழ் (கரவுசேர்).
ஏ. சொல்லொணா திந்த ஆனந்தமே.....
(சொல்லுகைக் கில்லையென் றெல்லாம்
இழந்து சும்மாவிருக்கும்)--- கந்தர் அலங்காரம் 10.

74.

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்தஅன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடியஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே.

பதம் பிரித்தல்

அரா புனை வேணியன் சேய் அருள் வேண்டும் அவிழ்ந்த அன்பால்
குரா புனை தண்டையன் தாள் தொழ வேண்டும் கொடிய ஐவர்
பராக்கு அற வேண்டும் மனமும் பதைப்பு அறல் வேண்டும் என்றால்
இராப் பகல் அற்ற இடத்தே இருக்கை எளிது அல்லவே.

பத உரை

அரா = பாம்பினை. புனை – அணிந்துள்ள. வேணியன் = சடையை உடைய பெருமானது. சேய் = குழந்தையாகிய முருகனின். அருள் வேண்டும் = திருவருள் வேண்டும். அவிழ்ந்த அன்பு – நான் எனும் அகந்தை அற்ற நிலையதான அன்புடனே. குரா = குராமலரை. புனை = அணிந்துள்ள. தண்டை = தண்டை விளங்கும். அம் தாள் தொழல் வேண்டும் = (முருக வேளின்) அழகிய திருவடிகளைத் தொழ வேண்டும். கொடிய = பொல்லாத. ஐவர் = ஐந்து பொறிகளால் ஏற்படும். பராக்கு அறல் வேண்டும் = கவர்ச்சியை நீக்குதல் வேண்டும். மனமும் பதைப்பு அறல் வேண்டும் = மனத்தின் வேகக் கொதிப்பு தணிய வேண்டும் . என்றால் = (இவ்வளவு இலக்கணங்களும் இருக்க வேண்டும்) என்றால்.
இராப் பகல் அற்ற = இரவும் பகலும் இல்லாத. இடத்தே இருக்கை = நிலையில் இருத்தல். எளிது அல்லவே = அவ்வளவு சுலபம் அல்ல என்பது புலப்படும்.

சுருக்க உரை

பாம்பு அணிந்தவனும் சடையை உடையவனுமாகிய சிவபெருமான் குழந்தையாகிய முருகனின் திருவருள் வேண்டும். நான் என்னும் அகந்தை இல்லாத நிலையான அன்புடன் முருகனுடைய அழகிய திருவடிகளைத் தொழ வேண்டும். ஐம்பொறிகளால் ஏற்படும் மனக் கலக்கம் நீங்கி, மனதின் வேகம் குறையவும் வேண்டும். இவைகளைச் சாதிக்க இரவு பகல் அற்ற நிலையில் இருத்தல் வேண்டும். இது எளிதான காரியம் அல்ல.

விளக்கக் குறிப்புகள்

அ. இராப்பக லற்ற இடத்தே யிருக்கை....
(இரவு பக லில்லா இன்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற) ---- திருவுந்தியார் 20.
ஆ. மனமும் பதைப்பு அறல் வேண்டும்.....
(உள்ளம் அடங்கியதில்லை
உள்ளம் அடங்குறின் அல்லால் தெளளரிய சிவஞானம் சிவணாது)---- தணிகைப் புராணம். இராமன் அருள் பேறு படலம் 42.

75.
படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

பதம் பிரித்தல்

படிக்கின்றிலை பழநி திரு நாமம் படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமல் இட்டு
மிடிக்கின்றிலை பரமாநந்தம் மேற் கொள விம்மி விம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சம் ஏது நமக்கு இனியே.

பத உரை

நெஞ்சமே = மனமே. பழநி திருநாமம் = பழனித் தலத்தின் திருநாமத்தை. படிக்கின்றிலை = படிப்பது இல்லை. படிப்பவர் = அங்ஙனம் படிப்பவர்களின். தாள் = திருவடியை. முடிக்கின்றிலை = உன் தலையில் சூடிக் கொள்ளுவது கிடையாது. முருகா என்கிலை = முருகா என்கின்ற நாமத்தை செபிப்பது கிடையாது. முசியாமல் = மனம் பின் வாங்காமல் தாராள சிந்தையுடன். இட்டு = வறியோர்களுக்கு ஈந்து. மிடிக்கின்றிலை = நீ வறுமை அடைவது கிடையாது. பரமானந்தம் மேல் எழ = உயர்ந்த ஆனந்தம் மேலிட்டு. விம்மி விம்மி = விம்மி அழுது அழுது. நடிக்கின்றிலை = கூத்தாடுவது இல்லை. தஞ்சம் ஏது நமக்கே = (இவ்வாறு குறைபாடுகள் இருந்தால்) நமக்குப் புகலிடம் எங்கே இருக்கின்றது.

சுருக்க உரை

மனமே, நீ பழனித் தலத்தின் திருநாமத்தைப் படிப்பது இல்லை. படிப்பவர்களின் தலையைச் சூடுவது கிடையாது. முருகன் நாமத்தை செபிப்பதும் இல்லை.

தாராளமாக வறியோர்களுக்கு தானம் செய்து நீ வறுமை அடைவதில்லை. பரமானந்தம் மேலிட கூத்தாடுவதும் இல்லை. இத்தகைய குறைகள் இருந்தால் நமக்குப் புகலிடம் எங்கு உள்ளது ?

விளக்கக் குறிப்புகள்

அ. படிக்கின்றிலை பழநித் திருநாமம்......
(உனது பழநிமலையெனு மூரைச்சேவித் தறியேனே)---- திருப்புகழ் (ஒருபொழுது).

ஆ. முருகாவென்றிலை.....
(முருகா எனஓர் தரம்ஓ தடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே) ---- திருப்புகழ் (எருவாய்).
(அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் -- நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்)---- திருமுருகாற்றுப்படை வெண்பா 6.

இ. முசியாமல் இட்டு மிடிக்கின்றிலை.....
(சுவதலின் இன்னாத தில்லை யினிததூஉம்
ஈதல் இயையாக் கடை)---- திருக்குறள் 230.

ஈ. விம்மி விம்மி நடிக்கின்றிலை....
(நெக்குநெக்குள் உருகி ....நக்கும் அழுதும்
தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்து நவிற்றி) ---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) புணர்ச்சி 8.

76.

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

பதம் பிரித்தல்

கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றம் என் குன்று எறிந்த
தாடாளனே தென் தணிகை குமர நின் தண்டை அம் தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணும் தொழாத கையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே.

பத உரை

குன்று எறிந்த = கிரௌஞ்ச மலையைப் பிளந்து எறிந்த. தாடாளனே = ஊக்கமும் பெருந் திறலும் வாய்ந்தவனே. தென் தணிகைக் குமர = அழகிய திருத்தணிகை மலைக் குமரனே. கோடாத = நீதி தவறாத. வேதனுக்கு = வேதத் தலைவனான பிரமனுக்கு. யான் செய்த குற்றம் என் = நான் என்ன குற்றம் செய்தேன். நின் = உன்னுடைய. தண்டை = தண்டைகள் அணிந்த. அம் தாள் = அழகிய திருவடிகளை. சூடாத = சுட்டிக் கொள்ளாத. சென்னியும் = தலையும். நாடாத = உன் திருவுருவைக் காணாத. கண்ணும் = கண்ணும். தொழாத கையும் = திருவடியைத் தொழாத கையும். பாடாத நாவும் = உன் திருப்புகழைப் பாடாத நாவும். எனக்கே தெரிந்து படைத்தனனே = எனக்கென்றே பொறுக்கி எடுத்துப் படைத்துள்ளானே ?

சுருக்க உரை

கிரௌஞ்ச மலையைப் பிளந்து எறிந்தவனே. தணிகை மலைக் குமரனே. நீதி வழுவாத பிரமனுக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?
(அப்படி இல்லை என்றால்) உன்னுடைய திருவடிகளைச் சூட்டிக் கொள்ளாத தலையையும், உன் திருவருவைக் காணாத கண்ணையும், உன்னைத் தொழாத கையையும், உன் திருப்புகழைப் பாடாத நாவையும் எனக்கென்றே எவ்வாறு பொருக்கி எடுத்து என்னைப் படைத்துள்ளான். (இது மிகவும் விந்தையே.)

விளக்கக் குறிப்புகள்

அ. தாடாளன் = பெரு முயற்சி செய்பவன்.

(மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்)----- நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் (திருமங்கை ஆழ்வார்) 3-4-1.
ஆ. நின் தண்டையந்தாள் சூடாத சென்னியும்....
(சூழுதல் வேண்டுந் தாள்கள், தொழுதிடல் வேண்டும் அங்கை, தாழுதல் வேண்டுஞ் சென்னி, துதித்தடல் வேண்டும் தாலு) --- கந்த புராணம் (சூரபன்மன் வதைப்படலம் 444.
இ. சூடாத சென்னி......
(தலையே நீ வணங்காய் தலை மாலை தலைக்கணிந்து தலையாலே பலி தேறும் தலைவனைத் தலையே நீ வணங்காய்)--- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-9-1.
(ஆமாத்தூர் அம்மானைக் காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே)--- சம்பந்தர் தேவாரத் திருமுறை 2-44-4.
(ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையில் பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வதொன் றறியேனே) ---
மாணிக்கவாசகர் (திருவாசகம்) திருச்சதகம் 31.
ஈ. உலக மக்களிடம் இருக்கும் குறைகளைத் தம்மீது ஏற்றிக் குறைபட்டுக் கொள்ளுவது சான்றோர் மரபு. இதன் காரணமாகவே தான் இறைவன் திருவடிகளைச் சூடுவதில்லை, நாமத்தைப் பாடுவது இல்லை, துதிப்பதும் இல்லை என்று அருணகிரிநாதர் தாம் இயற்றிய பல நூல்களில், பல முறைகள் தற்குறிப்பேற்ற அணியாகக் கூறியிருக்கின்றார்.
எ. மூன்று தலங்களின் பெறுமை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.
மனத்தால் தியானிக்க - திருச் செந்தூர்.
வாக்கால் செபிக்க - பழநி.
காயத்தால் தொழ - திருத்தணிகை.

77.
சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரஎண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்குநெஞ்சே.

பதம் பிரித்தல்

சேல் வாங்கு கண்ணியர் வண்ண பயோதரம் சேர எண்ணி
மால் வாங்கி ஏங்கி மயங்காமல் வெள்ளி மலை எனவே
கால் வாங்கி நிற்கும் களிற்றான் கிழத்தி கழுத்தில் கட்டு
நூல் வாங்கிடாது அன்று வேல் வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே.

பத உரை

சேல் வாங்கும் = சேல் மீனை வெல்லும். கண்ணியர் = கண்களையுடைய (விலை) மாதர். வண்ணப் பயோதரம் = அழகிய கொங்கைகளை. சேர எண்ணி = சேர்வதற்கு எண்ணம் கொண்டு. மால் வாங்கி - காம ஆசை பூண்டு. ஏங்கி மயங்காமல் = ஏக்கமுற்று மயங்காமல். வெள்ளி மலை எனவே கால் வாங்கி நிற்கும் களிற்றான் - வெண்மை நிறம் கொண்ட பாரமான கால்களை உடைய ஐராவதம் என்ற யானையின் தலைவனான இந்திரன். கிழத்தி = மனைவியாகிய சசிதேவி. கழுத்தில் கட்டு நூல் = கழுத்தில் கட்டியிருந்த தாலி. வாங்கிடாது = நீங்காத வண்ணம். அன்று = முன்பு. வேல் வாங்கி = வேலாயுதத்தைச் செலுத்தியவனான முருக வேளின். பூங்கழல் = அழகிய திருவடியை. நெஞ்சே = மனமே. நோக்கு = விரும்புவாயாக.

சுருக்க உரை

மனமே, சேல் மீனையும் வெல்லும் கண்களை உடைய விலை மாதர்களின் அழகிய தனங்களைச் சேர எண்ணம் கொண்டு, ஏங்கி மயங்காமல், வெள்ளை யானையாகிய

ஐராவதத்தின் தலைவரான இந்திரன் மனைவி, இந்திராணி, மாங்கல்ய நூலை இழக்காமல் இருக்கும் பொருட்டு, சூரனைக் கொல்ல வேலாயுதத்தைச் செலுத்தியவனான முருக வேளின் திருவடியைத் தியானிப்பாயாக.

விளக்கக் குறிப்புகள்

அ. களிற்றான் கிழத்தி கழுத்தில் கட்டும் நூல்....

சூரனைக் கொன்று தேவர்களை மீட்டுக் காத்ததால் இந்திரன் உயிரை காப்பாற்றப் பட்டதாயிற்று.

(சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரணக் ருபாகர)--- கந்தர் அலங்காரம் 21.

(..சசிதன்வி ளங்கிய மங்கல
நூல்வாங்குகி லாள் வாழ்ந்தனள் ---- திரு வகுப்பு (வேல் வாங்கு வகுப்பு) 14 - 11.

ஆ. வெள்ளி மலை எனவே கால் வாங்கி நிற்கும் களிறற்வன்....

(வெண்கம்ப மால்கிரி) --- திருப்புகழ் (உம்பராரமு).

78.

சூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண் டாடுவீர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவ ரையோ கெடுவீர்நும் மறிவின்மையே.

பதம் பிரித்தல்

சூர் கொண்ட வேலனை போற்றாமல் ஏற்றம் கொண்டு ஆடுவீர்காள்
போர் கொண்ட காலன் உமை கொண்டு போம் அன்று பூண்பனவும்
தார் கொண்ட மாதரும் மாளிகையும் பண சாளிகையும்
ஆர் கொண்டு போவார் ஐயோ கெடுவீர் நும் அறிவின்மையே.

பத உரை

சூர் கொண்ட = சூர்மையான. வேலனை = வேலாயுதம் ஏந்திய முருகனை. போற்றாமல் = போற்றாமல். ஏற்றம் கொண்டு = உங்கள் பெருமையையே பாராட்டி.. ஆடுவீர்கள் = பொழுது போக்குபவர்களே. போர் கொண்ட = போருக்கு எழுந்த வரும். காலன் = யமன். உமைக் கொண்டு போம் அன்று = உங்கள் உயிரைக் கொண்டு போவதற்கு வரும் போது. பூண்பனவும் = நீங்கள் அணியும் ஆபரணங்களும். தார் கொண்ட = பொன் ஆரம் அணிந்த. மாதரும் = மனைவி முதலிய பெண்களும். மாளிகையும் = நீங்கள் வசிக்கும் மாளிகையையும். சாளிகையும் = பணப் பைகளையும். ஆர் கொண்டு போவார் = யார் வந்து எடுத்துக் கொண்டு போவார்கள். ஐயோ கெடுவீர் = ஐயோ, வீணாகக் கெட்டுப் போகின்றீர்களே. நும் அறிவின்மையே =
உங்கள் பேதைமையை என்ன என்று சொல்லுவது?

சுருக்க உரை

வேலாயுதம் ஏந்திய முருகனைப் போற்றாமல், தத்தம் பெருமையையே பேசிப் பொழுது போக்கும் மக்களே.

யமன் உங்கள் உயிரைக் கொண்டு போக வரும் பொழுது, உங்கள் ஆபரணரங்களையும், மனைவி முதலிய மாதர்களையும், நீங்கள் வசிக்கும் மாளிகையையும், செல்வத்தையும் யார் வந்து எடுத்துக் கொண்டு போவார்கள் ? இதை உணராமல் அழிந்து போகின்றீர்களே. உங்கள் பேதமையை என்ன என்று சொல்லுவது?

விளக்கக் குறிப்புகள்

அ. பூண்பனவும் தார் கொண்ட மாதர்களும்......

(மனையாளும் மக்களும் வாழ்வும் தனமும் தன் வாயில் மட்டே
இனமான சுற்றம் மயானமட்டே வழிக்கேது துணை) ---- பட்டினத்தார் (பொது) 12.

(தண்டிகையும் சாவடியும் சாளிகையும் மாளிகையும்

கண்டு களிக்கும் கருத்தொழிவ தெக்காலம்) ---- பத்திரகிரியார் (எக்காலக் கண்ணி) 22.
(அகமாடை மடந்தையர் என் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே) --- கந்தர் அனுபூதி 5.
(..வங்காரமும் உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காத மோகெடு வீர்)--- கந்தர் அலங்காரம் 59.

79.
பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே.

பதம் பிரித்தல்

பந்து ஆடும் மங்கையர் செம் கயல் பார்வையில் பட்டு உழலும்
சிந்த ஆகுலம் தனைத் தீர்த்து அருள்வாய் செய்ய வேல் முருகா
கொந்தார் கடம்பு புடை சூழ் திருத்தணிகை குன்றில் நிற்கும்
கந்தா இளங் குமரா அமராவதி காவலனே.

பத உரை

செய்ய வேல் முருகா = சிவந்த வேல் ஏந்தும் முருகனே. கொந்தார் கடம்பு = பூங்கொத்துக்கள் நிறைந்த கடப்பு மரங்கள். புடை சூழ் = சுற்றுப் பக்கங்களில் சூழ்ந்துள்ள. திருத்தணி குன்றில் = திருத்தணி மலையில். நிற்கும் = வீற்றிருக்கும். கந்தா = கந்தப் பெருமானே. இளங் குமரா = இளங் குமரனே. அமராவதி காவலனே = தேவர்கள் ஊராகிய அமராவதியைக் காத்தருளும் அரசே.
பந்து ஆடும் மங்கையர் = பந்து விளையாடும் மாதர்களின். செம் கயல் பார்வையில் = சிவந்த கயல் மீன் போன்ற பார்வையில். பட்டு உழலும் = அகப்பட்டுத் திரியும். சிந்தாகுலம் தன்னை = மனக் கவலையை. தீர்த்து அருள்வாய் = நீக்கி அருள் புரிவாயாக.

சுருக்க உரை

செவ்வேல் முருகனே. கடப்ப மரங்களால் சூழப்பட்ட திருத்தணிகை மலையில் வீற்றிருக்கும் கந்தப் பெருமானே. குமரனே. விண்ணோர்கள் ஊரான அமராவதியைக் காத்தருளும் அரசே.
பந்து விளையாடும் மங்கையிர்களின் சேல் மீன் போன்ற கண் பார்வையில் சிக்குண்டு உழலும் என் மனக் கவலையைத் தீர்த்து அருள்வாயாக.

விளக்கக் குறிப்புகள்

அ. மங்கையர் செங்கயல் பார்வையில் பட்டுழலும்.....
(எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள்) --- கந்தர் அனுபூதி 46.
(......மெல்லியர் காமக் கலவிக் கள்ளை
மொண்டுண்டு அயர்கினும் வேல்மற
வேன்முது கூளித் திரள்) ---- கந்தர் அலங்காரம் 37.
(பாலே யனைய மொழியார்தம்
இன்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டு.....) ---- கந்தர் அலங்காரம் 41.

80.
மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுரந் தகனைத் த்ரியம்பகனைப்

பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.

பதம் பிரித்தல்

மாகத்தை முட்டி வரும் நெடும் கூற்றவன் வந்தால் என் முன்னே
தோகை புரவியில் தோன்றி நிற்பாய் சுத்த நித்த முத்தி
த்யாக பொருப்பை த்ரிபுரம் அந்தகனை த்ரி அம்பகனை
பாகத்தில் வைக்கும் பரம கல்யாணி தன் பாலகனே.

பத உரை

சுத்த = பரிசுத்தமான. நித்த முத்தி – அழிவில்லாத வீட்டு இன்பத்தைத் தந்தருளும். த்யாகப் பொருப்பை = கருணை மலையை. த்ரி புரம் அந்தகனை = மூன்று புரங்களுக்கு யமனாய் நின்று அழித்த சிவனை. த்ரி அம்பகனை = முக்கண்ணனை. பாகத்தில்வைக்கும் பரம கல்யாணி தன் = பாகத்தே கொண்ட மேலான பார்வதி தேவியின். பாலகனே = மகனான முருகனே..

மாகத்தை முட்டி வரும் = ஆகாய அளவுக்கு உயர்ந்து வருகின்ற. நெடும் கூற்றன் = நீண்ட பெரிய யமன். என் முன்னே வந்தால் = என்னைத் தொடர்ந்து வந்தால். தோகை புரவியில் = தோகையைக் கொண்ட குதிரையாகிய மயில் மீது. தோன்ற நிற்பாய் = எதிரே தோன்றி அருள்வாய்.

சுருக்க உரை

அழிவில்லாத வீட்டின்பத்தைத் தந்தருளும் கருணை மலையை, முப்புரங்களை அழித்த சிவனை, முக்கண்ணனைத் தம் பாகத்தில் வைக்கும் பார்வதியின மகனே. ஆகாயம் வரை நீண்ட பெரிய யமன் என்னைத் தேடி வந்தால், மயில் மீது தோன்றி என் எதிரே தோன்றி அருள்வாய்.

விளக்கக் குறிப்புகள்

அ. நெடுங் கூற்றுவன் வந்தால்......
(கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்...) ---- கந்தர் அனுபூதி 10.
(....கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுது வந்து அஞ்சலென் பாய்..)--- கந்தர் அலங்காரம் 50.
(வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும்) ---- கந்தர் அலங்காரம் 65.

முருகவேள் பன்னிரு திருமுறை (எட்டாந் திருமுறை)
கந்தர் அலங்காரம்

பாகம் 4 - பாடல் 81 - 100

81.
தாரா கணமெனுந் தாய்மார் அறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே.

பதம் பிரித்தல்
தாரா கணம் எனும் தாய் மார் அறுவர் தரும் முலை பால்
ஆராது உமை முலை பால் உண்ட பாலன் அரையில் கட்டும்
சீராவும் கையில் சிறு வாளும் வேலும் என் சிந்தையவே
வாராது அகல் அந்தகா வந்த போது உயிர் வாங்குவனே.

பத உரை
அந்தகா = எமனே.
தாரா கணம் எனும் = நட்சத்திரக் கூட்டம் என்று சொல்லப்டும். தாய் மார் அறுவர் = கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரும். தரும் முலைப் பால் = கொடுத்த முலைப் பாலை. ஆராது = உண்டு வயிறு நிறையாது. உமை முலைப் பால் உண்ட = உமா தேவியின் முலைப் பாலை உண்ட. பாலன் = குழந்தையாகிய முருகவேள். அரையில் கட்டும் = தமது அரையில் கட்டியுள்ள. சீராவும் = உடை வாளும். கையில் சிறு வாளும் = கையில் உள்ள சிறிய வாளும். வேலும் = வேலாயுதமும். என் சிந்தையவே = என் உள்ளத்தில் நிலைத்து நிற்கின்றன.
வாராது அகல் = (ஆதலால்) நீ என்னிடம் வராமல் அகன்று ஓடிப் போய் விடு. வந்த போது = என் சொல்லை மீறி வந்தால். உயிர் வாங்குவனே = உன்னுடைய உயிரை மாய்த்து விடுவேன்.

சுருக்க உரை
கார்த்திகைப் பெண்களின் முலைப் பாலை உண்டு வயிறு நிறையாது, உமாதேவியின் முலைப் பாலையும் உண்ட குழந்தையாகிய முருகவேள் அரையில் கட்டியுள்ள உடை வாளும், கையில் உள்ள சிறு வாளும் வேலாயுதமும் என் மனத்தில் நிலைத்து நிற்கின்றன. ஆதலால் யமனே, என்னிடம் வராமல் ஓடிப் போய்விடு. மீறி வந்தால் உன் உயிரை மாய்த்து விடுவேன்.

விளக்கக் குறிப்புகள்
அ. தாய்மார் அறுவர் தரு முலைப்பால்....
(சரவணப் பூம்பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திரு முலைப் பாலுண்டான் திருக்கைவே லன்றே) ---- சிலப்பதிகாரம் (வஞ்சிக் காண்டம், குன்றக் குரவை) 9.
ஆ. உமை முலைப்பால் - பர ஞானம்.
(கார்த்திகையின் முலைப்பாலும் கவுரிமுலைப் பாலுமுண்டு
மூவர்தொழும் திருத்தணிகை முதுகிரியில் எழுஞ்சுடரே) ---- தணிகைக் கலம்பகம் 1.
இ. சீராவும் கையிற் சிறு வாளும்...
(சேலையும் கட்டிய சீராவுங் கையில்...) ---- கந்தர் அலங்காரம் 27.

82.
தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்புண்ட ரீகனண்ட

முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே.

பதம் பிரித்தல்

தகட்டில் சிவந்த கடம்பையும் நெஞ்சையும் தாள் இணைக்கே
புகட்டி பணிய பணித்து அருளாய் புண்டரீகன் அண்ட
முகட்டை பிளந்து வளர்ந்து இந்த்ர லோகத்தை முட்ட எட்டி
பகட்டில் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே.

பத உரை

புண்டரீகன் = தாமரையில் வாழும் பிரமனது. அண்ட முகட்டைப் பிளந்து = உலக உச்சியைக் கிழித்து. வளர்ந்து = ஓங்கி வளர்ந்து. இந்த்ர லோகத்தை = தேவேந்திரன் உலகத்தை. முட்ட எட்டி = தாக்கி எட்டிப் பிடித்து. பகட்டில் பொருதிட்ட = மத யானை போல் சண்டை செய்த. நிட்டூர = கொடுமை வாய்ந்த. சூர பயங்கரனே = சூரனால் ஏற்பட்ட பயத்தை நீக்கியவனே.
தகட்டில் சிவந்த = இதழ்கள் சிவந்துள்ள. கடம்பையும் = கடப்ப மாலையையும். நெஞ்சையும் = என் மனதையும். தாள் இணைக்கே = உன் இரண்டு திருவடிகளில். புகட்டி = செலுத்தி. பணிய = உன்னைப் பணிய. பணித்து அருளாய் = கட்டளை இட்டு அருள் புரிவாய்.

சுருக்க உரை

தாமரையில் வாழும் பிரமனால் படைக்கப்பட்ட உலகைக் கிழித்து, தேவேந்திர உலகத்தை எட்டிப் பிடித்து, மத யானை போல் போருக்கு வந்த சூரனை அழித்து அவனால் ஏற்பட்ட பயத்தை நீக்கியவனே.
சிவந்த இதழ்கள் உடைய கடப்ப மாலையையும், என் மனதையும் உன் திருவடிகளில் நிலை பெறச் செய்து உன்னைப் பணியும்படி எனக்குக் கட்டளை இட்டு அருள்வாயாக.

விளக்கக் குறிப்புகள்

அ. தகடு - பூவின் புற இதழ்.
கார்த்திகை மாதர் அறுவரும் ஆறு குழந்தைகளையும் சரவணப் பொய்கையில் கடப்ப மர நிழலில் துயில வைத்தனர். தமக்கு நிழல் தந்ததால், கடம்பின் மலர் முருகவேளுக்கு உகந்ததாயிற்று. அவரும் கடம்பன் எனப் பெயர் பெற்றார்.
(கருந்தகட்டுளைப்பூ) ---- நக்கீரர் (திருமுருகாற்றுப்படை) 27.
(அறுவராகும் ஒரு பெரு முதல்வன் தன்னைத் தண்டழை பொதுளும் நீபந்தண்ணிழற் பொய்கை தன்னில்
கஞ்ச மாமலர்ப் பள்ளி சேர்த்திக் கண்டுயில் செய்வித்தேத்த)---- கந்த புராணம் 1-11-118.
ஆ. தாள் இணைக்கே புகட்டிப் பணிய பணித்தருளாய்....
(அவனருளாலே அவன் தாள் வணங்கி)---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) சிவபுராணம் 28.
இ. சூர பயங்கரனே.....
(பதிகா வலசூர பயங் கரனே) --- கந்தர் அனுபூதி 18.
(நிருதசங் கார பயங்கரனே) ---- கந்தர் அலங்காரம் 102.

83.

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமான் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

பதம் பிரித்தல்

தேங்கிய அண்டத்து இமையோர் சிறை விட சிற்றடிக்கே
பூங் கழல் கட்டும் பெருமான் கலாப புரவி மிசை
தாங்கி நடப்ப சூரன் தளம் முறிந்தது தனி வேல்

வாங்கி அனுப்பிட குன்றங்கள் எட்டும் வழி விட்டவே.

பத உரை

தேங்கிய = மனம் கலங்கி இருந்த. அண்டத்து = தேவலோகத்து. இமையோர் = தேவர்களின். சிறை விட = சிறையை ஒழிப்பதற்கு. சிற்றடிக்கே = தனது சிறிய திருவடிகளில். பூங்கழல் கட்டும் பெருமான் = அழகிய வீரக் கழல்களைக் கட்டின முருகவேள். கலாபப் புரவி மிசை = தமது தோகை உடைய குதிரையாகிய மயில் மீது. தாங்கி நடப்ப = ஏறி நடத்த. சூரன் தளம் முறிந்தது = சூரனுடைய சேனைகள் மறிபட்டு அழிந்தன. தனி வேல் = தமது ஒப்பற்ற வேலாயுதத்தை. வாங்கி அனுப்பிட = எடுத்துப் பிரயோகிக்க. குன்றங்கள் எட்டும் வழி விட்டவே = எட்டு திக்குகளிலும் உள்ள மலைகள் வழி விட்டு விலகின.

சுருக்க உரை

என்ன செய்வதென்று மனம் கலங்கியிருந்த தேவர்களைச் சிறையினின்று விடுவிக்க, வீரக் கழல்கள் அணிந்த முருக வேள் தன் மயில் மீது ஏறி நடத்த, சூரனுடைய சேனைகள் அழிந்தன. தமது வேலைச் செலுத்தியவுடன், எட்டு திக்குகளில் உள்ள மலைகளும் வழிவிட்டு விலகி நின்றன.

விளக்கக் குறிப்புகள்

அ. தனிவேல் வாங்கி அனுப்பிட.....

இப்பாடலில் வேலின் பெருமையும், மயிலின் வலிமையும் குறிக்கப்படுகின்றன.

(சிகரநெ டுங்கிரி குகைகள்தி றந்துதி கந்தமும்
லோகாந்தமு நீர்தேங்கின
சிறையுள் அழுந்திய குறைகள் பழிந்து.....) --- வேல்வாங்கு வகுப்பு 14-6-7.

84.

மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும்போய்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

பதம் பிரித்தல்

மை வரும் கண்டத்தர் மைந்த கந்தா என்று வாழ்த்தும் இந்த
கை வரும் தொண்டு அன்றி மற்று அறியேன் கற்ற கல்வியும் போய்
பைவரும் கேளும் பதியும் கதற பழகி நிற்கும்
ஐவரும் கை விட்டு மெய் விடும் போது உன் அடைக்கலமே.

பத உரை

மை வரும் = கருமை நிறம் விளங்கும் . கண்டத்தர் = திருக்கழுத்தை உடைய சிவனது. மைந்த = மகனே. கந்தா என்று = கந்தப் பெருமானே என்று. வாழ்த்தும் = வாழ்த்துகின்ற. இந்தக் கை வரும் = இந்த ஒழுக்கமுறை அமைந்த. தொண்டு அன்றி = வழிபாட்டைத் தவிர. மற்று அறியேன் = உய்யும் வழி வேறு ஒன்றையும் அறியேன். கற்ற கல்வியும் = நான் படித்த படிப்பெல்லாம். போய் = மறந்து போய். பைவரும் = வருத்தமுறும். கேளும் = சுற்றத்தாரும். பதியும் = ஊராரும். கதறி = கதறி அழ. பழகி நிற்கும் = என்னுடன் சேர்ந்து பழகி நின்ற. ஐவரும் கை விட்டு = ஐம்பொறிகளும் தத்தம் தொழில்களைச் செய்யாது நழுவிப் போய். மெய் விடும் பொது = இந்த உடலை நான் விடும் பொழுது. உன் அடைக்கலமே = உன் திருவடிகளே எனக்கு அடைக்கலமாகும்.

சுருக்க உரை

கருமையான கழுத்தை உடைய சிவபெருமானின் மைந்தனே, கந்தப் பெருமோனே என்று உன்னை வாழ்த்தி வணங்கும் வழிபாட்டைத் தவிர உய்வதற்கு வேறு ஒரு வழியையும் நான் அறியேன்.

நான் கற்ற கல்வியும் மறந்து போய், துக்கமுற்ற சுற்றத்தார்களும், ஊராரும், நண்பர்களும் கதறி அழ, என்னுடன் இதுகாறும் இருந்த ஐம்பொறிகளும் தம்

வேலைகளைச் செய்யாமல் நழுவி விட, இந்த உயிரை நான் விடும் போது உன் திருவடிகளே எனக்கு அடைக்கலம் ஆகும்.

விளக்கக் குறிப்புகள்

அ. பழகி நிற்கும் ஐவரும் கைவிட்டு.....
(ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே) ----- திருமந்திரம் 230.
(என்பெற்ற தாயாரும் என்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய ஒருபற்று மில்லை உடையவனே)--- பட்டினத்தார் பொது 28.
(உறவின் முறை கதறியழ ஊராரும் ஆசையற)---- திருப்புகழ் (உறவின்முறை)

85.
காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமு லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

பதம் பிரித்தல்

காட்டில் குறத்தி பிரான் பதத்தே கருத்தை புகட்டின்
வீட்டில் புகுதல் மிக எளிதே விழி நாசி வைத்து
மூட்டி கபால மூலாதாரம் நேர் அண்ட மூச்சை உள்ளே
ஓட்டி பிடித்து எங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே.

பத உரை

விழி = கண்ணோக்கத்தை. நாசி வைத்து = மூக்கின் நுனியில் வைத்து. மூச்சை = பிராண வாயுவை. மூலாதாரம் மூட்டி = மூலாதாரத்தினின்றும் மூண்டு எழச் செய்து. கபால நேர் அண்ட = கபாலத்தை நேராக அண்டும் படி செய்து. உள்ளே ஓட்டிப் பிடித்து = கழுமுனை நாடி வழியே உள்ளே செலுத்திப் பிடித்து. எங்கும் ஓடாமல் = புறத்தே வேறெங்கும் ஓடாதபடி. சாதிக்கும் யோகிகளே = யோக முறையில் சாதிக்கும் யோகிகளே. (ஏன் இப்படிக் கஷ்டப் படுகிறீர்கள்).
காட்டில் = வள்ளி மலைக் காட்டில் வளர்ந்த. குறத்தி பிரான் = குறப் பெண்ணாகிய வள்ளியின் தலைவனான முருகனின். பதத்தே = திருவடிகளில். கருத்தைப் புகட்டின் = நீங்கள் தியானத்தைச் செலுத்தினால். வீட்டில் = முத்தி வீட்டில். புகுதல் மிக எளிதே = புகுதல் மிகவும் எளிய காரியமாகும்.

சுருக்க உரை

கண்ணோக்கத்தை மூக்கின் நுனியில் வைத்து, பிராணவாயுவை உள்ளடக்கி, புறத்தே எங்கும் போகாத படி அடக்கி, உடலை வருத்தி பிரணாயாமம் செய்யும் யோகிகளே. இவ்வாறு உடலை வருத்தாது, குறப் பெண் வள்ளியின் கணவனான முருகன் திருவடிகளில் கருத்தை வைத்தால் மிக எளிதில் முத்தி அடையலாம். இதை அறிந்து உய்மின்கள்.

விளக்கக் குறிப்புகள்

அ. சாதிக்கும் யோகிகளே.....
(சரியையிற் றாழ்க்கலை கிரியையிற் பணிக்கலை
யோகத் துய்க்கலை பாகமும் நோக்கலை
நாளையின் றெனஒரு வேளையும் நவற்றலை
ஈண்டெனக் கருளுதி இறைவா
பூண்டுகொண் டிருப்பனின் பொன்னடித் துணையே) ---- குமரகுருபரர் (பண்டார மும்மணி) 29.
ஆ. விழி நாசி வைத்து.....

மூலாதாரம் = உடலில் உள்ள ஆறு ஆதார சக்ரங்களில் முதலாவது. அங்கு உறங்கிய நிலையில் இருக்கும் குண்டலினி சக்தியை யோகியர் தம் யோக முறையினால் மேல் ஏறும்படி செய்து படிப்படியாக ஆதார சக்ரங்கள் மேலே செலுத்தி உயர் நிலையை அடையச் செய்வர். (இராஜ யோகம்).
(கட்டி முண்ட கரபாலி அங்கிதனை முட்டி அண்டமொடு தாவி) --- திருப்புகழ் (கட்டிமுண்டகர).
இ. காட்டிற் குறத்தி பிரான்.....
வள்ளியின் தியானச் சிறப்பையும் முருகவேளின் கருணையையும் இங்கு விளக்கபட்டுள்ளது.

86.
வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

பதம் பிரித்தல்
வேலாயுதன் சங்கு சக்ராயுதன் விரிஞ்சன் அறியா
சூலாயுதன் தந்த கந்த சுவாமி சுடர் குடுமி
கால் ஆயுத கொடியோன் அருளாய கவசம் உண்டு என்
பால் ஆயுதம் வருமோ யமனோடு பகைக்கினும் .

பத உரை
வேலாயுதன் = வேலாயுதம் ஏந்திய பெருமானே. சங்கு சக்ராயுதன் = சங்கையும் சக்ராயுதத்தையும் ஏந்திய திருமாலும். விரிஞ்சன் = பிரமனும். அறியா = கண்டு அறியாத. சூலாயுதன் - சிவபெருமான். தந்த = ஈன்ற. கந்தச் சுவாமி = கந்தச் சாமி. சுடர்க் குடுமி = ஒளி பொருந்திய கொண்டையை உடையதும். கால் ஆயுதக் கொடியான் = கால்களையே ஆயுதமாகக் கொண்டு சண்டை செய்யும் கோழியைக் கொடியாகக் கொண்ட முருகனின். அருளாய கவசம் = திருவருள் என்னும் கவசத்தை. என்பால் உண்டு = நான் தரித்துள்ளேன். யமனோடு பகைக்கினும் ஆயுதம் வருமோ = யமன் என்னைப் பகைத்துப் போர் புரிய வந்தாலும் அவன் விடும் ஆயுதங்கள் என்னிடம் வர முடியுமா ? (முடியாது என்றபடி).

சுருக்க உரை
சங்கையும் சக்ராயுதத்தையும் ஏந்திய திருமாலும், பிரமனும் கண்டு அறியாத சிவபெருமான் ஈன்ற கந்தச் சுவாமியே. வேலாயுதம் ஏந்திய பெருமானே. கால்களையே ஆயுதமாகக் கொண்டு சண்டை செய்யும் கோழியைக் கொடியாகக் கொண்டவனே. உன் திருவருள் ஆகிய கவசம் என்னிடம் இருப்பதால், யமனே பகைத்து என் மீது போர் புரிய வந்தாலும் அவன் ஆயுதங்கள் என்னை என்ன செய்ய முடியும் ?

விளக்கக் குறிப்புகள்
அ. கால் ஆயுத கொடியோன்......
(காற்படைக் கொடியினன்) --- கல்லாடம் 69.

87.
குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமான் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

பதம் பிரித்தல்
குமரா சரணம் சரணம் என்று அண்டர் குழாம் துதிக்கும்
அமராவதியில் பெருமான் திருமுகம் ஆறும் கண்ட

தமராகி வைகும் தனியான ஞான தபோதனர்க்கு இங்கு
எமராசன் விட்ட கடை ஏடு வந்து இனி என் செயுமே.

பத உரை

குமரா = குமார மூர்த்தியே. சரணம் சரணம் என = உன் திருவடிகளே, சரணம் சரணம் என்று. அண்டர் குழாம் = தேவர்கள் கூட்டம். துதிக்கும் = துதிக்கின்ற. அமராவதியில் = பொன்னுலக நகராகிய அமராவதியில்
வீற்றிருக்கும். பெருமான் = பெருமாள் ஆகிய. திருமுகம் ஆறும் கண்ட = அழகிய ஆறு திருமுகங்களையயும் கண்ட முருகவேளுக்கு.
தமராகி = வேண்டியவர்களாய். வைகும் = இருக்கும். தனியான = ஒப்பற்றவர்களான. தபோதனர்க்கு = ஞான தவ சீலர்களுக்கு. இங்கு எமராசன் விட்ட = இங்கு எம தர்ம ராசன் விட்டனுப்பிய. கடை ஏடு = வாழ்க்கை முடிவைக் குறிக்கும் மரணச் சீட்டு. வந்து என் செயுமே = வந்து இனி அவர்களை என்ன செய்யக் கூடும் ?

சுருக்க உரை

குமரனே சரணம் என்று தேவர்கள் அனைவரும் துதிக்கும் அமராவதியில் உள்ள ஞான தவசீலர்கள் கண்ட ஆறு முகப் பெருமானுக்கு உகந்தவர்களாக இருப்பவர்களுக்கு, எம ராசன் அனுப்பிய மரண ஓலை வந்து அவர்களை என்ன செய்யக் கூடும். (ஒன்றும் செய்ய முடியாது).

விளக்கக் குறிப்புகள்

அ. அமராவதியில் பெருமான் திருமுகம் ஆறும் கண்ட...
தேவசேனையை மணந்த பின் முருக வேள் பொன்னுலகுக்குச் சென்று பானு கோபனால் அழியப்பட்ட அவ்வுலகைப் புதுப்பித்து தேவர்களைக் குடியேற்றினார்.
(இமையவர் நாட்டினில் நிறைகுடி ஏற்றிய
எழுகரை நாட்டவர் தம்பிரானே) ---- திருப்புகழ் (விரகறநோக்).
ஆ. எமராசன் விட்ட கடையேடு......
(வருபவர்க ளோலைகொண்டு நமனுடைய தூதரென்று
மடி பிடியதாகி நின்று தொடர்போது)---- திருப்புகழ் (வருபவர்களோ).
இ. அண்டர் குழாம் துதிக்கும் அமராவதியில் பெருமான்.....
(மடங்கலந் தவிசினி உம்பர் வென்றியந் தனிவே லண்ணல் வீற்றிருந்தருளினானே) ---
கந்த புராணம் 5-3-37.

88.

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே.

பதம் பிரித்தல்

வணங்கி துதிக்க அறியாத மனிதருடன் இணங்கி
குணம் கெட்ட துட்டனை ஈடு ஏற்றுவாய் கொடியும் கழுகும்
பிணங்க துணங்கை அலகை கொண்டாட பிசிதர் தம் வாய்
நிணம் கக்க விக்ரம வேலாயுதம் தொட்ட நிர்மலனே.

பத உரை

கொடியும் = காகமும். கழுகும் = கழுகும். பிணங்க = (உணவுக்காக) மாறுபட்டுச் சண்டை செய்ய. அலகை துணங்கை கொண்டாட = பேய்கள் துணங்கைக் கூத்தைக் கொண்டாட. பிசிதர் தம் (இறைச்சியை உண்ணும்) அசுரர்களுடைய. வாய் நிணம் கக்க = வாய்கள் கொழுப்பைக் கக்கும்படி. விக்ரம = வலிமை வாய்ந்த. வேலாயுதம் தொட்ட = வேலைச் செலுத்திய. நிர்மலனே = பரிசுத்தமானவனே. வணங்கித் துதிக்க அறியா = உன்னை வணங்கித் துதிக்க அறியாத. மனிதருடன் இணங்கி= மனிதர்களோடு சேர்ந்து. குணம் கெட்ட துட்டனை = நற்குணம் இல்லாத துட்டனாகிய என்னை. ஈடேற்றுவாய் = நற் கதி அடைய அருள் செய்வாய்.

சுருக்க உரை
காகமும் கழுகும் ஒன்றோடு ஒன்று உணவுக்காகச் சண்டை செய்யவும், பேய்கள் துணங்கைக் கூத்து ஆடவும், அசுரர்கள் வாயினின்றும் கொழுப்பைக் கக்கவும், வலிமை பொருந்திய வேலைச் செலுத்திய பரிசுத்தமான வேலனே.
உன்னை வணங்கித் துதிக்க அறியாத மனிதர்களிடம் நல்லுறவு கொண்டு, நற்குணம் இல்லாத துட்டனாகிய என்னை நற்கதி அடைய அருள் செய்வாயாக.
விளக்கக் குறிப்புகள்
அ. வணங்கித் துதிக்க அறியாத.....
(அப்பன்--- செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
அறிவாலவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே) ---- மாணிக்கவாசகர் (திருவாசகம்) அச்சப்பதிகம் 8.
(.....உன்பாத கஞ்ச மலர்மீதே
உரவொடு புனைதர நினைதரும் அடியரொ
டொன்றாக என்று பெறுவேனோ)---- திருப்புகழ் (கரையறவுரு).

89.
பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே.
பதம் பிரித்தல்
பங்கேருகன் எனை பட்டோலையில் இட பண்டு தளை
தன் காலில் இட்டது அறிந்திலனோ தனி வேல் எடுத்து
பொங்கு ஓதம் வாய் விட பொன்னம் சிலம்பு புலம்ப வரும்
எங்கோன் அறியின் இனி நான்முகனுக்கு இரு விலங்கே.
பத உரை
பங்கேருகன் = (திருமாலின் உந்தித் தாமரையில் வாழ்கின்ற) பிரமன். எனை = என்னை. பட்டோலையில்= (தான் உயிர்களைப் பற்றி) குறிப்பு எழுதும் ஓலையில். இட = சேர்த்தது (என்ன தைரியம்). பண்டு = முன்பு ஒரு முறை. தளை = விலங்கை. தன் காலில் இட்டது = முருகவேள் தன் காலில் இட்டதை. அறிந்திலனோ = மறந்து விட்டானோ.
தனி வேல் எடுத்து = ஒப்பற்ற வேலைக் கையில் ஏந்தி. பொங்கு ஓதம் = அலைகள் பொங்கி எழும் கடல். வாய் விட = கதறவும் . பொன்னம் சிலம்பு = பொன் மயமான கிரௌஞ்சம். புலம்ப = அழுது ஒலி செய்ய. வரும் எங்கோன் = வருகின்ற எங்கள் தலைவனான முருகன். அறியின் = (இங்ஙனம் பிரமன் என்னைத் தன் ஓலையில் சேர்த்ததை) அறிந்தால். நான் முகனுக்கு இரு விலங்கே = பிரமனுடைய கைகளுக்கும் இரண்டு விலங்குகளை மாட்டி விடுவார்.
சுருக்க உரை
பிரமன் உயிர்களைப் பற்றிய குறிப்போலையில் என்னையும் சேர்த்தது என்ன தைரியம். முன்பு ஒருமுறை தன் காலுக்கு முருகன் விலங்கு இட்டதை அவன் மறந்து விட்டானா?
ஒப்பற்ற வேலை எடுத்து கடல் பொங்கி ஓலமிடக் கதறி அழ வருகின்ற என் தலைவனான முருகன் இதை அறிந்தால் பிரமன் கைகளுக்கும் விலங்குகளை மாட்டி விடுவார்.
விளக்கக் குறிப்புகள்
அ. நான்முகனுக்கு இரு விலங்கே.....
முன்பு முருகன் பிரமனுக்கு இட்ட விலங்கு காலில். தன்னைப பட்டோலையில் சேர்த்ததற்காக இப்போது கையிலும் விலங்கை முருகன் இடப் போகிறார். இரு என்பதைப் பெரிய எனப் பொருள் கொண்டு பெரிய விலங்கு எனவும் கொள்ளலாம்.
ஆ. எனைப் பட்டோலையில் இட......

(பிறவிப் பெருக் கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்)---- திருக்குறள் 10..

90.
மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோ டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.
பதம் பிரித்தல்
மாலோன் மருகனை மன்று ஆடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய் ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல் பொழில் செங்கோடனை சென்று கண்டு தொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே.
பத உரை
மாலோன் மருகனை= திருமாலின் மருகனை. மன்று ஆடி = திருச்சபையில் நிருத்தம் செய்யும் சிவ பெருமானின். மைந்தனை = புதல்வனை. வானவர்க்கு மேலான தேவனை = விண்ணவர்களுக்கு மேலான தேவனை. மெய்ஞ் ஞான தெய்வத்தை = மெய்ஞ்ஞான சொரூபியாகிய தெய்வத்தை. மேதினியில் = இப் பூமியில்.
சேல் ஆர் = வேல் மீன்கள் நிறைந்த. வயல் பொழில் = வயல்களும் சோலைகளும் சூழ்ந்த. செங்கோடனை = திருச்செங்கோட்டு வேலனை. சென்று கண்டு தொழ = நான் போய்த் தரிசித்துத் தொழுதற்கு. நாலாயிரம் கண் = நாலாயிரம் கண்களை. அந்த நான் முகன் படைத்திலனே = அந்தப் பிரமன் எனக்குப் படைக்கவில்லையே. (இரண்டு கண்கள் போதாது என்றபடி).
சுருக்க உரை
திருமாலின் மருகனை, மன்றத்தில் நடமிடும் சிவபெருமானின் மைந்தனை, தேவர்களுக்கு மேலானவனை, வயல்கள் சூழ்ந்த திருச்செங்கோட்டு வேலனை நான் சென்று தரிசிப்பதற்கு நாலாயிரம் கண்களை எனக்குப் பிரமன் படைக்க வில்லையே. (அந்தக் காட்சியை நான் காண இரண்டு கண்கள் போதாது).
விளக்கக் குறிப்புகள்
அ. செங்கோடனைச் சென்று கண்டு தொழ.....
(.... சென்றே யிடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல்கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்ச மொனாறாய் வளர்ந்த
செங்கோடமர்ந்த பெருமாளே)---- திருப்புகழ் (அன்பாகவந்து).
ஆ. நாலாயிரம் கண் படைத்திலனே.....
(என்றும் இளையாய அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை) ---- திருமுருகாற்றுப் படை (குன்றமெரிந்தாய்) --- வெண்பா.
இ. திருச்செங்கோட்டைப் பற்றிய மற்ற அலங்காரப் பாடல்கள். வரிசை எண்கள் - 23,26,70,72,91,97,104.

91.
கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.
பதம் பிரித்தல்
கரு மான் மருகனை செம்மான் மகளை களவு கொண்டு
வரும் மா குலவனை சேவல் கை கோளனை வானம் உய்ய

பொரும் மாவினை செற்ற போர் வேலனை கன்னி பூகமுடன்
தரு மா மருவு செங்கோடனை வாழ்த்துகை சால நன்றே.

பத உரை

கரு மான் மருகனை = கரிய திருமாலின் மருகனை. செம் மான் மகளை = செவ்விய மானாக வந்த இலக்குமியின் மகளாகிய வள்ளியை. களவு கொண்டு வரும் = களவாடி வந்த. மா குலவனை = சிறந்த குலத்தவனை. சேவல் கை கோளனை = சேவலைக் கையில் கொடியாகக் கொண்டவனை. வானம் = தேவர்கள். உய்ய = பிழைக்க. பொரும் மாவினை = போர் செய்த மாமரமாக வந்த சூரனை. செற்ற = அழித்த. போர் வேலனை = போருக்கு உற்ற வேலாயுதனை. கன்னிப் பூகமுடன் = இளங் கமுக மரங்களுடன். தரு மா = மாமரங்கள். மருவு = பொருந்தி விளங்கும். செங்கோடனை = திருச்செங்கோடனை. வாழ்த்துகை = வாழ்த்தித் துதித்தல். சால நன்றே = மிக நன்றான பணியாகும்.

சுருக்க உரை

திருமாலின் மருகனை, இலக்குமியின் மகளான வள்ளியைக் களவு செய்து மணந்தவனை, சேவலைக் கையில் கொடியாகக் கொண்டவனை, தேவர்கள் உய்யும் பொருட்டு மாமரமாக வந்த சூரனை அழித்த வேலாயுதனை, கமுகு, மா ஆகிய மரங்கள் நிறைந்த திருச்செங்கோடனை வாழ்த்தித் துதித்தல் மிக நல்ல பணியாகும்.

விளக்கக் குறிப்புகள்

அ. இந்தப் பாடலில் சாதிகளைக் குறிக்கும் சொற்களை அமைத்துப் பாடியது கவனிக்கத் தக்கது.
சாதிகளைக் குறிக்கும் கருமான், செம்மான் (சக்கிலி), மாகுலவன் (வேடன்), கைக்கோளன், வேலன் (வெறியாட்டாளன்) ஆகிய பதங்கள் இதனை உணர்த்தும்.
ஆ. கைக் கோளன்.....
(சேவலங்கொடியான பைங்கர) --- திருப்புகழ்(மூலமந்திர)
(செஞ்சேவற் செங்கையுடைய சண்முக தேவே) --- திருப்புகழ் (கொண்டாடிகொஞ்சு).
(பசுந்தழைத் தோகையுஞ் செஞ்சிறைச் சேவலுந்
தாங்கியு மலர்க்கரந் தங்கியு நிலைத்த
பேரொளி மேனியன்) = கல்லாடம் 75.
இ. வருமா குலவன்.....
(குலமிலாதவனைக் குலவனே என்றும் ...) ---- சுந்தரர் தேவாரத் திருமுறை 7-34-6.

92.

தொண்டர்கண் டண்டி மொண் டுண்டிருக் குஞ்சுத்த ஞானமெனுந்
தண்டையம் புண்டரி கந்தரு வாய்சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டி மிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காவலனே.

பதம் பிரித்தல்

தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டு இருக்கும் சுத்த ஞானம் எனும்
தண்டை அம் புண்டரிகம் தருவாய் சண்ட தண்டம் வெம் சூர்
மண்டலம் கொண்டு பண்டு அண்டர் அண்டம் கொண்டு மண்டி மிண்ட
கண்டு உருண்டு அண்டர் விண்டு ஓடாமல் வேல் தொட்ட காவலனே.

பத உரை

சண்ட = கொடுமையும் கோபமும் கொண்டவனும். தண்டம் = படையை உடையவனுமாகிய. வெம் சூர் = கொடிய சூரன். மண்டலம் கொண்டு = பூமியின் ஆட்சியை அடைந்து. பண்டு = முன்பு. அண்டம் கொண்டு = தேவர்களின் அண்டத்தின் ஆட்சியையும் கைப்பற்றி. மண்டி மிண்ட கண்டு = உக்கிரத்துடன் நெருங்குதலைக் கண்டு.. உருண்டு = போரில் அழிந்து புரண்டு. அண்டர் =

தேவர்கள். விண்டு ஓடாமல் = சிதறுண்டு ஓடாமல். வேல் தொட்ட காவலனே = வேலாயுதத்தைச் செலுத்திய அரசே.
தொண்டர் = அடியார்கள். கண்டு = உன்னைத் தரிசித்து. அண்டி = உன்னை நெருங்கி. மொண்டு = உன் திருவருள் அமுதை வாரிக் கொண்டு. உண்டு = பருகி. இருக்கும் = அனுபவிக்கும். சுத்த ஞானம் எனும் = பரிசுத்தமான ஞான நிலையதாகும். தண்டை அம் புண்டரிகம் - தண்டை சூழ்ந்த தாமரையன்ன திருவடியை. தருவாய் = தந்து அருளுக.

சுருக்க உரை

கொடியவனும் படையை உடையவனும் ஆகிய சூரன் பூமியின் ஆட்சியைப் பற்றி, பின் தேவர்களின் அண்டத்தையும் கைப்பற்றி நெருங்குவதைக் கண்டு, தேவர்கள் சிதறுண்டு ஓடாமல், வேலாயுதத்தைச் செலுத்திய அரசே.
அடியார்கள் உன்னைத் தரிசித்து, உன் திருவருள் அமுதத்தை வாரி உண்டு அனுபவிக்கும் ஞான நிலையாகிய உன் தாமரைத் திருவடியை எனக்குத் தந்து அருளுக.

விளக்கக் குறிப்புகள்

அ. சண்ட தண்ட வெம் சூர்....
(....சண்டைக் கருநம னண்டிக் கொளுகயி
றெடுத்து விசைகொடு பிடித்து வுயிர்தனை
பதைப்ப தனிவழி யடித்து கொடுசெல--- திருப்புகழ் (விந்துப்புளகித).
ஆ. அண்டி மொண்டு உண்டு....
(அருளாரமுதை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்)--- மாணிக்கவாசகர் (திருவாசகம்)- அடைக்கலப் பத்து 10.
இ. தண்டை அம் புண்டரிகம்.......
இப்பாடல் (திருவடியின் பெருமையை விளக்குகின்றது. மெல்லோசை நிறைந்த சந்தமும், வழி எதுகை அழகும் கவனிக்கத் தக்கன.
(திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில்
திருவடியே செல்கதி யதுசெப்பில்
திருவடியே தஞ்சமுள் தெளிவார்க்கே)---- திருமந்திரம் 182.

93.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்டதுவே.

பதம் பிரித்தல்

மண் கமழும் உந்தி திருமால் வலம்புரி ஓசை அந்த
விண் கமழ் சோலையும் வாவியும் கேட்டது வேல் எடுத்து
திண் கிரி சிந்த விளையாடும் பிள்ளை திரு அரையில்
கிண் கிணி ஓசை பதினாலு உலகமும் கேட்டதுவே.

பத உரை

மண் கமழும் = மண்ணின் வாசனை வீசும். உந்தித் திருமால் = வயிற்றை உடைய திருமாலின். வலம்புரி ஓசை = வலம்புரி சங்கான பாஞ்ச சன்னியத்தின் ஓசை. அந்த விண் கமழ் சோலையும் = அந்த விண்ணுலகத்தில் உள்ள மணம் வீசும் பொழிலிலும். வாவியும் = நீர் நிலையிலும். கேட்டது = கேட்டது.
வேல் எடுத்து = வேலாயுதத்தை ஏந்தி. திண் கிரி = வலிய மலைகள். சிந்த விளையாடும் பிள்ளை = சிதறும்படி விளையாடிய பிள்ளையாகிய முருகனின். திரு அரையில் = இடுப்பில் கட்டியுள்ள. கிண்கிணி ஓசை = கிண்கிணியின் ஒலி. பதினாவலு உலகமும் கேட்டதுவே = பதினான்கு உலகங்களிலும் கேட்டது.

சுருக்க உரை

மண்ணின் நறு மணம் வீசும் வயிற்றை உடைய திருமாலின் பாஞ்ச சன்னியத்தின் ஓசை விண்ணுலகத்தில் உள்ள பொழில்களிலும் நீர் நிலைகளிலும் மட்டுமே கேட்டது.
வேலை ஏந்தி வலிய மலைகள் சிதறும்படி விளையாடிய சிறு பிள்ளையாகிய முருகனின் இடுப்பில் கட்டிய கிண்கிணியின் ஒலி பதினான்கு உலகங்களிலும் கேட்டது.

விளக்கக் குறிப்புகள்

அ. மண் கமழும் உந்தி....
மண் உண்ட வாயர் ஆதலால், மண் கமழும் உந்தித் திருமால் எனப்பட்டது.
(செகத்தைய கட்டிடு நெடியவர் கடையவள்
அறத்தைவ ளர்த்திடு பரசிவை குலவதி
திறத்தமி ழைத்தரு பழையவ ளருளிய சிறியோனே)) --- திருப்புகழ் (முகத்தைமினு).
(படிக்க டத்தையும் வயிறடை நெடியவர் மருகோனே) ---- திருப்புகழ் (தொடத்துள).
ஆ. வலம் புரி ஓசை .....
(இப்பியா யிரமே சூழ்ந்த திடம் புரி யென்று கூறம்
ஒப்பில் சங்காயிரஞ் சூழுறு வலம் புரி யென் றோதும்
அப்படி அதுவுஞ் சூழ்ந்த சலஞ்சலமாகும்)---- சூடாமணி 3 - 73.
(புனிதசங் கத்துக் கைத்தல நிர்த்தன்
பழையசந் தத்தைப் பெற்ற மட்பெண்
புகலுகொண் டற்குச் சித்தி யளிக்கு பெருமாளே)---- திருப்புகழ் (செறிதரும்).
(........குமாரனுடைமணி சேர்
திருவரைக் கிண்கிணி யோசை
படத்திடுக் கிட்டரக்கர்
வெருவர.....) ---- கந்தர் அலங்காரம் 13.

94.
தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லை நல்ல
வெள்ளிய நித்தல வித்தார மூரலை வேட்டநெஞ்சே.

பதம் பிரித்தல்

தெள்ளிய ஏனலில் கிள்ளையை கள்ள சிறுமி எனும்
வள்ளியை வேட்டவன் தாள் வேட்டிலை சிறு வள்ளை தள்ளி
துள்ளிய கெண்டையை தொண்டையை தோதக சொல்லை நல்ல
வெள்ளிய நித்தல வித்தார மூரலை வேட்ட நெஞ்சே.

பத உரை

சிறு வள்ளை = சிறிய வள்ளைக் கொடி போன்ற காதை அணுகி. தள்ளித் துள்ளிய = தள்ளித் துள்ளுகின்ற. கெண்டையை = கெண்டை மீன் போன்ற கண்ணையும். தொண்டையை = கொவ்வைக்கனி போன்ற வாயிதழையும். தோதகச் சொல்லி = வஞ்சம் நிறைந்த பேச்சையும். நல்ல வெள்ளிய = நல்ல வெண்ணிறம் விளங்கும். நித்தல = முத்துப் போன்ற. வித்தார = நீடிய. மூரலை = புன் சிரிப்புடன் கூடிய பற்களையும் உள்ள மாதர்களை. வேட்ட = விரும்பி நிற்கும். நெஞ்சே = மனமே. தெள்ளிய ஏனலில் = தெளிந்து சீரான தினைக் கொல்லையில். கிள்ளையை = கிளி போன்றவளும். கள்ளச் சிறுமி எனும் வள்ளியை = களவுப் புணர்ச்சிக்கு உட்பட்டவளும் ஆகிய வள்ளியை. வேட்டவன் = விரும்பியவனான முருகனின். தாள் வேட்டிலை = திருவடிகளை விரும்பவில்லை.

சுருக்க உரை

கெண்டை மீனைப் போன்ற கண்ணும், கொவ்வைக் கனி போன்று சிவந்த வாயிதழும், வஞ்சகம் நிறைந்த பேச்சும், முத்து போன்ற பற்களும் உடைய மாதர்களை விரும்பி நிற்கும் மனமே.
தினைப் புனத்தைக் காக்கும் வள்ளியை விரும்பும் முருகவேளின் திருவடிகளை விரும்ப வில்லையே. இது என்ன விந்தை.

விளக்கக் குறிப்புகள்

அ. தோதகம் = வஞ்சகம்.
(தோதகவித்தை படித்து நடிப்பவர் உறவாமோ) --- திருப்புகழ் (கோமளவெற்பினை).
ஆ. கள்ளச் சிறுமி.....
வள்ளி நாயகி முருகன் உள்ளத்தையே கவர்ந்தார் ஆதலின், நெஞ்சே, நீயும் தன்னை இழந்த நிலையில் இருந்தால் உன்னை நாடி வருவான் என்று பொருள்படும்.

95.
யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குங்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

பதம் பிரித்தல்

யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டால் அன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம் தொல்லை பெரு நிலம் சூகரமாய்
கீன்றான் மருகன் முருகன் க்ருபாகரன் கேள்வியினால்
சான்று ஆரும் அற்ற தனி வெளிக்கே வந்து சந்திப்பதே.

பத உரை

யான் தான் எனும் சொல் இரண்டும் = யான் தான் என்ற இரண்டு சொற்களால் குறிக்கப்படும் துவைத நிலை. கெட்டால் அன்றி = கெட்டு அத்துவித நிலை கிடைத்தால் அன்றி. சத்தியம் = உண்மைப் பொருள். யாவர்க்கும் = எவர்க்கும். தோன்றாது = கிட்டாது. (அது எப்போது கிட்டும் என்றால்).
தொல்லை = பழமையான. பெரு நிலம் = பெரிய பூமியை. சூகரமாய் = பன்றி உருவம் எடுத்து. கீன்றான் = தோண்டிச் சென்றவனாகிய திருமாலின். மருகன் = மருகனும். முருகனும் = முருகன் என்ற பெயர் உள்ளவனும். க்ரபாகரன் = கிருபாகர மூர்த்தியும் ஆன கந்தக் கடவுளின். கேள்வியினால் = உபதேசம் கேட்டதனால். சான்று ஆரும் அற்ற = (அந்த சத்தியமான உண்மைப் பொருள்) சாட்சியாக வேறு ஒரு பொருள் இல்லாத. தனி வெளிக்கே = தனியாக வெட்ட வெளியினில். வந்து சந்திப்பதே = வந்து கூடுவதாகும்.

சுருக்க உரை

யான் தான் என்ற இரண்டு சொற்களால் குறிக்கப்படும் துவைத நிலை கெட்டு, அத்துவித நிலை கிடைத்தாலன்றி உண்மைப் பொருள் எவருக்கும் கிட்டாது. பழமையான பெரிய பூமியைப் பன்றி உருவம் எடுத்துத் தோண்டிச் சென்ற திருமாலின் மருகனும், முருகன் என்ற பெயர் கொண்டவனும் ஆகிய கந்தக் கடவுளின் உபதேசத்தைக் கேட்டால், அந்த சத்தியமான மெய்ப்பொருள், வேறு ஒரு சாட்சியும் இல்லாத வெட்ட வெளியில் வந்து கூடுவதாகும்.

விளக்கக் குறிப்புகள்

அ. யான் தான் எனுஞ்சொல் இரண்டும்....
யான் (நான்), தான் (பதி) துவைத நிலையைக் குறிப்பதாகக் கொண்டால் (நீவே றெனாதிருக்க நான்வே றெனாதிருக்க)--- (திருப்புகழ் நாவேறுபாம)) என்னும் அத்துவைத உண்மை விளங்கும். இந்தத் திருப்புகழ்ப் பாடலில் நீ, நான் எனும் சொற்களைக் கந்தர் அலங்காரப் பாடல் யான், தான் எனும் சொற்களால் குறிப்பிடுகின்றது.
மேலும் தத்வம் அஸி எனும் வேத வாக்கியமும் இதைக் குறிக்கின்றது. தத் = அது. த்வம்= நீ. அஸி = ஆகின்றாய். அது நீயாகின்றாய் (யான், தான் எனும் வேறு பாடற்ற

நிலை). இதுவே பிரம்மத்தை (சிவத்தை) எங்கும், அனைத்துப் பொருளிலும் காணும் நிலை. அகம் ப்ரஹ்மாஸ்மி என்னும் உபநிடத வாக்கியமும் காண்க.
யான் (நான்) என்கின்ற அகங்காரம், தான் (எனது) என்கின்ற மமகாரம் (ஆணவம்) என்னும் பொருள் கொண்டால் சீவபோதம் முனைந்து நிற்றல் அழிதல் வேண்டும் எனப் பொருள் படும். அதாவது, சீவபோதம் முனைந்து நிற்கையில் சிவபோதம் மறையும். சிவபோதம் முனைந்து நிற்கையில் சீவபோதம் ஒழியும்.
(யானாகிய என்னை விழுங்கி வெறுந் தானாய் நிலைநின்றது தற்பரமே)---- கந்தர் அனுபுதி 28.
(யானென தென்னுஞ் செறுக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்)---- திருக்குறள் 346.
(யான்தான் எனலறவே இன்பநிட்டை என்றருணைக்
கோன்தான் உரைத்த மொழி கொள்ளாயோ)---- தாயுமானவர் (உடல் பொய்) 65.
(எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்என்
இதயம் ஒடுங்கவில்லை,
யான்எனும் அகந்கைதான் எள்அளவும் மாறவிலை,
யாதினும் அபிமானம்என்
சித்தமிசை குடிகொண்டது, ஈகையொடு இரக்கம்என்
சென்மத்தும் நான் அறிகிலேன்,
சீலமொடு தவவிரதம் ஒருகனவில் ஆயினும்
தரிசனம் கண்டுஅறியேன்,
பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிலேன், பிறர்கேட்கவே
போதிப்பது அல்லாது சும்மா இருந்துஅருள்
பொருந்திடாப் பேதைநானே,
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை உண்டோசொலாய் ?
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி
ஆநந்தம் ஆனபரமே)----- தாயுமானவர் (ஆனந்தமான பரம்) 9.

96.
தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

பதம் பிரித்தல்

தடம் கொற்றம் வேள் மயிலே இடர் தீர தனி விடில் நீ
வடக்கில் கிரிக்கு அப்புறத்து நின் தோகையில் வட்டம் இட்டு
கடற்கு அப்புறத்தும் கதிர்க்கு அப்புறத்தும் கனக சக்ர
திடர்க்கு அப்புறத்தும் திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே.

பத உரை

தடம் = பெருமையும். கொற்றம் = வெற்றியும் வாய்ந்த. வேள் = செவ்வேள் முருகனின். மயிலே = மயிலே.
இடர் தீர = உலகங்களின் துன்பங்கள் தீர. தனி விடில் = தனியாகப் போக ஏவி விடுத்தால். நீ வடக்கில் = நீ வடக்கே உள்ள. கிரிக்கு அப்புரத்து = மேரு மலைக்கு அப்புறத்திலும். நின் தோகையில் வட்டமிட்டு = உன்னுடைய கலாபத்தை வட்டமாக விரித்து. கடற்கு அப்புறுத்தும் = கடலுக்கு அப்பாலும். கதிர்க்கு = சூரிய சந்திரர்களுக்கு அப்பாலும். கனக சக்ர திடர்க்கு அப்புறத்தும் = பொன் மயமான சக்ரவாள கிரிக்கு அப்பாலும். திசைக்கு அப்புறத்தும் = திசைகளுக்கு அப்பாலும். திரிகுவையே = திரிந்து (உயிர்களைக் காத்தருள்வாய்).

சுருக்க உரை

வெற்றி வாய்ந்த முருகவேளின் மயிலே, உலக மக்களின் துன்பங்களைத் தீர்க்க உன்னைத் தனியாகப் போகவிட்டால், உன்னுடைய தேகையை விரித்து, வடக்கே உள்ள மேரு மலைக்கு அப்பாலும், கடலுக்கு அப்பாலும், எட்டு திசைகளுக்கு அப்பாலும் திரிந்து உயிர்களைக் காப்பாற்றுவாய்.

விளக்கக் குறிப்புகள்

அ. வேள் மயிலே.....

கந்தர் அலங்காரத்தில் உள்ள நூறு பாடல்களில் முருகனையே விளித்தோ, குறித்தோ பாடிய அருணகிரி நாதர் இந்த ஒரு பாடலில் மயிலை முன்னிலைப் படுத்தி விளித்துப் பாடியிருக்கின்றார். இதை மயில் அலங்காரப் பாடலாகக் கருதலாம்.

மயிலும் உயிர்களின் இடர்களைக் களையும். வேலும் மயிலும் துணை என்னும் மந்திரமும் இதனால் தான் பிறந்தது.

(வேலு மயிலுநி னைந்தவர் தந்துயர்
தீர அருள்தரு கந்த.....)--- திருப்புகழ் (வாளின்முனை).

97.

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

பதம் பிரித்தல்

சேலில் திகழ் வயல் செங்கோடை வெற்பன் செழும் கலபி
ஆலித்து அநந்தன் பணா முடி தாக்க அதிர்ந்து அதிர்ந்து
காலில் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியை
பாலிக்கும் மாயனும் சக்ராயுதமும் பணிலமுமே.

பத உரை

சேலில் = சேல் மீன்களின் கூட்டத் திரளால். திகழ் = விளங்குகின்ற. வயல் = வயல்களை உடைய. செங்கோடை வெற்பன் = திருச்செங்கோட்டு மலைக்கு அதிபனாகிய முருகவேளின். செம் = செழுமை வாய்ந்த. கலபி = மயில். ஆலித்து = பேரொலி செய்து. அநந்தன் = ஆதிசேடனது. பணாமுடி தாக்க = படங்களை உடைய முடிகளைத் தாக்கி மோதுவதால். அதிர்ந்து அதிர்ந்து = மிக்க அதிர்ச்சி உற்று. மாணிக்க ராசியும் = மாணிக்கக் கூட்டங்களும். காசினியை = பூமியை. பாலிக்கும் = பாதுகாக்கும். மாயனும் = திருமாலும். பணிலமுமே = சங்கும். காலில் = அந்த மயிலின் காலில். கிடப்பன = கீழ்க் கிடப்பனவாகும்.

சுருக்க உரை

சேல் மீன்கள் விளங்கும் வயல்கள் நிறைந்த திருச்செங்கோட்டு மலையின் தலைவனான முருகவேளின் மயில் பேரொலி செய்ய, ஆதிசேடனுடைய முடிகள் தாக்குண்டதால் சிதறிய மாணிக்க வகைகளும், திருமாலும் அவர் கையிலிருக்கும் சக்ராயுதமும், சங்கும் அந்த மயிலின் காலின் கீழ்க் கிடப்பனவாகும்.

விளக்கக் குறிப்புகள்

அ. கலபி ஆலித்து......

ஆலம் = மயிலின் குரல்.

(குயில்கூவக் கோலமயில் ஆல) ---- சுந்தரர் தேவாரத் திருமுறை 7-16-8.

(குயில் கூவ மயில் ஆலும் ஆரூரரை) --- திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறை 4-5-1.

ஆ. அநந்தன் = ஆதிசேடன்.

(பாரப்பணாமுடி அனந்தன், பதைபதைத்தே நடுங்க) --- மயில் விருத்தம் 7.

(.........ஆதிபக வன்துயில்அ நந்தன்மணிசேர்
ஆயிரம் இருந்தலைக ளாய்விரியப ணங்குருதி
யாகமுழு துங்குலைய வந்த றையுமே) --- மயில் வகுப்பு 3-4.

98.
கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே.

பதம் பிரித்தல்

கதி தனை ஒன்றையும் காண்கின்றிலேன் கந்த வேல் முருகா
நதி தனை அன்ன பொய் வாழ்வில் அன்பாய் நரம்பால் பொதிந்த
பொதிதனையும் கொண்டு திண்டாடுமாறு எனை போதவிட்ட
விதி தனை நொந்து நொந்து இங்கே என்றன் மனம் வேகின்றதே.

பத உரை

கதி தனை – நற்கதி பெறும் வழி. ஒன்றையும் காண்கின்றிலேன் = ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. கந்த வேல் முருகா = கந்தனே, வேல் முருகனே. நதி தனை அன்ன = காட்டாறு போன்ற. பொய் வாழ்வில் = நிலையற்ற இந்த வாழ்வில். அன்பாய் = ஆசைகள் கொண்டவனாய். நரம்பால் பொதிந்த = நரம்புகளால் கட்டப் பட்ட. பொதி தனை = சுமை மூட்டையாகிய இந்த உடலையும். கொண்டு = சுமந்து கொண்டு. திண்டாடுமாறு = திண்டாடும்படி. போதவிட்ட = என்னைப் பூமியில் போகும்டி வைத்த. விதி தனை = விதியை (நினைத்து). நொந்து நொந்து = எண்ணி ஏங்கி. இங்கே என்றன் மனம் வேகின்றதே = இங்கே என்னுடைய மனம் வெந்து கொதிக்கின்றது.

சுருக்க உரை

நான் உய்வதற்கு ஒரு நற்கதியையும் காண்கிலேன். கந்த வேல் முருகனே. காட்டாறு போல் நிலையற்ற இந்த வாழ்வில் பற்பல ஆசைகள் கொண்டவனாய், நரம்புகளால் கட்டப்பட்ட இந்த உடலைச் சுமந்து பூமியில் போய் திண்டாடும்படி என்னை விதித்திருக்கின்றாய். இதை நினைத்து, வருந்தி என் மனம் வெந்து கொதிக்கின்றது.

விளக்கக் குறிப்புகள்

அ. கந்த வேல் முருகா.....
(கதியாய் விதியாய் குருவாய் வருவாய்) ---- கந்தர் அனுபூதி 51.
வேல் ஞான சக்தியைக் குறிக்கும். ஆதலின் அடியேனுக்கு ஞானத்தை அருள வேண்டும்.
கந்தன் என்னும் சொல் சேர்க்கப்படுதல் என்று பொருள்படும். என்னை உன்னோடு சேர்த்துக் கொள் எனக் குறிப்பதாகும்.
ஆ. அன்பாய்......
பெண், மண், பொன் என்ற மூவாசைகளால் பீடிக்கப்பட்டவன்.

99.
காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

பதம் பிரித்தல்

காவி கமல கழலுடன் சேர்த்து எனை காத்தருள்வாய்
தூவி குல மயில் வாகனனே துணை ஏதும் இன்றி
தாவி படர கொழு கொம்பு இலாத தனி கொடி போல்
பாவி தனி மனம் தள்ளாடி வாடி பதைக்கின்றதே.

பத உரை

தூவி = இறகுகளை உடைய. குல = சிறந்த. மயில் வாகனனே = மயில் வாகனத்தை உடையவனே. துணை ஏதும் இன்றி = துணை ஒன்றும் இல்லாமல். தாவிப் படர = பற்றிப் படர்வதற்கு. கொழு கொம்பு இலாத = பிடிப்புக்கு ஒரு பற்றுக் கோடில்லாத. தனி கொடி போல் = தனியாய் நிற்கும் கொடி தவிப்பது போல். பாவி = பாவியாகிய என்னுடைய. தனி மனம் = திக்கற்ற மனம். தள்ளாடி = தள்ளாடி.. வாடி = மெலிந்து. பதைக்கின்றதே = பதைக்கின்றது.
காவி = (ஆதலால்) செந்நிறமுடைய. கமல கழலுடன் = தாமரை போன்ற உன் திருவடிகளில். சேர்த்து எனைக் காத்து அருள்வாய் = அடியேனைச் சேர்த்து காத்தருள்வாயாக.

சுருக்க உரை

இறகுகளை உடைய மயிலை வாகனமாகக் கொண்டவனே. ஒரு துணையும் இல்லாமல், தனிக் கொடி போல் பிடிப்பு இல்லாமல் தவிக்கும் என் மனம் தள்ளாடி வாடி பதைக்கின்றது. ஆதலால் என்னை உன் திருவடிகளில் சேர்த்து என்னைக் காத்தருள வேண்டுகின்றேன்.

விளக்கக் குறிப்புகள்

அ. தூவிக் குல மயில் வாகனனே......
(தூவி நற் பீலி மாமயி லூருஞ் சுப்பிரமணியன்) --- திருவிசைப்பா 7-3.
ஆ. தாவிப் படரக் கொழுகொம்பு இலாத.....
(கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன்) --- மாணிக்கவாசகர் (திருவாசகம்) 6-20.

100.

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா கிரௌஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

பதம் பிரித்தல்

இடுதலை சற்றும் கருதேனை போதம் இலேனை அன்பால்
கெடுதல் இலா தொண்டரில் கூட்டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலை சாதித்த வேலோன் பிறவி அற இச்சிறை
விடுதலை பட்டது பாச வினை விலங்கே விட்டது.

பத உரை

கிரௌஞ்ச வெற்பை = கிரௌஞ்ச மலையை. அடுதலைச் சாதித்த = அழித்தலைச் செய்து முடித்த. வேலோன் = வேற் கடவுள்.
இடுதலை = வறியோர்க்குச் சென்று ஈதலை. சற்றும் கருதேனை = கொஞ்சமும் கருத்தில் கொள்ளாதவனை. போதம் இலேனை = அறிவிலியாகிய என்னை.
அன்பால் = அன்பு கொண்டு. கெடுதல் இலாத் தொண்டரில் = நிலை கெட்டுப் போதல் இல்லாத நிலைத்த தன்மையரான அடியார்களுடன். கூட்டியவா = சேர்த்து வைத்தது என்ன ஆச்சரியம். (என்ன பாக்கியம்).
பிறவி அற = (அந்தப் பாக்கியத்தால்) என்னுடைய பிறவி என்பது அற்றுப் போக. இச் சிறை = என உடலாகிய இந்தச் சிறை. விடுதலைப் பட்டது = பிறவித் தளையினின்று விடுதலை அடைந்தது. பாச வினை விலங்கு = என்னைக் கட்டி பிடித்திருந்த வினை என்னும் விலங்கு. விட்டது = முறிந்து ஒழிந்தது.

சுருக்க உரை

கிரௌஞ்ச மலையை அழித்த வேற் கடவுள், வறியவர்களுக்கு ஈதலைக் கருதாதவனும், அறிவிலியும் ஆகிய என்னை, நிலைபெற்ற மனமுடைய அடியார்களுடன் சேர்த்து வைத்தது என்ன ஆச்சரியம் ?
அதன் பின் என்னுடைய பிறவித் தொல்லைகளிலிருந்து விடுதலை அடைந்தேன். என்னைக் கட்டிப் பிடித்திருந்த வினை என்னும் விலங்கும் முறிந்து ஒழிந்தது.

விளக்கக் குறிப்புகள்

அ. கந்தர் அலங்காரப் பாடல்கள் அடியார்கள் பெருமையுடன் முடிவடைகின்றது.
(......கதிர்வேல்
எறிந்தவன் தொண்டர்குழாம்
சாரில் கதியன்றி வேறிலை)---- கந்தர் அலங்கார்ம் 49.
(தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே)---- ஔவையார் தனிப் பாடல்.
(பெருமையால் தம்மை யொப்பர் பேணலால் எம்மைப்பெற்றார்
இருமையும் கடந்து நின்றார், இவரை நீயடைவாய்)--- பெரியபுராணம் (தடுத்தாட்)
196.
(அத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே) ---- மாணிக்கவாசகர் (திருவாசகம் - அதிசயப் பத்து) 9.

(கந்தர் அலங்காரம் முற்றும்)

நூற்பயன்

101.
சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே.
பதம் பிரித்தல்
சலம் காணும் வேந்தர் தமக்கு அஞ்சார் யமன் சண்டைக்கு அஞ்சார்
துலங்கா நரக குழி அணுகார் துட்ட நோய் அணுகார்
கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்த நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒரு கவி தான் கற்று அறிந்தவரே.
(சலம் = கோபம். துலங்கார் = விளக்கமில்லாத).
சுருக்க உரை
கந்தர் அலங்காரம் என்ற நூலில் உள்ள நூறு பாடல்களுள் ஒன்றையாவது கற்று அறிந்தவர்கள் கோப குணமுடைய அரசருக்கும், யமனுக்கும் பயப்படமாட்டர்கள். அவர்கள் நரகக் குழி என்பதை அணுகமாட்டார்கள். அவர்களை நோய்கள் அணுகா. அவர்கள் கரடி, புலி, யானை முதலிய விலங்குகளையும் கண்டு கலங்க மாட்டார்கள்.

102.
திருவடி யும்தண்டை யும்சிலம் பும்சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்கள் ஆறும் மலர்க் கண்களும்
குருவடி வாய்வந்தென் உள்ளம் குளிரக் குதிகொண்டவே.
பதம் பிரித்தல்
திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பு ஊடுருவ
பொரு வடிவேலும் கடம்பும் தடம் புயம் ஆறு இரண்டும்
மரு வடிவான வதனங்கள் ஆறும் மலர் கண்களும்
குரு வடிவாய் வந்து என் உள்ளம் குளிர குதி கொண்டவே.

(குதி கொண்டவே = நிலைத்துள்ளன.)
சுருக்க உரை

திருவடியும், அதில் உள்ள தண்டையும், சிலம்பும், கிரௌஞ்ச மலையைப் பிளந்த வடிவேலும், கடம்பும், ஆறிரு புயங்களும், நறு மணமே உருக் கொண்டது போன்ற ஆறு திருமுகங்களும், பன்னிரு கண்களும் கொண்ட உபதேச மூர்த்தியாய் வந்து காட்சி அளித்தவுடன் என் மனம் குளிர்ந்து நிலை பெற்று விட்டது. (இத்தகைய பேறு மிகப் பெரியதாகும்.)

103.
இராப்பகல் அற்ற இடம்காட்டி யான் இருந் தேதுதிக்க
குராப்புனை தண்டையந் தாள்அரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரி போற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.
பதம் பிரித்தல்
இரா பகல் அற்ற இடம் காட்டி யான் இருந்தே துதிக்க
குரா புனை தண்டை அம் தாள் அருளாய் கரி கூப்பிட்ட நாள்
கரா பட கொன்று அக்கரி போற்ற நின்ற கடவுள் மெச்சும்
பராக்ரம வேல நிருத சங்கார பயங்கரனே.
(கரா = முதலை. பட = அழிவுபட. அக்கரி = அந்த கஜேந்திரனாகிய யானை. நிருதர் = அசுரர். சங்கார = அழித்த).

சுருக்க உரை
முதலையைக் கொன்று கஜேந்திரன் போற்றும்படி நின்ற திருமால் மெச்சும் மருகனே. அசுரர்களை அழித்தவனே. இரவு பகல் இல்லாத இடத்தை எனக்குக் காட்டி அந்த நிலையில் இருந்தவாறே உன்னை நான் துதிக்க உனது குரா மலர் அணிந்த திருவடியைத் தந்து அருளுக.

104.
செங்கேழ் அடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமலர்க்
கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்னேவந் தெதிர்நிற்பனே.
பதம் பிரித்தல்
செங்கேழ் அடுத்த சின வடிவேலும் திரு முகமும்
பங்கே நிரைத்த நல் பன்னிரு தோளும் பதும மலர்
கொங்கே தரளம் சொரியும் செம் கோடை குமரன் என
எங்கே நினைப்பினும் அங்கே என் முன் வந்து எதிர் நிற்பனே.
(செங்கேழ் = சிவந்த நிறம். பது மலர் = தாமரை மலரின். கொங்கே = வாசனை. தரளம் = முத்துக்கள். பங்கே நிரைத்த = பக்கங்களில் வரிசையில் அமைந்த.)
சுருக்க உரை
தாமரை மலர்களின் மணத்தை முத்துக்கள் சொரிகின்ற திருச்சேங்கோட்டுக் குமரன் என்று நான் எந்த இடத்தில் நினைத்தாலும், அவ்விடத்திலேயே, சிவந்த கோபமும் கூர்மையும் உடையதான வேலாயுதமும், அழகிய முகமும், பன்னிரு தோள்களும் விளங்க என் முன் எதிரில் நின்று அருள் புரிவார்.

105.
ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழும் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே அமர சிகாமணியே.

பதம் பிரித்தல்
ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்து உன் அருள் பாதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றிலேன் வினை தீர்த்து அருளாய்
வாவி தட வயல் சூழும் திருத்தணி மா மலை வாழ்
சேவல் கொடி உடையானே அமர சிகாமணியே.
சுருக்க உரை
நீர்த் தடங்களும், பெரிய வயல்களும் சூழ்ந்த திருத்தணி மாமலையில் வாழ்கின்ற சேவற் கொடிப் பெருமாளே. தேவர்கள் சிகா மணியே. என் உயிருக்கு ஆபத்து வரும் என்று உணர்ந்து உன்னை நான் நினைக்கவில்லை. என்னுடைய வினைகளைத் தீர்த்து அருள வேண்டுகின்றேன்.

106.
கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாய்ஒரு கோடிமுத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடற் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயில் ஏறிய மாணிக்கமே.
பதம் பிரித்தல்
கொள்ளி தலையில் எறும்பு அது போல குலையும் என் தன்
உள்ள துயரை ஒழித்து அருளாய் ஒரு கோடி முத்தம்
தெள்ளி கொழிக்கும் கடல் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயில் ஏறிய மாணிக்கமே.

(குலையும் = நிறை கெடுதல்).
சுருக்க உரை
முத்துக்களைக் கோடிக்கணக்கில் கொழிக்கும் திருச் செந்தூரில் வீற்றிருக்கும் பராக்கிரமசாலியே. வள்ளியம்மைக்குக் கணவனாக வாய்த்தவனே. மயில் வாகனனே. இரு தலைக் கொள்ளியில் அகப்பட்ட எறும்பு போல் துடித்து அழுகின்ற என் மனத் துயரை ஒழித்தருளுக.

107.
சூலம் பிடித்தெம பாசம் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கொரு காலும்அஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கொரு மெய்த்துணையே.
பதம் பிரித்தல்
சூலம் பிடித்து எம பாசம் சுழற்றி தொடர்ந்து வரும்
காலன் தனக்கு ஒரு காலும் அஞ்சேன் கடல் மீது எழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன் அறு முகவன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கு ஒரு மெய் துணையே.

சுருக்க உரை
சூலத்தைக் கையில் ஏந்தி எம பாசக் கயிற்றைச் சுழற்றி என் உயிரைக் கொண்டு போக யமன் வரும்போதும் நான் அஞ்சமாட்டேன். ஏனெனில் கடலில் எழுந்த ஆலகால விடத்தை உண்ட சிவபெருமானின் குமாரனாகிய அறு முக வள்ளலின் வேலாயுதமும், திருக் கரங்களும் நமக்கு ஒப்பற்ற உண்மைத் துணையாக இருக்கின்றன என்பதால்.

(முற்றும்)

நூல் குறிப்புகள்

- முருகவேள் பன்னிரு திருமுறை - தொகுதி 4. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட். சென்னை 600 018. (1992).
- திருப்புகழ் - வானதி பதிப்பகம், சென்னை 600 017. (1986)
- கந்தர் அலங்காரம் - கச்சபேசுவரன், ச.ரா. முருகன் அருள் பதிப்பகம். சென்னை 600 063. (1980).
- தேவாரம் - தொகுதி 1 , 11. Institut Francais D'Indologie, Pondicherry (1984, 1985).
- திருமந்திரம் முவாயிரம் - திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 600 018. (1996).
- திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) - கங்கை புத்தக நிலையம், சென்னை 600 017. (1999).
- திருக்குறள் - நர்மதா பதிப்பகம், சென்னை 600 017, (1988).
- தாயுமானவர் பாடல்கள் - ச.மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600 108. (1994).